சுதேசமித்திரன்



விலை 4 அணா

3rd. Oct. 1948



தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

I-WW108-111 W. WOODWARD LTD LONDON. ENGLAND

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலே, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

உங்கள் எதிர்காலம்



பணமில்லைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக்கு ரூ 20. ஜாதகக குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்



ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1 ரூ. 7.

மஹா பில்வாதி லேகியம்
பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்
வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதிஸரஸூத்ரம், ஸ்ரீ தன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி
எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம. ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசிகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை, தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S.மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்

மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை

வெளிவந்து விட்டது!

வாசனை பாக்குத்தூள்
காலணாவுக்கு இரண்டு.

சென்னைக்கு
சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை,

தயாரிப்பவர்:

மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

கப ரோக நிவாரணி

இருமல், ஈளை இருமல், வரட்சி, இளைப்பு, சுவாசம் எரைப்பு, மூச்சடைப்பு, புகைச்சல் இருமல், சாதாரண இருமல், மார்ச்சளி, அஸ்தி ஜுரம் கபத்தில் ரத்தம் வருதல், தொண்டை ரணம், ஈரல் ரணம், குலை ரணம் இவைகள் போன்ற இன்னும் எந்தவிதமான தீராத கபரோக வியாதியையும் தீர்த்து கபக் கிருமிகளைக் கொன்று கபத்தை தண்ணீராய் கரைத்து இருமலை அறவே ஒழித்து நல்ல நித்திரையைக் கொடுக்கும் — இது ஓர் நிகரற்ற சஞ்சீவி. இதற்கு பத்தியம் கிடையாது—குழந்தைகளும் உபயோகப் படுத்தலாம். 1 அவுன்ஸ் புட்டி ரூ. 2. பாக்கிங் வி. பி. செலவு தனி. முன்பணமாக 50% அனுப்பவேண்டும்.

தயாரிப்பவர்கள் :

சதர்ன் இந்தியா மெடிகல் ஹவுஸ்,
மைலாப்பூர், : : மதராஸ்.

Sole Selling Agents:

என் ஸீ ஏஜன்ஸீஸ்,
2/36, Luz Church Road, MYLAPORE, MADRAS.

Consult: **Dr. V. ராஜரத்னம்,**

For Nervous Debility. Diabetes, T. B., etc., at the above address.

எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் — பாதம் எண்ணெய் — அம்லா ஹேர் ஆயில் — வாசனை தேங்காய் எண்ணை - கஸ்தூரி குங்குமப்பூ - கோரோஜனம் — ஊறுகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து—பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்—ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் — இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதரூஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
ஜி. டி. மதரூஸ்.

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. டிஷ பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனும்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு - P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜாகோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

S.A.H. TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னுடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்.

40–நாள் மருந்து ரூ. 3-12-0.

பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது.

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

மெண்டெக்ஸ் மாத்திரைகள்

ஸ்திரீகளுக்கு அடிக்கடி ஏற்படும் உபாதைகளுக்கு இன்றியமையாத ஔஷதம். தவருமல் உடனே குணமளிப்பது. ஒரு புட்டி விலை ரூ. 7/8. வி. பி. செலவு தனி. விவரங்களுக்கு எழுதவும்.

என்மார் மாத்திரைகள்

இளமையூட்டவல்ல இம்மாத்திரைகள் ரத்த சோகை, ஞாபக சக்திக் குறைவு, நரம்புத்தளர்ச்சி முதலியவற்றை நீக்கி, ஜீரண சக்தியை விருத்தி செய்யும். டாக்டர்களால் சிபார்சுசெய்யப்படுவது. ஒரு புட்டி விலை ரூ. 7/8. விவரங்களுக்கு எழுதவும்.

ஸ்டெர்ன் & கம்பெனி,
187, மவுண்ட்ரோட், மதராஸ்.



501 ஸோப்பால் வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA
(GOVT. REGD)

இது சித்த வசிகரண யந்திரம் இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர், நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை ரூ. 2. வெள்ளி ரூ. 3.
தங்கம் விலை ரூ. 10.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2—8—0. அதற்கு மேற்பட்டது. ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5.

வெளிநாடுகளுக்கு வி. பி., போஸ்டல் ஆர்டர் கிடையாது. மணியார்டர் தேவை. கடிதங்கள் ஆங்கிலத்தில்.

KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P.O. Katrisarai, (Gaya)



பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. அருணுசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.



சகல விதமான பட்டு & நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை
ராம்ராஜ்யா ஹால்
N. R. ராமசந்திர செட்டி & கோ, கடைவீதி... சேலம்

வாழிய செந்தமிழ்!
சுதேசமித்திரன்
வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ புரட்டாசிமீ 18௳ ★ 1948-௵ அக்டோபர்மீ 3௳ No. 36

மகாத்மா

அக்டோபர் 2-ந்தேதி பாரததேசத்தின் ஒப்பற்ற தினம். அருள் ஒளியைக்கொண்டு, அடிமை இருளை அகற்றி, பாரததேசந்தன்னை வாழ்வு பெறச் செய்த அவதார புருஷர் காந்திஜியின் ஜனனதினம் அது. சென்ற வருஷம் இதே அக்டோபர் 2-ந்தேதியை சுதந்திர புருஷர்களாக மட்டற்ற மகிழ்வோடு தனிப்பெரும் நன்னாளாகக் கொண்டாடினோம். தேச பிதா மகாத்மாஜி தம் ஆயுட்காலத்திலேயே, இந்தியாவின் அடிமைத்தளைகள் கண்முன் தெறித்துவிழுந்த அற்புதத்தைக் காணும் பாக்கியம் பெற்றோம். சென்ற ஆண்டில் இதே நாளில்தான் சத்திய நெறிபற்றி சாத்வீக முறையில் சுதந்திரம் தேடித்தந்த அத்தேவதூதரிடம் தங்களுக்குள்ள பக்தியையும் மரியாதையையும் எல்லை கடந்த குதூகலத்தோடு வெளியிட்டார்கள் ஜனங்கள்.

மகாத்மாஜியின் 79-வது துவங்கிய மூன்றுமாத காலத்துக்குள் அவரை இழக்கும் துர்பாக்கியம் பாரதத்துக்கு ஏற்பட்டது. உலக க்ஷேமத்துக்கு உயர்வான மார்க்கம் காட்டிய ஓர் லட்சிய ஜோதி மறைந்ததேயென கோடிக்கணக்கான உள்ளங்கள் குமுறி உருகின. பிரபஞ்சத்தையே அந்தகாரம் கவ்வியதுபோல மக்கள் திகைத்தனர். ஆனால் அவர் உபதேசங்களால் தூய்மைபெற்ற உள்ளங்களிலே அவரது ஜோதி இன்றும் ஒளிருகிறது; என்றும் ஒளிரும்.

மகாத்மாவின் அவதார விசேஷத்தால் நாமிருக்கும் நாடு நமதென்பதை உணர்ந்து, அதை அடைய வேண்டுமென்ற வேட்கை மக்களிடை ஏற்பட்டது. பயந்து பதுங்கியவர்களெல்லாரும் தியாக வீரர்களானார்கள். துன்பங்கள் நெருங்கிவந்தபோதும், சோர்ந்துபோகாமல் அன்பில் அனைத்தையும் வெல்ல முடியும் என்ற அவரது தர்மோபதேசத்தால் இந்தியாவிலேயே ஒரு புதிய சகாப்தம் துவங்கியது. இந்தியா சுதந்திரமடைந்த சொற்ப நாட்களுக்குள் ஆலகால விஷத்தைப்போல நாட்டில் வகுப்பு வெறி தலைவிரித்தாடக் கண்டோம். அவ்விஷத்தை மகாத்மா, பரவாமல் செய்த அற்புதத்துக்கு ஈடு இணை கிடையாது. மகாத்மாவின் ஹிதோபதேசத்தைப் பின்பற்றுவது கண்ணன் உரைத்த கீதையைக் கடைப்பிடித்து நடப்பதுபோல. இகவாழ்வில் அவர் தாம் சொன்னபடியே வாழ்ந்தும் காட்டினார். அவ் வாழ்வினால் ஏற்பட்ட பயனை மக்கள் சகல துறைகளிலும் அனுபவிக்கின்றனர்.



உலகத்தில் இன்னல்கள் மாய்ந்து நன்மை வந்தெய்துவதற்கு சத்தியம், அஹிம்ஸை இவை இரண்டும் எவ்வளவு முக்கியமானவையென்பதைத் திரும்பத் திரும்ப உபயோகித்தார் மகாத்மா. அவ்வுபதேச மணிமொழிகளை காந்திஜி வெளியிடும்போது எடுத்த பிரத்யேகமான படம்.

சுதந்திரவாழ்வு உண்மையில் சுகவாழ்வாக மாறுவதற்கு மகாத்மா காட்டியுள்ள நெறி மிக்க உன்னதமானது. நிர்மாண திட்டத்தில் அவருக்கிருந்த நம்பிக்கை அபாரம். முக்கியமாக, மதுவிலக்கு ஏற்பட்டு ஏழைகளின் பொருளாதார வாழ்வு மறுமலர்ச்சியுறவேண்டும் என்பது அவரது ஆசை. அந்த ஆசை நம் மாகாணத்தில் நிறைவேறிவிட்டது.

மகாத்மாவின் ஜன்ம தினமான அக்டோபர் 2-ந் தேதி முதல் சென்னை மாகாணம் முழுதும் மதுவிலக்கு அமுல். கள்ளால் சிதைந்தொழிந்த ஏழைக் குடும்பங்களுக்குக் கணக்கில்லை. எனவே இந்தப் பெருங் கேட்டைச் சமூகத்திலிருந்து களைந்தெறிந்து கள்ளரக்கனின் சவப்பெட்டிக்குக் கடைசியாக ஆணி அறைந்துவிட்டனர் சென்னை சர்க்கார். இத்திட்டம் பூர்ண வெற்றி பெறுவதற்கு மக்களின் ஆதரவு பூர்ணமாயிருக்குமென்று எதிர்பார்க்கலாம்.

வாழ்க மகாத்மா!

வாழ்க காந்தியம்!

★

★ காந்திஜியின் பொன்மொழிகள் ★

1.

லாகிரியும், கள்ளும் பைசாசத்தின் இரண்டு கைகள். இவற்றிற்கு அடிமைப்படுபவர்களை அக் கொடுங்கரங்கள் அடித்து வீழ்த்தி விடுகின்றன.

—'யங் இந்தியா,' ஏப்ரல் 12, 1926.

2.

திருடக் கூடாது என்று சட்டங்களைச் செய்வது திருடுபவர்கள் உரிமையில் குறுக்கிடுவதாகும் என்ற வாதம் எவ்வளவு தவறோ, அதே மாதிரிதான் மதுவிலக்குக் கொண்டு வருவது ஜனங்களின் உரிமையில் குறுக்கிடுவதாகும் என்று சொல்லும் வாதமும். திருடன் உலகத்திலுள்ள உடைமைகளை மட்டும் திருடுகிறான்; ஆனால் குடிகாரனோ தன்னுடையதுடன்மட்டுமின்றி பக்கத்திலிருப்பவரின் கௌரவத்தையும் கவராடி விடுகிறான்.

—'யங் இந்தியா,' ஜனவரி, 6. 1927

3.

உலகத்திலேயே பூர்ண மதுவிலக்கை வெற்றிகரமாக நடத்தக்கூடிய தேசம் இந்தியா. ஏனெனில் குடிப் பழக்கத்தை கண்யமானதென்றோ நாகரிகமானதென்றோ இந்நாட்டவர் கருதவில்லை. இப் பழக்கம் ஒரு குறிப்பிட்ட வகுப்பு ஜனங்களிடம் மட்டுமே நிலவியிருக்கிறது.

—'யங் இந்தியா,' ஜூன், 23, 1927.

4.

"குடிப்பவர்கள் விஷயத்தில் தாங்கள் ஏன் இரக்கமில்லாமல் இருக்கிறீர்கள்?" என்று ஓர் ஆங்கில மாணவன் கேட்டதற்கு காந்திஜி அளித்த பதில் வருமாறு:—

"ஏனென்றால் நான் இந்தக் கேட்டின் விளைவால் அவதிப்படுபவர்களிடம் இரக்கம் காட்டுவதுதான் காரணம்"

—'யங் இந்தியா,' நவம்பர். 12, 1931

வேலன்:-

1

கேட்டியாடி பொன்னியிந்தக்
கெவருமெண்டு பேச்சை ?—ஒரு
சட்டம்போட்டுக் கள்ளுக்கடையைச்
சாத்திட்டாங்களாமே !

2

காலை முதல் வேலை செஞ்ச
களைப்புத் தீத்து வைக்கும்—சினம்
மாலையிலே புட்டிக்கள்ளு !
மயிமை சொல்றேன் கேளு !

3

அலுப்பு சலுப்பு யில்லாமலே
அலைஞ்சு வர்ற சூர்யன்—அந்தித்
திலுப்பத்துலே தோப்புக்குள்ளே
திருடப் போறன் பாரு !

4

பட்டணத்துப் ‘பயாஸ்கோப்பு’ப்
பாட்டும் ஒரு பாட்டா ?—நான்
புட்டிக் கள்ளு போட்டப்பறம்
பொறுத்துக் கேளு பாட்டை !

5

‘சீப்பு’க்கார்லே குந்திக்கிட்டு
சீறிப் போற சிப்பாய்—அந்தப்
பாப்பு கள்ளுக்கடையிகிட்டே
பயந்து போறன் பாரு !

6

பாலக்கரை மூலைக் கடை
பாளாப்போன பின்னே—இந்த
வேலனுக்கு உசிரு என்ன
வேண்டிருக்கு சொல்லேன் !

பொன்னி:-

1

இதுக்குத்தானா இம்புட்டு நீ
இளகி யுருகிப் போறே ?—இனி
பதுக்கிவெக்கிற காசுபணம்
பவுனுபோலத் தங்கும் !

2

புளிச்ச கள்ளுப் பெருமையை நீ
புதிசு புதிசாச் சொன்னா—நான்
இளிச்சவாயா, கேட்டு அந்த
ஏளவு பேச்சை நம்ப ?

3

புத்தி தடுமாற வச்சுப்
புதரிலேயே தள்ளும்—உள்ளே
வத்திபோல உருக்கி ஒன்னை
வலுக் குறைச்சுக் கொல்லும் !

4

கள்ளுக்கடை ஒளிஞ்சு போனா
காசு பணம் பொங்கும்—இந்தப்
பள்ளுப் பறை குடிசையெல்லாம்
பங்களாவா மாறும் !

5

சின்னக்குட்டி கண்ணாலத்லே
சிலுக்குச் சட்டை போட்டா—என்
அண்ணன் மவன ஆசையோடே
அணைச்சுக்கிட்டுப் போவான் !

6

ஊட்டுச்சண்டை ஒளிஞ்சு போயி
ஊரு ஒலகம் செளிக்க—அந்தச்
சட்டம் போட்ட கெவருமெண்டு
சத்தியமா வாளும் !



1. வீழ்ந்தா னலறி மதுவரக்கன்!
   வெற்றிக கொம்புக ளூதிடுவோம்,
தாழ்ந்தா ரினிமேல் வாழ்ந்திடுவார்;
   தனத்தினுங் குணத்தினு மோங்கிடுவார்.

2. நல்ல கால மின்று முதல்
   நரர்களும் அமர வாழ்வுறவே;
கொல்லுங் குடிப்பேய்த் தொலைந்தது காண்!
   குடித்தன நாட்டினிற் செழித்தது காண்!

3. அந்திப் பொழுதிற் சேரிகளில்
   அலறுங் கூச்ச லினியில்லை;
சந்திகள், தெருக்க, ளூர்களிலே
   சண்டைக ளென்ப தினியில்லை.

4. திருட்டுகள் புரட்டுக ளினியில்லை;
   தெட்டிப் பறிப்பது மினியுண்டோ?
விரட்டியே யெளியரை மிரட்டி வந்தோர்
   வெட்கித் தலைகள் கவிழ்ந்திடவே

5. தேம்பித் திரிந்து யேங்கியுளம்,
   தெருக்களிற் சோற்றுக் கலைந்தெங்கும்,
சோம்பி வாழ்வோ ரினியில்லை;
   சூதுகள் வாதுக ளொழிந்தனகாண்!

6. காட்டுப் புள்ளின மின்புறல்போல்
   கணவன் மனைவி யொன்றுபட்டுக்
கூட்டுக் களியினில் மகிழ்ந்தனர்காண்!
   குழந்தைகளைக் கொஞ்சி யணைந்தனர்காண்!

7. உழவுந் தொழிலு மோங்குது காண்!
   உலகெலாம் வாணியம் பெருகிடவே;
இழையும்பல் லாடைகள் குவியுது காண்!
   எற்றிப் பிழைத்தோர் மறைந்தனர்காண்!

8. குடிசைகள் மாடங்கள் கூடங்களாய்
குவலயம் வியப்புற மாறுது காண்!
இடிசுவர் பாழ்மனைப் பட்டிகளும்,
இந்திர நகரங்க ளாகிடவே!

9. கட்டிடும் ஆடைக்குங் கஞ்சிக்கும்,
கலங்கிய யெளியோர் இன்பமுடன்
பட்டினி லாடைகள், நகை பலவும்,
பண்டங்கள் பலவகை வாங்கிடவே.

10. அழுகைக் கூக்குரல் ஒழிந்தது காண்!
அரிவையர் மதிமுகம் மலர்ந்தது காண்!
பழகும் இன்னிசைப் பாட்டுக்களும்,
பண்களுங் கூத்து மிகுந்தன காண்!

11. வம்புரை, வசைமொழி, யேச்சுகளும்,
வழவழப் பேச்சுக ளோய்ந்தனகாண்!
நம்பநஞ் சாத்திர வாதங்களும்,
நலங்கிளர் பேச்சுகள் முழங்கிடவே

12. மதுக்கடைப் பலகலைக் கழகங்களாய்,
மணமிகு நறுமலர்ச் சோலைகளாய்,
விதமிகுப் பன்னூல் மன்றங்களாய்,
விரைவினில் மாறுதென் விந்தையம்மா!

13. நாத்திக வகுப்பு வாதிகளும்,
நல்லறி வடைந்துநல் ஒழுக்கமுற,
ஆத்திகத் தெய்வ ஒளி மிகவே;
ஆலயம் எவருக்கும் பொதுவாக.

14. மங்கி யழிந்திட வேற்றுமைகள்,
மாறுசெய் சாதிப் பூசல்களும்,
பொங்கு மன்பின் விரிவினிலே
பூத்திடுஞ் சமத்துவ மோங்கிடவே.

15. துக்கமுந் தொல்லைகள், துன்பங்களும்,
தொலைந்திட, வறுமைகள் மாய்ந்திடவும்,
மக்கள் யாவரு மோர்நிகராய்
மன்னர்களா யென்றும் வாழ்ந்திடவே.

அக்டோபர் 2

ரா. சேஷகிரி ராவ்

முனியம்மா, முனியம்மா என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தாள் ஸ்ரீமதி சுலோசனா.

"ஏண்டி—அப்போ பிடித்து கூப்பிடுகிறேனே காதிலே விழவில்லையா என்ன?" என்றாள் அடுத்தபடியாக.

"பாத்திரமெல்லாம் தேச்சிக்கிட்டே இருந்தேன். இந்தப் பசங்கள் போடுகிற சத்தத்திலே நீங்க குரல் கொடுத்தது என் காதிலே விழல்லை. எதுக்காக அம்மா கூப்பிட்டீங்க?"

"நானும் ஐயாவும் மதுரைக்குப் போறோம் இந்த 12–மணி வண்டிக்கு. பசங்கள் பள்ளிக்கூடம் போகவேண்டுமானதினால் இங்கேயே இருக்கிறார்கள். ராத்திரியிலே அவாளுக்குத் துணையா படுத்துண்டு, வீட்டை ஜாக்கிரதையாய் பார்த்துக்கோ, அதுக்கு தான் நாலு நாழியாய் கத்தரேன்."

"எனக்கு இதுக்கு சொல்லவா வேணும்? கட்டாயம் சாக்கிரதையாய் பார்த்துக்கறேன். ஆமா.... ...மதுரைக்கு இத்தனை அவசரமாய் ஏன் போறீங்க......"

"அங்கே என் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று கடுதாசு வந்திருக்கிறது. போய் பார்த்து விட்டு நாலைந்து நாளிலே வந்துவிடுவோம்."

"ஒண்ணுக்கும் பயப்படாதீங்கம்மா......அந்த காளியாத்தா ஒரு குறைவும் வைக்கமாட்டாள். போய் சந்தோஷமாய் திரும்பி வாங்கள். வீட்டுக் கவலையே வேண்டாம்—நான் கவனிச்சுக்கிறேன்."

★ ★ ★ ★

"டே பத்து! டே நடராஜா! நாங்கள் போயிட்டு வரோம். சமையற்கார மாமியை படுத்தாமல் சமத்தாய் இருங்கோ. ராத்திரி முனி வந்து படுத்துப்பாள். சாக்கிரதையாய் இருங்கோ" என்று குழந்தைகளிடம் கூறிவிட்டு முனியம்மாளிடமும், "அடியே, வீட்டை சாக்கிரதையாய் பார்த்துக்கோ-பொறுப்பை உன்னிடம்தான் விட்டுவிட்டுப் போகிறேன். (அவளை அருகில் அழைத்து ரகசியமாக சமையற்காரி கை கொஞ்சம் பெரிசு, கவனம் வைத்துக்கொள்)" என்று திட்டம் செய்துவிட்டு வண்டி ஏறினாள்.

★ ★ ★ ★

ஸ்ரீமதி சுலோசனா கடலூரில் ஒரு முனிசிபல் பெண் பாடசாலையின் தலைமை உபாத்தியாயினி. இந்த ஊருக்கு வந்த பிறகுதான் அந்த கலெக்டர் ஆபீஸ் டைபிஸ்டையும் கல்யாணம் பண்ணிக்கொண்டாள். மிக்க தங்கமான குணமுடையவள். கடலூரில் அவளுக்கு நல்ல மதிப்பு. அவளுக்கு தன் குணத்திற்குத் தகுந்த கணவனும் தன் சுபாவத்துக்கு தகுந்த வேலைக்காரி முனியம்மாளும் கிடைத்ததால் இந்த உலகிலேயே தனக்குத் தேவை வேறு ஒன்றும் இல்லை என்ற திருப்தியுடன் இருந்தாள்.



"ஏன் நய்னா! தினம் ராவுலே பாட்டு பாடிகினே ஷோக்கா டான்ஸ் செய்வியே...ஏன் நேத்திலேருந்து ஒண்ணையும் காணோம்... கொஞ்சம் ஆடு நய்னா......"

முனியம்மாள் கடலூரிலுள்ள வேலைக்காரி கோஷ்டியில் பொறுக்கியெடுத்த தங்கம் என்றுசொல்லலாம். எஜமானி வீட்டைத் தன் வீடுமாதிரி பாதுகாத்து வருவாள். வேலைக்காரிகளிடம் பொதுவாய், சர்வ சகஜமாய் பழகும் சோம்பல் பொய், சூது, வாது முதலியன மருந்துக்கும் கிடைக்காது அவளிடம். தன்னுடைய வாழ்க்கையிலேயே அவள் இரண்டே வீடுகளில் தான் வேலை பார்த்திருக்கிறாள் என்றாள். ஸ்ரீமதி சுலோசனா இவளது குணத்தை அறிந்தே இவளிடம் எல்லா பொறுப்பையும் விட்டிருந்தாள். சுலோசனாவுக்காக பாங்கியில் பணம் கொண்டு போய் போடுவது—தட்டான் வீட்டுக்கு நகைகளை எடுத்துச் செல்வது முதலான பொறுப்புள்ள எல்லா வேலைகளும் இவள் மூலம் தான், அதனால் தன் வீட்டுக் கொல்லைப்புறத்திலேயே இவளுக்கு ஒரு குடிசை போட்டுத் தந்திருந்தாள் சுலோசனா—அவள் தன் குடிகார புருஷனுடன் அங்கு தான் வசித்து வந்தாள்,

முனியன் புருஷன் கடலூர் குடியன்களில் தலைமை ஸ்தானம் வகிப்பவன், கூலியாகக் கிடைக்கும் காசு பூராவையும் குடித்துக் குடித்து வியாதியை வரவழைத்துக்கொண்ட பல்லாயிரக்கணக்கானவர்களில் அவனும் ஒருவன்.

இவனுடைய ஹிம்சை தெரிந்திருந்தும், முனியம்மாளின் குணத்திற்க க அந்தக் குடிசையை விட்டுத் துரத்தாமல் இருந்தாள், சுலோசனு.

* * * *

வழக்கமாக சாயந்திரம் ரகளை பண்ணிக்கொண்டுவரும் அவள் புருஷன், இரவு மணி எட்டு ஆகியும் வராததால் ரொம்ப கவலையுடன் சாதம் வடித்துக்கொண்டிருந்தாள் முனி. சமைத்துக்கொண்டே ரோட்டுக்கும் குடிசைக்கும் பத்தி உலாத்திக் கொண்டிருந்தாள்.

"ஏ முனி ஆச்சி!" என்று யாரோ கூப்பிடும் சத்தத்தைக் கேட்டதும் பரபரப்புடன் குடிசைக்கு வெளியில் வந்தாள். ரோட்டு மின்சார விளக்கு, காற்றில் அலையும் காய்விளக்கு மாதிரி, அடித்துக் கொண்டிருந்தது. ஏதோ ஆபத்துதான் என்று நினைத்துக்கொண்டே வெளியே வந்து நின்ருள்.

"உங்க புருசன் அந்த டிஸ்டிரிச்டு போர்டு ஆபீஸ் பாலத்தண்டை விழுந்து கிடக்கிருன். ஓயாமெ இருமிக்கொண்டு இருக்கிருன். அவனைப் போய் தூக்கியா– அவனுலெ நடக்க முடியாது" என்று சொல்லி விட்டு நடந்தான் அடுத்த தெரு மாரி மகன்.

"ஐயோ–சிவனே" என்று சொல்லிக் கொண்டே கதவு கூட சாத்தாமல் ஓடினுள். நிமிடத்திற்குப்பத்து தரம் இருமிக் கொண்டு ஸ்மரணையின்றி படுத்துக் கிடந்த கணவனைப் பார்த்து வெலவிலத்து விட்டாள். பக்கத்திலிருந்த ரிக்ஷாவைக் கூப்பிட்டு அதில் ஏற்றிக் கொண்டுபோய் ஆஸபத்திரிக்கு அழைத்துச் சென்ருள். ஜில்லா ஆஸ்பத்திரியில் நல்ல வேளையாய் இடம் கிடைத்தது.

"அவனை இங்கேயே விட்டு விட்டு நீ நாளைக்கு பதினொரு மணிக்கு வா...அப்பொழுதுதான் டாக்டர் ஐயா வருவார்" என்று சொல்லிவிட்டாள் நர்ஸ்.

அங்கேயே இருக்கச் சொன்னலும் அவள்தான் இருக்கமாட்டாளே. எஜமானியம்மா வீட்டில் துணை அல்லவா படுத்துக் கொள்ளவேண்டும்!

நேரே வீட்டுக்கு வந்துசமைத்த சாதத்தை தூக்கி ஜலத்தில் போட்டுவிட்டு எஜமானியம்மா வீட்டில் வந்து படுத்துக்கொண்டு விட்டாள். தூக்கம் வந்தால் தானே? ஒரே கவலையும், பயமும். மறுநாள் விரைவில் வேலைகளை முடித்துக்கொண்டு 10-30 க்கு எல்லாம் ஆஸ்பத்திரிக்கு ஓடிவந்தாள். 11–மணிக்கு வரும் டாக்டர் 12–30க்கு வந்தார். அன்று முனியின் புருஷனை சோதனை செய்தார். வெளியில் வந்தவுடன் டாக்டர் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்தாள் முனி. எம் புருஷன் பிழைப்பாரா சாமி? எப்படியாவது காப்பாத்திபுடுங்க என்று கதறினுள். அந்த டாக்டருக்கு இதெல்லாம் சகஜம் தானே?

"வியாதி ரொம்ப முத்திப் போச்சு...2 ஊசி போட்டா சரியாய்விடும். ஆனல் அந்த மருந்து இந்த ஆஸ்பத்திரியிலே இல்லை. விலை ரூ 20 ஆகும். நாளைக்கு காலையிலே வாங்கிண்டுவா? போடறேன்" என்ருர்.

"ஐயாசாமி இந்த ஏழை ரூ. 0க்கு எங்கே போவேனுங்க?" என்று பல்லைக் காட்டினுள்.

"அதுக்கு நான் என்ன செய்யட்டும். பணம் தந்து மருந்து வாங்கி வந்தால் புருஷன் பிழைப்பான்—இல்லாவிட்டால் நான் ஒண்ணும் நிச்சயமாய் சொல்ல மாட்டேன்" என்று கூறிக்கொண்டே அடுத்த வார்டுக்கு நகர்ந்தார்.

"சரி" என்று வீட்டுக்கு வந்தாள் முனி. பணம் வீட்டில் என்ன காய்த்தா தொங்குகிறது.? அதற்குள் வேலை நேரம் வந்து விட்டது. வேலையை முடித்து விட்டு பிறகு கவனிப்போம் என்று பாத்திரம் தேய்க்க கிளம்பினுள்.

பணம் எங்கேயும் கிடைக்கல்லைன்னு என்ன பண்றது டாக்டரையா காலிலேயோ விழுந்து கேட்போமா? ஊசி போடாட்டா புருஷன் இறந்து விடுவானே தன் மாங்கல்யமும் குங்குமமும் போனபிறகு என்ன செய்வது? என்று சிந்தனைக் கடலில் தத்தளித்துக் கொண்டே ஒவ்வொரு பாத்திரமாய் தேய்த்துக் கொண்டிருந்தவள் கையில்

ஒரு பெரிய வெள்ளிக் கிண்ணம் வந்தது. அந்த வெள்ளிக் கிண்ணத்தின் மீது ஒரு சொட்டு கண்ணீர் சிந்தியது. அவள் எண்ண அலைகளுக்கு அப்பாத்திரம் ஒரு முற்றுப் புள்ளி வைத்தது.

இத்தனை பாத்திரங்களில் இந்த ஒரு வெள்ளிக் கிண்ணம் குறைவது எப்படித்தெரியப்போகிறது? எப்படியும் இது ரூ. 40- பெறும். இதைக் கொண்டு போய் அந்தச் சேட்டு கடையில் வைத்தால் ரூ 20 தருவான். அதை வாங்கி ஊசி போட்டுடலாம். நம் புருசனும் பொழைச்சுடுவான். எசமானியம்மாள் வரதுக்குள்ளே மூட்டி வச்சுடலாம். இது காணாவிட்டாலும் நம்மைத் திருடி என்று சொல்லமாட்டார்கள். அப்படித் தெரிஞ்சா தான் என்ன நம்ம கஷ்டத்தை சொல்லிண்டால் மனசு இறங்காது என்று நினைத்தபடியே கிண்ணத்தை புடவையின் தலைப்பால் துடைத்தாள். கைகள் நடுங்கின. மனம் பக் பக்கென்று அடித்துக்கொண்டது. ஊரார் யாவரும் முனியா? திருடினாளா? முனியா திருடிஎன்று கேட்பது போல் இருந்தது. எதிரில் நாக மரம் அவள் எழுந்திருக்கும்போது இடித்தது-திருடி என்று தலையில் அடிப்பது போலிருந்தது. அடுத்தகணம் டாக்டர் ஞாபகம்—தம் புருஷன் ஞாபகம் மனதை திடப்படுத்திக்கொண்டாள்.

ஊசி போட்டாயிற்று. புருஷன் பிழைத்து விட்டான். கொஞ்சம் கொஞ்சமாக சொஸ்தமடைந்து வருகிறான். கிண்ணத்தை மூட்டுவதற்குப் பணம்தான் கிடைக்கவில்லை. முகம் வெளுத்துக் கொண்டே வந்தது. நான்கு நாட்களில் உடம்பும் பாதியாய் இளைத்து விட்டாள். மனது சதா காலமும் திருட்டு முனி—திருட்டு முனி என்று இடித்துக் கொண்டே இருந்தது. ஆனால் கண் நிறைந்த கணவன் தன் கண்ணைத் திறந்து பார்த்தது ஒருபக்கம் ஆறுதலாய்த் தான் இருந்தது.

* * * *

இப்படியாக ஆறாம் நாள் சுலோசனா ஊரிலிருந்து வந்து சேர்ந்தாள். முனியம்மாளுக்கு வாயில் வார்த்தையே வரவில்லை. மௌனமாய் பத்து தேய்த்துக்கொண்டிருந்தாள். சுலோசனாவின் புத்திர ரத்தினங்கள் இரண்டும் முனியம்மாள் புருஷன் ஆஸ்பத்திரியில் இருப்பதைக் கூறின.



“ஏண்டி முனி” என்ற வழக்கமான குரல் காதில் விழுந்ததும் பாத்திரத்தை போட்டு விட்டு உள்ளே ஓடினாள். மனது அடித்துக்கொண்டேயிருந்தது. முகம் அஷ்டகோணலாய் ஆயிற்று.

“ஏண்டி என்னமோபோல இருக்கே...ஒன்னுக்கும் பயப்படாதே. பகவான் மேலே பாரத்தைப்போடு ஆமா...”

அதற்குள் முனியம்மா உண்மையை ஒப்புக்கொள்ள வாயெடுத்தாள். நா எழவில்லை

“ஆமாம். பணத்துக்கு என்ன பண்ணினே? ஊசி போட்டாங்களாமே? உன் காதுலேயும் மூக்கிலேயும் அவன் ஒண்ணும் உருப்படியாய் வைக்கவில்லை?”

முனியம்மாள் மிரள மிரள விழித்தாள். ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு “அம்மா, உங்களால் தான் எனக்கு மாங்கல்ய பிச்சை கிடைச்சுதுங்க. நான் வந்து...

“என்னடி. என்னாலேயா? நான் தான் ஊரில் இல்லையேடி. ஏன் இப்படி கை நடுங்குகிறது? கண்ணிலே ஜலம்!....சமாசாரம் என்ன?”

ஆஸ்பத்திரியிலே கொண்டு போய் போடும்போது என் புருஷனுக்கு ஸ்மரணையே இல்லை. ஊசி போட்டாதான் பொழைப்பார் என்று டாக்டர் ஐயா சொன்னார். ஊசி விலையும் ரூ 20 ஆகும் என்றார்...

“நீ என்ன பண்ணினே பணத்துக்கு?”

அதாம்மா, அன்னிக்குப் பத்து தேய்கிறபோது வெள்ளிப் பாத்திரம் போட்டாங்கள். என் மனது புருஷனுடைய உசிருக்காக மன்னாடிச்சு. அதை அடகு வைத்து பணம் வாங்கி, ஊசி போட்டேன். நீங்க வரதுக்குள்ளே மூட்டிடலாமென்று நினைச்சேன். பிறகு முடியல்லை. என்னை மன்னிப்பீங்களா அம்மா” என்று அழுது கொண்டே—காலில் விழுந்து இரண்டு கால்களையும் கெட்டியாய் பிடித்துக்கொண்டாள்.

“இந்தாடி முனி— எழுந்திரு— அட பைத்தியமே இதற்காகவா இப்படி அழுவார்கள். உனக்கு அந்த சமயத்தில் இப்படிச் செய்யணும்னு தோணித்தே நல்லவேளை. ஊசி போடாவிட்டால் என்ன ஆகியிருக்கும். பாவம்—உனக்கோ வேறே சொந்த மனுஷாள்

யாரும் கிடையாது. அந்த குடிகாரன் ஒருத்தன்தானே உனக்குத் துணை. குடிச்சு குடிச்சு உடம்பைக் கெடுத்துண்டான். இனிமே அவனுக்கு ஒண்ணும் பயமில்லையே.

முனியம்மாளுக்கு ஆச்சரியத்தால் கண்கள் அகல விரிந்தன.

ஒண்ணுமில்லிங்கம்மா—ஆனால்...........

என்னடி, ஆனல்?

உடம்புக்குப் பலம் வர இன்னும் ஒரு மாதம் ஆகுங்களாம். அதுவரை ஆஸ்பத்திரியிலேயே இருக்கணுமாம். சில மருந்து வாங்க இன்னும் ரூ. 50– செலவாகுங்களாம்.

இந்தாடி அசடே—நீ ஒண்ணுக்கும் பயப்படாதே. உனக்காக நான் செலவு செய்யறேன். ஆனல் உன் புருசன், இனிமேல் குடிக்கல்லேனு' சத்தியம் பண்ணணும்.

"நான் சொன்னக்கா கேட்பாரா அம்மா. நீங்களே வந்து சொல்லுங்களேன்"

"சரி. நான் நாளைக்குக் காலையிலே உன்னோடு ஆஸ்பத்திரிக்கு வருகிறேன்"

அன்று நடந்த சம்பவத்தை தன் கணவனிடம் சொன்னாள் முனியம்மாள்.

"ஏ முனி, நான் புத்தியில்லாமெ குடிக்கப் பழகிட்டேன். இனிமே சாமி சத்தியமா அதைக்கையாலெ கூடத் தொடமாட்டேன்" என்று சொல்லமுடியாமல் சொன்னன். முனியம்மாளின் சந்தோஷம் பன்மடங்கு அதிகமாயிற்று.

* * * * *

மறு நாட் காலை சுலோசன ஆஸ்பத்திரிக்கு வந்தாள். எசமானியம்மாளைக் கண்டதும் எழுந்திருக்க முயன்ருன். ஆனல் முடியவில்லை.

"ஏண்டா இப்படிக் குடித்துக் குடித்துதானே அவளுக்கு சுகமில்லாமல் உனக்கும் சுகமில்லாமல் ஆக்கிக்கொண்டே" என்று அன்புடனும் உரிமையுடனும் கடிந்துகொண்டாள் சுலோசன.

"அம்மா என்னை மன்னிச்சுபிடுங்க. நீங்க சொல்றது வாஸ்தவம்தானுங்க. என்னலெ ஒரு சுகமும் முனியம்மா அறியல்லிங்க. இனிமெ உண்மையாய் குடிக்கிறதை விட்டுடறேனுங்க"

"இவன் என்ன விடுவது? அக்டோபர் 2-ந்தேதியோடு இந்த மாகாணத்திலுள்ள கள்ளுக்கடைகள் பூராவும்தான் மூடிவிடுகிருர்களே. இவன் எங்கே குடிப்பது" என்று சொல்லிக்கொண்டே வாயில் மருந்தை ஊற்றினுள் துரைசானி.

இந்த அக்டோபர் இரண்டாம் தேதியிலிருந்து மதுவிலக்கு வந்துவிடுகிறதா? எனக்குத் தெரியாதே என்று ஆச்சரியமுற்ருள் சுலோசன.

ஆமாம் அம்மா இந்த வருடம் காந்தி ஜயந்தியிலிருந்து பூரண மது விலக்கு வந்துவிடுகிறதே. நீங்கள் என்ன இந்த உலகத்திலேயே இல்லையா என்று கொஞ்சம் மிடுக்காகவே கேட்டாள் நர்ஸ்.

'காந்தி மவராஜா பேரு எப்போதும் மறையாமெ இருக்கணும்!' என்று வாழ்த்தினுள் முனி.

"அப்பொழுது அக்டோபர் 3–ம் தேதியன்று இவனை வீட்டுக்கு அனுப்பினல்போதும், அதுக்கு என்ன செலவானலும் நான் தருகிறேன்" என்றுகூறி விடைபெற்றுக் கொண்டாள் சுலோசன.

முனி வழக்கப்படி பத்து தேய்ப்பதற்கு ஆரம்பித்து விட்டாள் மாலை நான்கு மணிக்கு. ஆனல் அவள் மனம் மட்டும் பின்வருமாறு எண்ணிக்கொண்டேயிருந்தது:—

'ஆகா எவ்வளவு இரக்கமான மனது நம்ம எஜமானியம்மாளுக்கு. நான் செய்த ஓர் அசட்டுத்தனமான காரியத்துக்கு அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் மேலும் எனக்கு உதவி செய்தாங்களே. ஆமா—நிறைஞ்ச குடம் எப்பொழுதும் ததும்பாது. இவங்களுக்கு என் தேகத்தைச் செருப்பாக்கிப் போட்டால்கூட போதாதே. கணவனை உயிருடன் கொடுத்த கண்கண்ட தெய்வமல்லவா —இன்னும் பதினைஞ்சு நாளிலே கள்ளுக்கடையெல்லாம் சாத்திப்புடராங்களாமே—நம்ம காந்தி மகாராஜாவினுல் தானே இந்த நல்ல காரியத்தைச் செய்யருங்க, இனிமேல் நம்ம கையிலேயும் காசு சேரும்..........

"ஏ முனி......! இதோ வந்தேம்மா........."



பாவம் மணி!

விந்தியா

நம் நாட்டுப் பெரியார் ஒருவர் சொல்லியிருக்கிறார்:—"இரண்டுங்கெட்டான்" என்பதற்குச் சரியான உவமை பதினாலு வயசுப் பையன்!" என்று.

ஆம், உண்மை: பதின் மூன்று வயதிலிருந்து, பதினாறு வயது வரை பிள்ளைகளின் போக்கே ஒரு விசித்திரமாயிருக்கும். பதினாலு, பதினைந்து பிராயத்திலே, அவர்களை 'இரண்டுங்கெட்டான் என்று சொல்வதைத் தவிர வேறு வர்ணனை ஏதும் சரிப்படாது.

சமர்த்து, சாது, என்று கொண்டாடப்பட்ட மணியே,—வயதுக் கோளாறினால், பொல்லாப்புக்கு இலக்கானானே! பெரியவர் கூற்றுக்குச் சான்று வேறு என்ன வேண்டும் ?

மணியின் வயது சரியாக ஈரேழு. ஈரேழு புவனங்களைப்போலவே, அவனும் விதவித நிலைகளில் இருக்கத்தொடங்கினான். மறையாத பிள்ளைத்தனம், ஊன்றாத வாலிபம், இரண்டும் லேசாக உறையாடிக் கொண்டிருந்தன அவனிடத்திலே. காற்றாடிபோல, வித விதமான நிலைகளிலே, பல பல விதமாக, துவளும், துள்ளும், துடிக்கும், அவன் உள்ளம். மணியிடம் குடிகொண்டிருந்த குழந்தைத்தனமும், பொறுப்பு உணர்ச்சியும் அவனைப் பலவிதமாக ஆட்டி வைத்தன.

வேலையாள் சரியாக வேலை செய்யாவிட்டால், அப்பா கோபித்தால் போதாதா ? மணிக்கும் கோபம் வரத் தொடங்கியது. வேலையாளைக் கடிந்து கொள்வான், வீருப்பு பேசி, அதட்டுவான்.

"உனக்கு ஏன் அந்த வம்பு, பொல்லாப்பு ?" என்று அப்பா கேட்டால், "எனக்கும் வேணும் தான் அக்கரை!" என்றே பதில் விடுப்பான்.

"சின்னவனோடு உனக்கென்னடா போட்டி! விட்டுத்தள்ளு! எந்த அலமாரியில் புத்தகத்தை வைத்துக்கொண்டால் என்ன ?" என்று அன்னையின் கேள்வி வந்தால், "அதென்ன அக்கிரமம்! எனக்குப்பொறுக்காது, வீட்டிலே சின்னவர்கள் அதிகாரம் பறந்தால்!" என்று மணியின் பதிலும் பறக்கும்.

மணியின் போக்கு, வீட்டிலே எல்லோருடைய கவனத்தையும் பிணைப்பதாயிருந்தது. பெரியவர்களோ, சின்னவர்களோ எல்லோருக்கும் இவனுடன் உறவு வேண்டியிருந்தது. இவனுக்கும் அவர்களுடன் இணைப்பு வேண்டியிருந்தது. நல்லதோ, பொல்லாதோ, எதற்கும் இவன் தொடர்பு இருந்தது. இவனால் இதமும், உபகாரமும் இல்லாமற் போகவில்லை. ஆனால் புதிதாக அவனிடம் காணப்பட்ட முரண்பாடுதான் புலப்பட்டது வெளிக்கு.

பிறந்தகத்திலும் புக்ககத்திலும் சரி நிகர்ப்பிரியம் கொண்டு, இரண்டு புறமும் சாயும் பெண்ணைப்போல், குழந்தைத் தனமும் பெருதனமும் ஒண்டும் கிழப்பிராயத்தானைப்போல, மணியும் அல்லற்பட்டான், பிறருக்கும் அல்லற் கொடுத்து வந்தான்.

இந்த நிலையில், இன்னொரு மாறுதல் நிகழ்ந்தது. இயற்கையாகப் படிப்பிலே மணி சூடிக்கை. மேதாவியுமல்ல, மந்தியுமல்ல அவன்: ஆதலால், சிறந்த வெற்றியோ, படு தோல்வியோ, படிப்பு விஷயத்திலே அறிந்திராதவன். ஆனால் ஏனோ இந்த விசை பரீக்ஷையில் கொஞ்சம் மட்டம் தட்டிவிட்டான். மூன்று அல்லது நான்கு 'ராங்கா' கவே (வரிசை) வந்து கொண்டிருந்தவன் தடதட வென்று பதினோராவதாக இறங்கி விட்டான். பாவம், அவனுக்கே என்னமோபோலத்தான் இருந்தது.

வீட்டிற்கு வந்து ரொம்ப நேரம் வரை அதை வெளியிட நா எழும்பவில்லை அவனுக்கு. கடைசியில், முணு முணுப்போ, கடுகடுப்போ, சொல்ல வகையற்ற ஒரு பொருமலோடு சொன்னான் சேதி.

"உம், பின்னே இப்படித்தானே 'ராங்கி' குறையணும்' உனக்குப் புத்தி வரணும்! இடத்தை விட்டு நகருகிறபாடு இல்லாமல் 'செஸ்ஸும்' 'கேரம்ஸும் விளையாடிக் கொண்டிரு தினமும்! உடம்பு கூனிக் குறுகிப் போகட்டும், மூளையும் மங்கிக் கெட்டுப் போகட்டும், படிப்பும் அதேபோல மழுங்கலாம் தாராளமாய்!" என்று ஒரு இரைச்சல் போட்டார் அவனுடைய அப்பா.

"எது சாக்கு என்று காத்துக் கொண்டிருக்கிறார் அப்பா, 'செஸ்ஸை'யும் கேரம்சையும் தாக்க!" என்று முணு முணுத்தான் மணி. அதைக் கவனிக்காமல்–கவனித்ததாகக் காட்டிக் கொள்ளாமல், அவர் சமையலறைக்குப் போனார். "பார், லக்ஷ்மி! அன்றைக்குத் தான் சொன்னேன் நான், "கிரிக்கெட்' டென்னிஸ்னு சில பேர் எப்படி வெறியாயிருக்கிறார்கள். என்று! அவற்றைப்பற்றி பேசித் தர்க்கம் பண்ணுகிறதிலே பொழுது செலவழிக்கிறார்கள்: படிப்பைக் கெடுத்துக் கொள்கி

ருர்கள் பிள்ளைகள், என்று பேப்பரிலே கண்டிச்சு யாரோ எழுதியிருக்கிறதாகச் சொன்னேன்! நம்ம பிள்ளையானல், அதைவிட மோசமாய், கிரிகெட், டென்னிஸ் நினைப்பு இல்லாமலேயே படிப்பைக் கெடுத்துக் கொள்கிறது! எப்படியிருக்கு, வேடிக்கை!" என்று மணியின் தாயாரைப் பார்த்து, மணியைக் கிண்டல் பண்ணினர்.

மணிக்குப் பொறுக்கவில்லை அந்த எகத்தாளம்.

"தினமும் சாயங்காலம் வந்தால் இந்தப் பேச்சுத்தான்! சீ!" என்று அலுத்துக் கொண்டான்.

அதுவும் வாஸ்தவம்தான், என்று சொல்ல வேண்டும்.

கொஞ்ச நாட்களாக அப்பா அவனை இந்த 'ஆட்ட' விஷயமாக சாட்டிச் சாட்டியே பேசிவந்தார். பள்ளியிலிருந்து மீண்டதும், ரேடியோவை முடுக்கி விட்டு விட்டு, அதனருகே அமர்ந்து, அம்மா கொணர்ந்து தரும் 'கோக்கோ'வின் ருசியை அனுபவித்துக் கொண்டே, பக்ஷணத்தை அசைபோட்டுக் கொண்டே சிறிது நேரம் போக்கி விட்டு, அப்புறம் பக்கத் தகத்துப் பையன் வந்ததும், 'செஸ்' பலகையோ, 'கேரம்' பலகையோ கொணருவான் மணி. ரேடியோவில் நிகழ்ச்சிகள் நிகழ்ந்துகொண்டேயிருக்கும். எதிரே தரையில், இவர்கள் ஆட்டமும் நடந்துகொண்டேயிருக்கும். இருட்டின பின்புதான் முடியும் ஆட்டம்.

இது தந்தை சுந்தரமையருக்குப் பிடிக்கவில்லை.

"நல்ல தேகாப்பியாசம் வேண்டாமா? இந்த வயதில் ஓடி ஆடி, பந்தும் பாட்டும் பிடித்து விளையாடுவார்களா, இப்படி ஆணி அறைந்தாற்போல இடம் விட்டு நகராமல், சாயங்கால வேளை அடைந்து கிடப்பார்களா? உடம்பு ரொம்ப அழகாயிருக்கும் வயசு வந்தால்!" என்று அவர் அடிக்கடி இரைந்து வந்தார்.

பெஞ்சியிலே இரண்டு தலையணைகளை உயரமாக வைத்து, சாய்ந்து படுத்தவாறு புத்தகம் வாசித்துக் கொண்டிருப்பான் மணி. "உம், உடம்பை எப்படிப் பாழாக்கலாமோ, அவ்வளவும் செய்'என்று சொல்லிக்கொண்டே அவ்வழியே போவார் தந்தை. அவர் தலை மறைந்தபின்பு, அவர் வார்த்தைக்காக, 'மெனக்கெட்டு' நிமிர்ந்து உட்காருவான். ஆனல் அவர் அடுத்து அவ்வழியே வரும்பொழுது, அநேகமாய், மீண்டும் குற்றச் சாட்டுக்கு இலக்காக வளைந்து படுத்திருப்பான் பிள்ளையாண்டான்.!

தந்தை பேசி வருவதைச் சாதுவாகக் சகித்துக்கொண்டு இது நாள் வரை இருந்து வந்தான் மணி. ஆனல் இன்று நிகழ்ந்த ஒரு மாறுதல், மற்ருெரு மாறுதலுக்கு அடிகோலியது. தேகப்பயிற்சியையும், உடல் நன்மையையும் உத்தேசித்துக் குறிப்பிட்டு இத்தனைநாள் தாக்கி வந்த அப்பா, அன்று படிப்பையும் சேர்த்துவைத்துத் தாக்கி இரையவே, அந்தத் தாக்குதல் நியாயமானதுபோலும் அவனுக்குத் தோன்றவே, ரோசமாக இருந்தது: அவமானமாக இருந்தது மணிக்கு,

"அப்பப்பா! பெரிய தொல்லை!" என்று முணு முணுத்துக் கொண்டே ரேடியோவை முடுக்கினுன். ஏதோ கோளாறுபோலும் மின்சார அமைப்பிலே! மௌனம் சாதித்தது ரேடியோ! சிறிது நேரம் அவனுக்கும் ரேடியோவுக்கும் போராட்டம்! இறுதியில் ரேடியோ வெற்றி பெற்றது, மோனம் சாதித்தது! வெகுண்டது மணியின் மனசு.

" எதுக்காகடா வீணு டாக்ஸிக்கு பணத்தை கொட்டரே! ஒரு 4½ அணுவை விட்டெறிஞ்சா தனியா சௌகரியமா டாக்ஸியாட்டமா சீக்கிரம் 'எக்ஸ்பிரஸ் பஸ்லே' போகலாமேடா !........."

"வேணுமென்றே கூட இப்படி கனெக்ஷனைக் கெடுத்து வச்சிருப்பா, இந்த அப்பா.!"

அம்மா கோக்கோ, பக்கவடாம் சகிதம் வருவதை அறிந்தே, அவள் காதில் படும்படியாக ஒரு போடு மெல்ல போட்டுவிட்டு அங்கிருந்து திரும்பினுன் மணி.

"இந்தா ... தின்னுட்டுப் போ, மச்சுக்கு!" அம்மாவுக்காக கோக்கோவை மட்டும் அவளெதிரே மடமடவென்று குடித்துவிட்டு "பக்கவடாம் வேண்டியதில்லை!" என்று சாதித்து விட்டு மச்சுப்படி ஏறிவிட்டான் மணி.

ஒரு அலாதி திருப்தி அவன் மனதில் அப்போது! கொஞ்சநாளைக்கு முன்பு தன்மேல் அப்பா இதேபோல அபாண்டமாக ஒரு பழி கற்பித்தார்! தானும் பதிலுக்கு ஒரு 'அபாண்டம்' கற்பித்து சுமத்தியாகி விட்டது!

ஆம், அவனுடைய அப்பா அவன் மேலே 'அபாண்டமாக'த் தான் சொன்னுர் அன்று! மணியின் இளம் உள்ளம் அதை மறக்குமா?

இந்த வயதின் கோளாறுதான்—மணி தன் அதிகாரத்தை குழந்தைகள் மீது வெகுவாக உபயோகித்து வந்தான். பெரிய தம்பி 'நரசு'வை அவன் ஆட்டியேதான் வைத்தான். அந்தப் பயலும் ஒரு விஷமக் களஞ்சியம்—ஏதாவது 'ரூட்டி' அடித்த வண்ணம் இருக்கும், அண்ணனின் தாக்குதலுக்கு ஆளாகிக்கொண்டேயிருக்கும். 'நரசு'வை 'நச்சு' என்று அண்ணன் மணி கேலியும் கோபமுமாக அழைப்பதும் வழக்கமாகி விட்டது. அவனும் சளையாமல் 'நான் 'நச்சு'ன்னு தெரிஞ்சிண்டே என்னை வையறே பாரு! உன்னை 'மணின்னு கூப்பிடக் கூடாது, 'மண்'னுதான் கூப்பிடணும்? என்று பதில் கொடுப்பான். ஆத்திரம் தாங்காமல் போட்டு அடிப்பான் நரசுவை — அவனும் வாங்கிக்கொள்வான். அன்பிற்குக் குழந்தைகள் கட்டுப்படுமேயன்றி, கொடுமைக்கா வணங்கும்! ஆனல் 'இரண்டுங் கெட்டான்' மணிக்கு அவ்வளவு தெரிந்து விட்டால், வேறு என்ன குறைச்சல்?

இந்த நிலையில் பெரம்பூரிலிருந்து சென்னைக் கடற்கரைக்குச் சைக்கிளிலேயே போய் வரணும் என்று மணியும் நண்பனும் ஒரு திட்டம் போட்டார்கள். தாங்களே தனித்தனியாக–பாரமில்லாமல்–போய் வருவதைவிட, ஒவ்வொருவரும் ஒரு குழந்தையையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போய் வருவது திறமை பெருமை என்று தோன்றியது நண்பனுக்கு. அவனுக்கு ஒரே தம்பி, அருமைத் தம்பி: அவனுக்கு அந்த யோசனை தோன்றவே, மணி ஆமோதிக்க வேண்டியதாயிற்று. வீட்டிலே அம்மாவுக்குச் சொன்னான், நரசுவைத் தான் அழைத்துப் போகிறதாக. தங்கை பதினொரு வயதுப் பெண், கடைசி தம்பி ஐந்து வயதுக் குழந்தை, ஆதலால் நரசுவைத் தான் எடுத்துப் போகணும், என்று தோன்றியதால், மென்று விழுங்கிக் கொண்டே, வெட்கப்பட்டுக் கொண்டே சொன்னான். அம்மா அப்பாவிடம் சொன்னாள்–அனுமதி கேட்கும் பாவனையிலே.

அவர் என்ன கோபமாக இருந்தாரோ! இல்லாவிட்டால் அப்படி எரிந்து விழமாட்டார்–"எங்கேயாவது தம்பியைக் கழுத்தைப் பிடித்துக் கடலில் தள்ளிவிட்டு வந்துவிடப்போகிறான்!" என்றார்! அவரும் லக்ஷ்மியம்மாளும், மணியை கடிந்துகொண்டதுண்டு பல தடவை 'நரசு'வை மணி வாட்டி வதைப்பது ராக்ஷஸத்தனம் என்று! ஆனால் அன்று அவர் அப்படிச் சொல்லவே, லக்ஷ்மியம்மாள், "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் பாவம்! அவனுக்குமட்டும் தம்பி என்கிற பிரியம் கிடையாதா?' என்று கேட்டுவிட்டு, மகனின் மனம் என்ன புண்பட்டதோ என்று கவலையுடன் திரும்பிப் பார்த்தான். அதற்குள் சுண்டிப்போன முகத்தில் கண்ணீர் வராமல் தவித்துக்கொண்டு மளமளவென்று உள்ளே போய்விட்டான் மணி. இறுதியில், மணியும் நண்பனும் மட்டும் போய் வந்தார்கள் சைகிளில். அன்று தந்தை அப்படி அநியாயமாகச் சொன்னதற்கு பதில், இதோ, இன்று அவனும் அப்பா மேல் 'அநியாய'க் குற்றம் சாட்டியாச்சு! அமைதியாக மொட்டை மாடிமேல் உலாத்தினான் மணி!



"உனக்குப் பிடிக்குமே மணி வெங்காயப் பக்கவடாம்! தின்னுடாப்பா!" என்று அம்மாவே மூச்சு வாங்க பக்கவடாத் தட்டுடன் வந்துவிட்டாள்.

"சரி, வை!" என்று சொல்லிவிட்டு, அம்மா இறங்கிப் போனதும், முக்காலிமேல் உட்கார்ந்து தின்கலானான். அம்மா வலியவந்து டிபன் கொடுத்துவிட்டுப் போன திருப்தியும் சேர்ந்துகொண்டது.

"சரி, ரேடியோ கேட்காவிட்டால், செஸ் இரண்டு ஆட்டம் ஆடினால் போச்சு!" என்று எண்ணியவாறு ஏதேதோ இன்னும் எண்ணிக்கொண்டிருந்தான்.

"அவன் இனிமேல் சாயங்காலம் 'பாட்மிண்டன்' ஏதாவது விளையாடுவானப்பா! அவன் உடம்பு கூனிக் குறுகிண்டு போகிறது, படிப்பும் பாழாகிப் போறது! இனிமேல் சாயந்திரம் வீட்டிலே அடைஞ்சு கிடந்து சதுரங்கமும், கேரம்ஸூம் விளையாடாதீர்கள். உனக்கும்தான் நல்லது சொல்றேன்..."

தந்தையின் இந்தப் பேச்சு கீழேயிருந்து கேட்டது... தூக்கிப் போட்டது மணிக்கு!

என்ன அக்கிரமம்! பாபுவை அப்பா கோபிக்கிறாரா?... ஐயோ ...நண்பன்....பாவம்!...

கீழே ஓடி வந்தான் மணி சுற்றுமுற்றும் பார்த்தான். பாபுவைக் காணோம். அப்பா அப்பாவி போல தோற்றமளித்தார்.

கோபம் கோபமாக வந்தது மணிக்கு.

ஆகா! ஏமாற்றத்தின் மேல் ஏமாற்றமா தனக்கு! அக்கிரமம்! வீடுவந்த நண்பனை விரட்டியடிப்பது அழகா?...அக்கிரமம்! அப்பா இப்படித் தன்னை முந்திக் கொள்வதா? அக்கிரமம்! சொந்த அப்பா தனக்கு மனம் நோக வைத்த வண்ணம் நடப்பதா? அக்கிரமம்! அக்கிரமும் அநியாயமும் தாண்டவமாடும் இந்த வீட்டிலே தான் இருப்பதா? வாழ்வதா? முடியாது! வெட்கக்கேடு! கூடாது!

வேகமாக திரும்பினான் மாடிக்கு!

மொட்டைமாடியின்மேலிருந்து காணப்பட்ட வானவெளி—சூன்ய

மான வானவெளி—வாழ்வே அத்தகையதுதான் என்று உபதேசம் செய்ததோ? அங்கிருந்து சுற்றுப்புறம் தென்பட்ட காட்சி, உலகம் விசாலமானது, அவனுக்கு அதிலே வேறு இடமில்லாமற் போகவில்லை என்று சொன்னதோ?...அவன் மனம் ஒரு முடிவு செய்திருந்தது, மறு கணம்.

கீழே வந்தான், அறைக்குள் சென்றான். ஒரு பையில் இரண்டு ஜோடி சிறாய்கள், இரண்டு ஜோடி ஷர்ட்டுகள் எடுத்துத் திணித்தான் அறையை விட்டு வெளி வந்தான்.

அம்மா கண்ணில் தென்பட்டாள். கலங்காமல், சலனமற்று வாசற்புறம் திரும்பினான் மணி.

பெற்ற தாயின் மனதுக்கு என்ன தோன்றியதோ. "எங்கே போகிறாய் மணி! பையில் என்ன!" என்று வினவினாள்.

"பாபு வீட்டுக்குச் செஸ்' எடுத்துண்டு போகிறேன், அங்கே விளையாடப்போகிறேன்!" என்று மிடுக்காகச் சொல்லி விட்டுவெளியேறி விட்டான்.

தெருவோடு போகும்போதே ஒரு யோசனை பிறந்தது.

"பஸ் ஸ்டாண்டை"த் தவிர்ப்பது நலம் என்று தோன்றியது, அப்படியானால், உடனே ஊரை விட்டு வெளியேற வழி?...ரயில் தான்! ஆனால் சென்னைக்குப் போகும் ரயில் அப்போது, உடனே கிடையாது. திருவள்ளூர்ப் பக்கம் தான் போகலாம். உடனே ரயில் ஏறினால்! சரி, அப்படி அந்த ரயிலைப் பிடித்து, உடனே ஓடி விடுவது தான் நலம் என்றும் உடனே தோன்றிற்று மணிக்கு. சென்னைக்குப் போகலாம், அங்கே அநேகம் பேர் தெரிந்தவர்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் ஒரோரு நாள் தங்கினாலும் பத்து நாட்கள் தாட்டி விடலாம்! அப்புறம் வழியா கிடைக்காது தப்ப!"என்று ஒரு எண்ணத்துடன் வீட்டிலிருந்து புறப்பட்டான் மணி. ஆனால் சென்னைக்கு வண்டி கிடையாது என்று தோன்றினதும் சென்னை போகாமலிருப்பதே நன்மை என்று முடிவுசெய்துவிட்டது அவன் மனம்.

"வில்லிவாக்கத்திலே நடக்கும் பாலியம்மன் திருவிழாவுக்குஅன்று காலை ஒரு நண்பனும்அவன் வீட்டாரும் போனதாக பள்ளியில் பிற்பகல் கேள்விப்பட்டான். திருவள்ளூர் வண்டியில் ஏறிக்கொண்டு வழியில் வில்லிவாக்கத்திலே இறங்கி விடுவதென்று நிச்சயம் செய்துவிட்டான். அங்கே அப்பாவின் நண்பர் ஒருவர் உண்டு- இரண்டொரு தடவை அப்பாவோடு போயிருக்கிறான் அவன்—ஆதலால் அங்கே தங்கியிருக்கலாம் இரண்டு மூன்றுநாள். அப்பா பிள்ளையைத்தேடப்புறப்பட்டால் முதலில் பட்டணம் நினைவுக்கு வரும்—அங்கேதான் போய்த் தேடிக்கொண்டிருப்பார்! வில்லிவாக்கம் உடனே நினைப்பு வராது. அப்பா பட்டணத்தில் திண்டாடிகொண்டிருப்பார், அவன் இங்கே திருவிழாப் பார்க்கலாம்! பேஷ்! அவன் நினைத்தது பலித்தது.

'செஸ்' ஆடப்போனவன் வரக்காணோமே என்று பாபுவை விசாரித்ததில், மணி அங்கே போகவில்லைஎன்று தகவல் தெரிந்தது. சுந்தரமய்யருக்கு. பல்லைக் கடித்துக்கொண்டு விடியும் வரை பார்த்தார்கள். பிள்ளையைக் காணாமல் பெற்றதாய் அலட்டிக் கொண்டேயிருந்தாள். நிலைமை அப்போதுதான் அவரையும்குலுக்கியது, சுந்தரமய்யர் பட்டணம் விரைந்தார்! ஒரோர் நண்பர் வீடுகளிலும் விசாரித்துக்கொண்டு வந்தார் குட்டாக.

இங்கே வில்லிவாக்கம் ராமைய வீட்டார் மணி சொன்னதை நம்பத்தான் நம்பினார்கள்—திருவிழாவுக்கு மணி வந்தது சந்தோஷம் தான் என்று. ஆனால்அவனுடைய பெற்றோரும் வந்திருந்தால் வேடிக்கையாக இருந்திருக்கும் என்றும் சொன்னார்கள்.

மறுநாள் காலை சுந்தரமய்யர் ஒருவித பரபரப்பிலே இருந்தார். ராமையர் வீட்டிலே வேறுதினுசான கலகலப்பிலே திளைத்துக் கொண்டு இருந்தார்கள். திருவிழாவிலே பக்தர்கள் 'பூக்குழி' இறங்கும் விந்தைக் காட்சியைப் பார்க்க ராமய்யர் வீட்டு மேன்மாடி நன்கு உதவும். அன்று இரவு நடக்க விருந்த அந்த வைபவத்துக்கு, வருவார் போவோருக்கு இடவசதியிருக்கும்படி செய்ய, அவர்கள் ரொம்பவும் உத்ஸாகமும் அக்கறையும் கொண்டு, நாற்புறமும் சுற்றிச் சுற்றி வந்தனர். மணியின் மனதும் அந்த கலகலப்பிலேயும், ராமையர் மகன் கோபியின் தோழமையிலும் இன்பம்நுகர்ந்து கொண்டிருந்தது: வீட்டிலே தன்னைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள் என்பதிலே திருப்தியும் கண்டது. அன்று பொழுது பறந்ததுபோல இருந்தது அவனுக்கு.

பள்ளிக்கூடம் 'தனக்கு' இரண்டுநாள் விடுமுறையாதலால் தான் அந்த இரண்டு தினங்களையும் அங்கேயே கழிக்க வந்திருப்பதாக கோபியிடம் சொன்னான், மணி. அவனும் உற்சாகத்துடன் பெற்றோரிடம் தெரிவித்தான், அவர்கள் அதைப்பற்றி யோசனை ஏதும் செய்யாததில் ஆச்சரியமில்லை. 'பேஷாக இருக்கட்டும்!' என்றார்கள்.

மறுநாள் காலை ஒன்பதுமணியிருக்கும். கோபியின் தங்கை, ஆறுவயதுப்பெண் ஒரு சிறு புயலை மணியின் உள்ளக் கிடையிலே கிளப்பிவிட்டாள்.

"இதோபாரு, என் போட்டோ! மெட்றாசுலே எடுத்தது! என்று சொல்லிக்கொண்டே ஒரு படத்தைக் கொணர்ந்து நீட்டினாள் மணியிடம். "எங்கே, நீங்கள் எல்லாம் நிறைய போட்டோ எடுத்துக் கொண்டு இருக்கிறீர்களா? கொண்டுவா, பார்ப்போம்!" என்று கோபியிடமும், அவன் தங்கையினிடமும் சொன்னான் மணி. போட்டோக்கள் என்றால் அவனுக்கு ஒரு ஆசை. பொழுது போகணுமே! கேட்டான்.

கோபி ஐந்தாறு படங்களைப் பொறுக்கித்திரட்டிக்கொணர்ந்து தந்துவிட்டு, குளிக்கப் போய்விட்டான்! அவனுக்கே வெட்கமாக இருந்ததோ என்னமோ, ஐந்தாறு படங்களைக்கொணர! வேறு இருந்தால்தானே எடுத்துவரலாம்!

மணிக்குச் 'சட்'டென தன் வீட்டு நினைப்பும், வீட்டிலே குவிந்து கிடக்கும் போட்டோக்கள் நினைப்பும் வந்தது!

ஆகா! எத்தனை போட்டோக்கள். ஒவ்வொருவரையும் எடுத்திருக்கிறார் அப்பா! கண்ணாடி போட்டு மாட்ட இடமில்லாமல் அடுக்கி அலமாரிக்குள் வைத்திருக்கிறார்.

இவன் மூத்த பிள்ளை அருமை பெருமையாக இவனுக்கு, இவனைப் பற்றி ஒரு போட்டோ ஆல்பம் வேறு!

"நம்ம குழந்தைகள் வயது வந்தபின்பு தங்கள் குழந்தைப் பிராயத்தை நினைத்துப்பார்த்துச் சந்தோஷப் பட வேண்டாமா? குழந்தைகளைப் போட்டோ எடுக்கக் கூசவே கூடாது!" என்றுசொல்வார் அடிக்கடிஅவர்!

'ஆல்பம்' 'அப்பா' என்ற நினைப்பைத் தொடர்ந்து இன்னொரு விஷயம் நினைவு வந்தது! ஒரோர் குழந்தையைப்பற்றியும் ஒரோர் 'டயரி' வைத்திருக்கிறார் அப்பா! அவர்கள் பிறந்தது முதல் அன்றாடம் நிகழ்ச்சிகளை, மனோபாவங்களை குறித்து வைத்திருக்கிறார்! ஆகா, என்னசிரத்தை அப்பாவுக்கு! 'குப்புறித்தான்' 'சிரித்தான்' 'சுரம் வந்தது' 'சளி பிடித்தது' என்று எழுதமுடியாத தேதிகளுக்குக் கீழே, "அழகு பொலிக" "அறிவு வளர்க!" என்றெல்லாம் குறிப்பிட்டு, எத்தகைய அன்பும், அக்கரையும் ஆதரவும் காட்டியிருக்கிறார்!

கற்பனையை விரிப்பதிலே அலுப்பு சலிப்பு உணராத கலைஞனைப்போல, அவனுடைய கலையுள்ளத்தைப்போல— மணியின் உள்ளம் ஒரு அலாதி நிலைமையை எய்தியது.

அவனைப்பற்றிய டயரியில் ஒரு குறிப்பை நாடிச் சென்றது.

"இன்று தாயும் சேயும் சோழி விளையாடினார்கள்! லக்ஷ்மி ஜயித்தாள் 101 பாயிண்டுடன். மணிக்கு 32 பாயிண்ட்கள். மணி! 101 பெரிதா, 32 பெரிதா?" என்று கேட்டேன் வேடிக்கையாக! அவன் முகம் சுண்டவில்லை. 'சாக்பீஸை' எடுத்துக்கொண்டு, தரையில் பெரிய எழுத்துக்களில் 32-ம் சின்ன எழுத்துக்களில் 101-ம் எழுதினான்! "எது பெரிசு?" என்று கேட்டான்! விந்தை!

"தோல்வியை இப்படியன்றோ இன்முகத்துடன் ஏற்க வேண்டும்? வாழ்க்கையிலே இன்ப துன்பங்களையும் மணி இதே நோக்கங்கொண்டு ஏற்பானாக!" இப்படி எழுதியிருந்தார் ஒரு குறிப்பு.

இந்தச் சம்பவம் மணியின் எட்டாவது பிராயத்திலே நடந்தது. அவன் அதை மறந்தேயிருந்தான் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு டயரியைப் புரட்டிக் கொண்டிருந்தபோது, அதைக் கவனித்து, "இப்படியா சொன்னேன்!" என்று அவனே வியந்து கொண்டான்! மீண்டும் மறந்தான் இது நாள்வரை ஆனால், இன்று இந்த சூழ்நிலையில் அவனுக்கு அது நினைவு வந்துவிட்டது!

தான் ஓடி வந்துவிட்டதையும், தன்னைப்பற்றி தந்தை அந்நாளில் நினைத்ததையும் எண்ணிய போது, அவனுக்கு நெஞ்சில் ஏதோ என்னமோ செய்தது!

"தீக்குழி, பூக்குழியாக பக்தர்களுக்குத் தோன்றுவதற்குக் காரணம், மனசு தானே! ஒரு உறுதியும் பற்றும் மனதில் இருந்தால் 'தீ' பூப்போல தோன்றும்—உலகில் கஷ்டங்களைச் சுகங்களாகப் பாவித்தால், வாழ்வே சுகம் தான்! இது தான் இந்தப் "பூக்குழி" வைபவத்திலிருந்து நாம்



தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை!''

இப்படியாக முதல்நாள் காலை ராமையர் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொர்ண்டிருந்ததை, மணியும் கேட்டுக்கொண்டுதான் இருந்தான். ஆனால் அப்போது சிறிதும் அதைப்பற்றி சிந்திக்காத அவன், இன்றோ சிந்தனையின் வலிய இழுப்பிலே அமிழ்ந்தான். சிந்தனையின் வலிய இழுப்பிலே, அந்த நினைப்பும் ஓடிவந்தது!

முத்துக்கோவைபோல அவன் எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் அணிவகுத்து நின்றன இறுதியிலே ஒரு நினைப்பு உணர்ச்சி——அது முத்துச் சரத்திற்கு பதக்கமாய் அமைந்து, அவன் நெஞ்சை அணைத்துக்கொண்டது. அதன் அணைப்பிலே, ஆண்மை மிகுந்திருந்த அவன் நெஞ்சத்தினிலே ஓர் குழைவு, நெகிழ்ச்சி!

ஐயோ, தந்தை தன்னைப் பற்றி கண்ட கனவு என்ன! தான் போகும் போக்குதான் என்ன!

தன்னால் தாளமுடியாதபடி என்ன நடந்து விட்டது வீட்டிலே! ......ஒன்றுமில்லையே!...... ஆமாம்! ஒரு விபரீதமும் அப்போது நடக்கவில்லை! தான் பிரமாதமாக நினைத்துவிட்டதுதான் இப்போது விபரீதமாக நடக்கிறது!

அங்கே பெற்றோர் என்ன துடிக்கிறார்களோ? தன்னைக் கோபிக்க அவர்களுக்கு உரிமையில்லையா? தன் தம்பியைத்தான் எப்படியெல்லாம் ஆட்டி, அதிகாரம் செலுத்துகிறான்? தன்னை, தன் நலத்திற்காக பெற்றோர் கடிந்துகொள்வது பிசகா? அவர்கள் தன்னைக் கோபிக்கக் கூடாதா?

“கோபிக்கக் கூடாது!'' என்று தான் நினைப்பது அன்றோ, அநியாயம், அக்கிரமம்!

அன்பு நிறைந்த அவர்கள் உள்ளத்தைத்தான் சிதற அடிப்பது அன்றோ அக்கிரமம்!

ஒன்றுமில்லாததற்குவெகுண்டு தான் ஓடிவந்துவிட்டது அன்றோ அநீதி!

மணியின் மனம்குன்றிவிட்டது. வீட்டுக்குத் திரும்பிச் செல்வதே சரியான செய்கை என்பதை உணர்ந்தான்! ஆனால் போதிய மனோ பலம் இல்லை!

ஒருவாறு சாப்பாடு முடிந்தது. கோபி வேடிக்கையும் விளையாட்டுமாக இருந்ததால், சற்று அவன் மனம் தெளிந்தது! அதனால், “இப்படியே எப்படியாவது கடத்தலாம் கொஞ்சநாள்! அப்புறம் வீட்டுக்குப் போனால் போச்சு!'' என்றுகூட தோன்றியது.

புயல் காற்றுக்கு எதிர் நின்று கீற்றுக் கொட்டகை வீறுப்புப் பேசமுடியுமோ? கடைசியில் சிதறுண்டது மணியின் எண்ணம்.

மாலை 4-30, 5 மணியிருக்கும். கோபியின் தாய் ராமையர் மனைவி குறுக்கும் நெடுக்குமாக வாசலுக்கும் உள்ளுக்கும் நடந்துகொண்டிருந்தாள். இரண்டு தடவை கோபியைக் கூப்பிட்டாள். மணியுடன் பேச்சு மும்மரத்தில், அந்த ‘இரண்டுங் கெட்டானும்' அழைப்பிற்குச் செவி சாய்க்கவில்லை.

கடைசியில் அந்த அம்மாளே பிரசன்னமாகி ஏண்டா கோபி கூப்பிட்டுக் கூப்பிட்டுத் தொண்டை கட்டிப் போச்சே! தங்கம் வரக்காணோமே வீட்டுக்கு! நாழியாச்சு போலிருக்கே! கொஞ்சம் போய், அவளைக் கூட்டிவாயேன்! என்றாள்.

“ஆமாம்! போய்க் கூட்டிண்டு வரணுமாக்கம் ராணியை! போம்மா! என்னாலே முடியாது! அவளே வருவாள், வழி தெரியாதோ?'' என்றான் கோபி. மணியின் முன் மதிப்பாக இருக்க ரொம்ப மும்முரமாக கையிலிருந்த புத்தகத்தைப் புரட்டிக்கொண்டு பேசினான்.

வழி தெரியாது என்பதற்காக வா சொன்னேன்! என்னமோ தாமதம் ஆகிருப்பலே இருக்கே என்று கவலையாயிருக்குப்பா! வருகிற வழியிலே குளம் இருக்கே' ஜாக்கிரதையாய் குழந்தை வீடு வந்து சேரணுமே என்று தினமும் தான் கவலை எனக்கு! நேற்று திருவிழாவேறே, ஊரிலே ஜனநடமாட்டம் ஜாஸ்தி! கைவளையை கழட்டிண்டு கூட அனுப்பலை நான்! இப்பத்தான் எல்லாம் நினைப்பு வந்தது. பயமாயிருந்தது—உன்னண்டை சொல்கிறேன்! போய் வரயாடா—மணியையும் பள்ளிக்கூடப்பக்கம் அழைச்சிண்டு போய் வந்தமாதிரியிருக்கும்? புறப்படறாயா?'' என்று சொல்லிவிட்டு, போகக் கிளம்பினாள் அவன் தாய்!

அடுத்த இதழில்

★

“கூதலீபுர நாடகம்'' என்ற புதிய ரஸமான தொடர் கதை ஆரம்பமாகிறது. ஹாஸ்ய ரஸமும், சிருங்கார கட்டங்களும் நிறைந்துள்ள இப்புதிய கதை ஒரு கற்பனைச் சித்திரம். அவ்வப்போது ஹாஸ்யக் கட்டுரைகளை “மித்திரன்'' வாரப்பதிப்பில் எழுதி வந்திருக்கும் ஸ்ரீ. ‘எஸ்- ஜே' இதை வெகு அழகாக வரைந்திருக்கிறார்.

★

அமர கவி ஸ்ரீ. சுப்பிரமண்ய பாரதியார் இயற்றிய ஸரஸ்வதி தேவியின் பாடலொன்றுக்கு வித்வான் ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் பொருத்தமாக ஒரு மெட்டமைத்து ஸ்வரப்படுத்தியிருக்கிறார். ஸரஸ்வதி பூஜை வாரத்தில் வெளிவரும் இவ்விதழில் அப்பாட்டு, ஆர்ட் காகிதத்தில் அற்புதமான சித்திரங்களுடன் தோன்றும்.

★

நேயர்களின் ஆவலுக்குப் பெரிதும் பாத்திரமாக விளங்கும் “உங்கள் காலபலன்''—ஜோதிஷப் பகுதியும் இதே இதழில் தோன்றுகிறது.

★

பக்தி வெள்ளம் கரை புரண்டோடும் பெரிய புராணக் கட்டுரை, சிறந்த கதைகள், சித்திரங்கள், புகைப்படங்கள் முதலிய இதர வழக்கமான பகுதிகளும் அடங்கியிருக்கும்.

விலை அணா 4.



"என்னால் இப்போ நகர முடியாது! சாயங்காலமாக மணியைப் பளிக்கூடப் பக்கம் அழைச்சிண்டு போய்க் கொள்கிறேன்!" என்றான் கோபி.

பிள்ளையின் குணமும், மனசும் அம்மாவுக்குத் தெரியாதா?

"என்னவோப்பா, நான் இதற்கு மேல் என்னத்தைச் சொல்லுவேன்!" என்று சொல்லிக்கொண்டே மறைந்துவிட்டாள் அந்த அம்மாள்.

மணிக்கு கோபி செய்வது அநியாயம்போலப்பட்டது! "கோபி, போய்த்தான் வரலாமே!" என்றான்!

"நாழி ஒன்றும் ஆகவில்லை, மணி! வெறுமனே பயம், இந்த அம்மாவுக்கு! தங்கம் இந்த வருஷம் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்ததிலேருந்து, முக்கால்வாசி நாளும் சாயங்காலம் அம்மாவுக்கு இந்தப்பயம்தான்! நாழியாகிறதுக்கு முன்னேயே 'அலட்டுவாள்!' ஒரு பத்து நிமிஷம் பார்க்கலாம், தங்கம் வராவிட்டால் போகலாம் நாம்!" என்று சொல்லிவிட்டான் கோபி.

கொஞ்சநேரமாயிற்று. மணி துரிதப்படுத்தின தன்மேல், கோபி புறப்பட்டு விட்டான். கொஞ்சதூரம் போனார்கள் இருவரும். பாம்பாட்டியின் வித்தையைப்பார்த்துக் கொண்டிருந்த சிறு கும்பலருகில் தங்கம் தென்பட்டாள்.

"வாடி தடிச்சி, வீட்டுக்கு!" என்று அதட்டி, தங்கையை அழைத்துவந்து அம்மாவிடம் ஒப்புவித்தான் கோபி.

மணியின் மனது ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. இந்தச் சம்பவத்திற்குப்பின் "வீட்டுக்குப் போய் விட வேண்டியதுதான் சரியான செய்கை!" என்ற உறுதி பிறந்ததும், ஆவலும் பெருகியது. ஆனால் கொஞ்சம் அடக்கினான் மனதை.

கடைசி ரயிலில் போய் இறங்கினால், வீட்டிலே எல்லோரும் படுக்கப் போயிருப்பார்கள். கதவைத் தட்டினால், திறப்பார்கள் அனாவசியப் பேச்சு கீச்சு இல்லாமல், தான் நேராக படுக்கைக்குப்போய் விடலாம்! விடிந்தால், எல்லாம் 'ஒழுங்காக' தினம்போல நடக்கும்! தர்மசங்கடமாக ஏதுமிராது, தான் சமாளிக்க!

மணியின் உள்ளக்கிடையில் நிகழ்ந்த போராட்டங்களை ராமையர்வீட்டார் அறிந்தவர்களன்றே? அவன் விடைபெற்றுச் சென்றபோது, "திருவிழா பார்க்க வந்து இரண்டு நாள் தங்கிவிட்டுப் போகிறான் மணி" என்று தான் எண்ணினார்கள்! அவனுடைய பெற்றோர்

வராததால், தங்களுக்குக் கோபம் என்றுகூட ஊர்போய் சொல்லும்படி கூறி அனுப்பினார்கள் மணியிடம்.!

தெருமுனை நுழைந்தாச்சு—மணியின் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. ஓரிரண்டு வீடுகளில் விளக்குகள் 'மினுக்' 'மினுக்' கென்று மினுக்கின. பெரும்பாலானோர் வீடுகளில் எல்லோரும் படுக்கப் போயாச்சு.

எதிர் சாரியில் நடந்து வந்துகொண்டிருந்த மணி, தன் வீட்டைக் கூர்ந்து நோக்கினான்.! தன் வீடுதானா அது? விளக்கொளியா தன் வீட்டிலே! புதுமையாக இருக்கிறதே?...............படுக்கப் போகும்போது விளக்கெல்லாம் அணைத்துவிடுவது வழக்கமாகச்சே வீட்டிலே!. இன்னும் அவர்கள் விழித்துக்கொண்டுதான் இருக்கிறார்களா?.........ஒருவேளை—அம்மா—தன்னைகாணமல், அல்லும் பகலும் புலம்பிக்கொண்டிருக்கிறாளோ?.........அதனால் தானோ—இந்த—

கொஞ்சம் நின்றான் மணி.

வீட்டிற்கு ஓடிவிடவும் ஆவேசம்; ஆனால் கால் எழும்பவில்லை அவனுக்கு — "எப்படி அவர்கள் எதிரே போய் நிற்பது?" இறுதியில் அன்பும் பாசமும் வெற்றி கொண்டன. "கோபியின் அம்மா துடித்தாளே. அதுபோல அதைவிட அதிகமாகத்தான் அம்மா பதறிக்கொண்டிருப்பாள்—போய் அம்மாவின் கவலையைப் போக்கி விடணும்!"

உருளை மீது ஓடும் மரப்பொம்மை போல விரைந்தான் மணி வீட்டை நோக்கி.

"அம்மா— ஐயோ—அம்மாடி!...உம்—மணி வரவில்லையே இன்னும்——?"

"உண்மை! அம்மாவின் புலம்பல்தான் அது! — ஐயோ!" வாசலிலே நின்றுவிட்டான் மணி!

"இப்படி அண்ணனைத் துரத்திவிட்டுப் பிறந்திருக்கே இது! —ஐயோ, இதன் முகத்தைப் பார்க்கவே பிடிக்கல்லையே எனக்கு.

ஈசுவரா?,........,..

ஆ! என்ன!

"பாப்பா பிறந்திருக்கா? ஆம்! பிறந்திருக்கிறது! அதன் மேல் வீண் பழியும் விழுகிறது, தான் செய்த பிழையால்! பாவம்!" உள்ளே சரசரவென்று புகுந்துவிட்டான் மணி.

ஒரு கண்ணோட்டம்–அதற்குள், பல கவனித்தான் மணி.

அப்பா கூடத்தில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். ஒருகை புத்தகத்தை—பஞ்சாங்கத்தை தாங்கியது. இன்னொரு கரம் குனிந்த தலையை தாங்கிக் கொண்டிருந்தது. ஒரு மாதிரி பரிதாபமாகத்தான் காட்சியளித்தார்.

பாட்டி சமையலறையிலிருந்து கையில் ஒரு பெரிய பாத்திரத்துடன் வந்துகொண்டிருந்தாள்.

இடதுபுறம் இருந்த அறையிலிருந்து ஒருசிறு ஓசை. மருத்துவச்சி ஷண்முகம் ஏதோ பாட்டியைக் கேட்கபோலும் கதவருகே தோன்றினாள்.

"அம்மா! மவனுட்டமிருக்குதே!" ஷண்முகம் கூவினாள்.

'அட, மணியா?" அப்பா குரல்!

"அப்பனே, மணி! நீ தானேடா? பாட்டிக்குக் கண் மங்கல் சிறிது! மனதில் ஆர்வம் மிகுதி! அவள் கேள்வி அப்படி!

"நிஜமாவா! ஸ்வாமி! பழனியாண்டவா—என் மனசு...." இது லக்ஷ்மியம்மாளின் மொழிகள்!

மனதும் உடலும் நொந்து போயிருந்த லெக்ஷ்மியம்மாள் வேறு எப்படி மகிழ்ச்சியை வெளிக் காட்டுவாள்!

இந்த கோஷங்களுக்கிடையே மணி மாடிப்படி ஏறிவிட்டான்!

"அம்மா! நான் சொல்லல்லையா பையன் திரும்பிவருவான், எங்கேயும் போகமாட்டான்னு! நீ ஒரே முட்டாப்பதறிப்போனயே! ரத்த பாசம் பாரு! இளுத்துண்டு வந்திடுச்சி! இந்தப் பச்சைக் குழந்தையை வசையேம்மா! இது தானே அண்ணனை கொணர்ந்திச்சி!" என்று ஷண்முகம் அம்மாவுக்குச் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டான் மணி.

"ஓகோ அப்படியா சேதி! இதா என்னைக் கூப்பிட்டது வீட்டுக்கு! அழகுதான்!" என்று நினைத்துக் கொண்டான்! ஆனால் உடனே அப்பா அம்மாவை நேருக்கு நேர் எப்படிப் பார்ப்பது என்று கவலை எழுந்தது!

"உங்களுக்காக நான் வீட்டுக்கு திரும்பிவந்து விடவில்லையாக்கும்! பாப்பாவைப் பார்க்கத்தான் வந்தேன்! அது பிறந்திருக்கும் என்று என் மனசுக்குத் தோன்றிற்று, வந்தேன்!" என்று காலையில் சொல்லி விடலாம். அதுதான் சரி!' என்று ஒரு அசட்டு முடிவுக்கு வந்தான் மணி. பாவம்!



புருஷன்:— "எனக்கு ரொம்ப நாளா ராவுலே எல்லாம் ரெண்டு ரெண்டா தெரியுது. கண்லே ஏதினுச்சம் கெடுதலான்னு கண் டாக்டர்கிட்டே காட்டலாம்னு இருக்கேன்.

மனைவி:—அதெல்லாம் ஒருத்தர்கிட்டேயும் காட்டவாணும் இந்த சனிக்கிழமைலேந்து கள்ளுதண்ணி கிடையாது! எல்லாம் சரியாய்ப் போயிடும்.



அன்று பிற்பகலில் மணி ஒரு தூக்கம் போட்டு எழுந்ததும் சிற்றுண்டியும் தீர்த்தமும் எடுத்துக்கொண்டு நாகு அவரிடம் வந்தாள்.

"ஏன்னா! ஸீதாராமன் வந்து விட்டுப் போனதைப்பற்றி என்கிட்டே ஒரு மாதிரியாகச் சொன்னீர்களே! ஊரிலே வேறு மாதிரியாகப் பிரஸ்தாபம் காதில் படுகிறதாமே! அம்மணி சொன்னாள்."

"சரி, சரி வாயை மூடு. எல்லாம் எனக்குத் தெரியும். ஸீதாராமன் நம்மாத்துப் பிள்ளைதானே! ஊரார் ஆத்துப் பிள்ளையோ? என்ன இருந்தாலும் நீ பேசாதே. ஊர் வார்த்தையை நம்பாதே. எல்லாம் சிவராமன் பண்ணிவிட்ட புரளி. எனக்கு உண்மை தெரியும். ஸீதாராமன் வந்ததாகப் போனதாக ஒருவரிடமும் மூச்சுப்பரியாதே! அம்மணியிடம் சொல்லிவிட்டாயல்லவா?"

"ஆனாலும் என்னை அசடாகப் பண்ணுகிறீர்களே! நான் ஒன்றும் சொல்லவில்லை. அவனைப் போலீஸில் தேடுவதாக அவள் சொன்னாள். அவள் சொன்னதை நான் காதில் வாங்கிக்கொண்டேன்"

'அதைமற்றொரு காதால் விட்டு விடு, வெறும் பொய்! இரண்டு மூன்று நாளைக்குப் பேசாமலிரு. பிற்பாடு எல்லாம் சரியாகப் போய்விடும்"

* * * * *

சேஷு சாஸ்திரிகள் கதவைத் தாளிட்டுக்கொண்டாலும் ஊரில் இருப்பவர்கள் அவரை விடுகிறதாயில்லை. புருஷர்களும் பெண்டுகளும்அளவில்லாசிரத்தை எடுத்துக்கொண்டு கேடு விசாரிக்க வந்தார்கள். சேஷு சாஸ்திரிகளோ, வேம்புவோ வந்தவர்களுக்குச் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. வந்தவர்கள்தான் விதம் விதமாய் சமாசாரங்களைக் கொட்டி அளந்தார்கள். அதில் சிலர் சீனு வாத்தியாரிடம் நேரில் பேசிக்கொண்டிருந்தவர் என்பதால் புராணாகமங்களை மேற்கோளாகவுடைய சமயத்தவர்கள் போல் அதிகம் பெருமையுடன் அறிவை விளக்கினார்கள். மற்றும் சிலர் சிவராமனையேகண்டு பேசித் தெரிந்துகொண்டவர்களாதலால் வேதத்திலேயே வாக்யங்களை ஆதாரமாகக்காட்டி வாதிக்கும் மதாசாரியர்கள்போல் உன்னதமான ப்ராமாண்யத்தைப்பெற விரும்பினார்கள்.

இவர்கள் கொண்டுவந்து கொட்டிய குப்பைகளில் சேஷுவாத்தியார் தனக்கு உபயோகமுள்ள இரண்டொரு தகவல்களைமட்டும் பொறுக்கி எடுத்துக்கொண்டார். சீதாராமன் பட்டணத்தைவிட்டு முதல் நாளே புறப்பட்டுவிட்டது நிச்சயமாய் ஏற்பட்டது. மணி ஊரில்தான் இருக்கிறார் என்பது தெரியவந்தது.

சிவராமனை சேஷு சாஸ்திரிகள் பார்க்கவிரும்பவில்லை. அவரை விசாரிக்கவேண்டுமானாலும் மணி மூலம் விசாரிக்க வேண்டுமென்று நினைத்தார்...மணிக்கு இந்த விஷயங்கள் காதில் எட்டாதிருக்குமா! அவன் ஏன் வரவில்லை? தன்னிடம் கோபமா? மனஸ்தாபமா! கடிதாசை உடைத்துப் பார்த்திருக்கமாட்டார். மதராஸ் போயிருந்தாரே! அங்கு உள்ள நிலைமையைப்பற்றி என்ன தெரிந்துகொண்டார்! எப்போது திரும்பிவந்தார்? சீதாராமன் ஒரு வேளை அவரிடம் வந்து மறைவில் இருக்கலாமோ? ...எதற்கும் மணியைப்பார்த்தாலொழிய மேலே ஒன்றும் ஓடாதுபோலிருந்தது சேஷு சாஸ்திரிகளுக்கு.

அஸ்தமன வேளைக்கு சாஸ்திரிகள் மணியிடம் சென்றார். அவருக்கு தான் சில தினங்களுக்கு முன் மணியிடம் பற்றில்லாமல் பேசியதும், அவரை நிராகரித்து ரகசியக்கடிதம் எழுதியதும், அந்தக்கடிதம் மணியிடமே அகஸ்மாத்தாகச் சிக்கிக்கொண்டதும் மனதில் உறுத்தாமலில்லை. இருந்தாலும் காரியத்தின் முடையை உத்தேசித்து மிக்கத் தாழ்ந்து போகும் தீர்மானத்துடன் அவர் புறப்பட்டார். பிள்ளையை விபத்திலிருந்து நீக்கிக் குலப்பெயரையும் அபவாதத்திலிருந்து விடுவித்து அந்தச் சமயத்தில் உதவ மணியைத் தவிர சமர்த்தரோ, ஆப்தரோ வேறு ஒருவர் அவருக்கு உலகத்தில் இருப்பதாய் புலப்படவில்லை.

சாஸ்திரிகள் சரணாகதி ஸங்கல்பத்தோடுகூடிய தீனனான பக்தனைப்போல் மணியை வந்தடைந்தார், புலம்பினார், அழுதார், கெஞ்சினார், கதறினார் நீயே கதி என்று குப்புறப்படுத்தார்.

மணி, தான் மதராஸ் போகவில்லை என்றும் கடிதம் மட்டும் போட்டதாயும், அதற்குப் பதில் அன்று காலையில் வந்ததாகவும் சொல்லி ஸீதாராமனின் பதிலைக் கொண்டுவந்து காண்பித்தார். தனக்கு வேறு ஒரு தகவலும் தெரியாதென்றும் கூறிவிட்டார். மேலும், சிவராமன் வார்த்தைகளை முழுதும் நம்பி விடமுடியாதென்றும், ஸீதாராமன், சிவராமன் பறையறிவிக்கும்விதமாய் ஒரு நாளும் நடந்து கொள்ளக் கூடியவனல்லவென்றும் திடமாய் வாதித்தார்.

"மணி! நீ சொல்லுகிறபடிதான் நானும் நினைக்கிறேன். ஆனால் ஸீதாராமன் ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் திடீரென்று புறப்பட்டுப் போனவிடம் தெரியாமல் போயிருப்பதைப் பற்றி என்ன நினைக்கிறது?"

"எனக்கு என்னமோ, அத்திம்பேரே! அதிலேயே சந்தேகந்தான். அப்படி ஸீதாராமன் சொல்லிக்கொள்ளாமல் ஓடிப்போயிருந்தால் வெங்கிட சுப்பையர் நமக்கு ஒரு தந்தி அடித்திருக்க மாட்டாரா? ஸீதாராமன் அங்கேயேதானிருக்கிறான் என்று நான் நினைக்கிறேன். சிவராமன் ஊருக்குப்புறப்படுமுன் அவன் காலேஜிலிருந்து வீட்டிற்கு வரத் தாமதித்திருக்கலாம். காலேஜ் பிள்ளைகளுக்கு எவ்வளவோ வியாபகங்கள்! டிராமா, கூத்து ஏதாவது காலேஜில் நடந்திருக்கும் அல்லது இரண்டு பையன்களாகச் சேர்ந்து காலேஜிலிருந்தபடியே நேராக சினிமாவுக்குப் போயிருக்கலாம். சிவராமன் 8, 9. மணிக்கு ரயிலுக்குப் புறப்பட்டிருக்கிறார். அதற்குள் அவன் வராததுபற்றி இவர் கதை கட்டியிருக்கிறார் என்று தோன்றுகிறது. சிவராமனின் இறுமாப்பும், பொய் பித்தலாட்டங்களும் யாருக்குத் தெரியாது! அவனுக்கு வெகு காலமாகவே ஸீதாராமனிடம் அசூயை. இவன் வெங்கிடசுப்பையர் ஆதரவில் இருப்பதிலேயே அவனுக்கு க்ஷாத்திரம். உங்களைப்பற்றியும் எவ்வளவு அவதூறாகப் பேசியிருக்கிறான்? சீனு வாத்தியார் மஹா விஷமி. ஊரில் ஒருவன் வாழச் சகிக்கமாட்டார். அவருக்குக் கொஞ்சம் இடம் கிடைத்தால் போதாதா? ஊரான் வைக்கோல் போரில் நெருப்பு வைத்து விட்டுச் சொக்கப்பானை கொண்டாடும் பேர்வழி அல்லவா அவர்! எனக்கு என்ன தோன்றுகிறதென்றால், இன்றையதினம் ஸீதாராமனிடமிருந்து சாதாரணமாகவே கடிதம் வந்திருப்பதாலும், வேங்கிட சுப்பையரிடமிருந்து தந்தியொன்றும் வராததாலும் ஸீதாராமன் எப்போதும் போல் அவ்விடமே சௌக்கியமாய் இருக்கிறான் என்றுதான் ஊகிக்கத்தகுந்தது என்பதே. ஆகையால் வீண் கவலைப்பட வேண்டாம். நாளை ஏதாவது தபால் வருகிறதோ என்று பார்க்கலாம்—" என்றவாறு மணி அத்திம்பேருக்குச் சமாதானம் சொன்னார்.

சேஷு சாஸ்திரிகள், ரூபாய் ஆயிரம் மோசடி செய்யப்பட்டவதந்தி மூலமில்லாமல் கிளம்பாதென்றும், ஊகங்கள் செய்துகொண்டு காலம் கடத்துவது தகாதென்றும் ஒருவேளை விபரீதமாகவே ஏதாவது நடந்திருந்தால் அதன் பின்னே தொடரும் அனர்த்தங்கள் குடும்பத்தையே அதோகதிக்குக் கொண்டுவந்துவிடும் என்றும், உடனே யதார்த்தத்தை நேரில் கண்டறியவேண்டுமென்றும் பலமாக வற்புறுத்தினார். ஸீதாராமனை பால்யத்தில் வாத்ஸல்யத்துடன் வளர்த்ததாலும், அவனுக்குக் காவ்யபாடம்வரை போதித்து விற்பன்னனாக்கியதாலும் அவனை ஸரஸ்வதிக்கு வரனாக உத்தேசித்திருப்பதாலும் மணியிடம் தன் பிள்ளையை ஒப்புவித்துவிட்டதாயும் மணி பார்த்து எது சொன்னாலும், செய்தாலும் தான் கட்டுப்படுவதாயும் ஸீதாராமனை உடனே அழைத்து வந்து அடுத்த மாதத்திலேயே ஸரஸ்வதியைக் கொடுத்து விவாஹம் செய்து வைத்து ஊரோடு இருக்கச் செய்துவிட வேண்டுமென்றும், அவனுக்குப் பரம்பரைவித்யை வந்தால்போதுமென்றும், ஆங்கிலப்படிப்பு நன்மைபயக்கவில்லை என்றும், அவன் பட்டணம் போகத்தான் அனுமதித்தது அறியாமை என்றும் அதன்பலனாகவேதான் கவலைகளுக்கும் துக்கத்திற்கும், அவமானத்திற்கும் தள்ளாத வயதில் தான் பாத்திரமாகி வருவதாயும், இனி புத்தி வந்ததாயும் பற்பல ஸங்கல்பவிகல்பங்களை சேஷு சாஸ்திரிகள் சரமாரியாகத் தொடுத்து ஒருயாமம் புலம்பினார்.

கடைசியாக மணியை அன்று இரவே பட்டணம் புறப்பட்டுப் போகும்படிக்கு நிர்ப்பந்திக்கலானார். பணம் ஈடு செய்யவேண்டி வந்தால் அதையும் மணிதான் செய்ய வேண்டுமென்றும், தன் மாப்பிள்ளைக்கு வரதக்ஷிணை கொடுத்ததாய்நினைத்துக்கொள்ள வேண்டுமென்றும் தன்னிடம் பைசா காசு கிடையாதென்றும், தான் வசிக்கும் வீடுகூட ஆயிரம் ரூபாய் பெறுதென்றும் பரதவித்தார்.

மணி அத்திம்பேர் நாலு நாளைக்குள் இறங்கிய இறக்கத்தை நினைத்து மனதிற்குள் சிரித்துக் கொண்டார்.

சேஷு சாஸ்திரிகள் மணியை. பட்டணம் போக ஸ்டேஷனுக்கு வண்டியில் ஏற்றிவிட்டுத் தான் வீடு திரும்பினார். ஆனால் மணி ஸ்டேஷனுக்குப் போனதும் திருச்சிக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டார். பட்டணம் போய் அவர் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுமில்லையல்லவா?



ஸரஸ்வதியின் கல்யாண விஷயமாய் கோபாலனை ஒரு மாதத்திற்கு லீவு எடுத்துக் கொண்டு வரும்படி நேரில் அவனை அழைக்க மணி புறப்பட்டார்.

(தொடரும்)

ஐக்ய முன்னணி

எல்.ஜி.ரி

நான் குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரருடைய திருநாமம் தனபதி. மனைவியின் பெயர் 'குண்டம்மாள்'. அருந்தவப் புதல்வனின் நாமதேயம் 'குஞ்சப்பா'. தனபதிக்குப் பொருள் ஈட்டுவது ஒன்றே வாழ்க்கையின் குறிக்கோள். வஞ்சனை பொறாமை குணங்கள் நிறைந்தவளும், பொருளாதார உரிமை பெற்றவளுமான குண்டம்மாளுக்கு அயல் வாழ சகிக்காது. பிற நிந்தனையும், தற்பெருமையும் கலந்த டாம்பீகப் பேச்சில் பற்றுள்ளவள். தவங்கிடந்து அடையப்பெற்ற புத்திர ரத்தினமோ, உண்மையே அறியாத, திருட்டுக் குணம், நிறைந்துள்ள பலே புளுகன்.

இம்மூவருடைய திருவிளையாடல்களால் நான் அடைந்த கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. நான்கு வருஷங்களுக்கு முன், நாலு ரூபாய் வாடகையில் குடி வந்த நான் இப்பொழுது மாதம் பதினாறு ரூபாய்கள் வாடகை செலுத்தும் பாக்கியம் பெற்றுள்ளேன். ஆயினும் இது குறித்து விசாரிக்கும் வெளி நண்பர்களுக்குமட்டும். 'வாடகை இல்லை. இலவச இடவசதி' என்றுதான் இதுவரை நானும் தனபதியும், கூறி வருகிறோம். இவ்விஷயத்தில், எங்களது ஐக்கிய முன்னணி பாராட்டத்தக்கதல்லவா?

* * *

அவர்கள் வீட்டிற்குவரும விருந்தினர்களது பெட்டி பைகளைப் பரிசோதனை செய்து, அவர்கள் திரும்பிச் செல்லுவதற்கு ரயில் சார்ஜோ பஸ் சார்ஜோ மட்டிலும் வைத்துவிட்டுப் பாக்கித் தொகையை 'அபேஸ்' செய்துவிடும் குஞ்சப்பா, மேற்படி பெட்டி, பை, ஆகியவற்றை ஒருவரும் அறியாமல் எங்கள் அறைக்குள் வைத்துவிட்டு அன்று முழுவதும் வீட்டுக்கே வரமாட்டான். எங்களை நன்கறிந்துகொண்ட விருந்தினர்கள், குழந்தையையும், பெற்றோரையும் ஒரு அத்தியாயம் புகழ்ந்துவிட்டு ஊர் திரும்புவர். மறுநாள் சைக்கிள் சவாரியில் சம்பாதித்துக்கொண்ட படுகாயங்களுடன் காட்சியளிக்கும் குஞ்சப்பாவை, சிகித்சையின் பொருட்டு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு என்னுடையதாகும். அவனது அருமைக் குணங்களை நன்கு அறிந்துள்ள எனது உற்றாரும், நண்பர்களும், அச்சமயம் எங்களுடைய ஐக்கிய முன்னணியைக் கண்டு மகிழ்ச்சியுறாமல் இருக்கமுடியுமா.?

* * * *

நாங்கள் இரண்டுநாள் வெளியூர் சென்று திரும்பினால், அதற்குள்ளாக பூட்டப்பெறாத சமையல் உள் அலமாரியிலிருந்து, காப்பிப் பொடி, சர்க்கரை, நெய் டப்பாக்கள், காலியாக தரிசனம் அளிக்கும். அச்சமயம் என் மனைவி என்னிடம் பார்த்தீர்களா இந்த பூனை பண்ணியிருக்கும் அநியாயத்தை?, பத்து நாளைக்கு வரக்கூடிய, நெய், ஜீனி காப்பிப் பொடி எல்லாவற்றையும் விழுங்கிவிட்டுப் போய்விட்டதே! 'பூனைப் பொறி' ஒன்று அவசியம் வாங்கிவிடுங்கள். அடுத்த தடவை ஊருக்குப் போகும்போது ஏதாவது வழி செய்துவிட்டுத்தான் போகவேண்டும்' என்று குண்டம்மாளின் காதுகளில் விழுமாறு உரக்கக் கூறி கலகலவென நகைப்பதும், அதற்குப் பதிலாக நான் "அதற்கென்ன? மூணு மூணு டப்பாவிலேயும் தேள்களைப் பிடித்து போட்டு விட்டுப் போனால் சரியாகப் போகிறது" என்று சொல்லுவதும் சர்வ சகஜம். வேறு விதமாகச் சொன்னால் குண்டம்மாளது விசுவரூப தரிசனம் கிட்டும். இதைத்



தவிர்க்கவேண்டுமானால் மேற்கண்டவாறு சம்பாஷணை நடத்திவிட்டு மாலையில் குண்டம்மாள் சகிதம். எனது மனைவி கோயிலுக்குச் சென்று வருவது அவசியம் கடவுள் சன்னிதானத்தில் இவர்களது ஐக்கியமுன்னணியைக் காண நேரும் பெண்மணிகளுக்கு வியப்பு ஏற்படுமா?

* * *



அறுபது வயதிற்கு மேற்பட்ட தனபதி — குண்டம்மாள்; தம்பதிகளது, பரஸ்பர அன்பு, நம்பிக்கைக்கு அடையாளமாக, தனபதியின் கையில் எப்பொழுதும் ஓர் 'சாவிக் கொத்து' நடனமாடிய வண்ணம் இருக்கும். அந்தக் கொத்தில், எரிதுரும்புகள் சேமிக்கப்பட்டிருக்கும் 'ஸ்னான அறை' சாவி முதற்கொண்டு, உடுப்புகள் வைக்கும் பீரோ, சமையல் பதார்த்தங்கள் நிறைந்த அலமாரி, பணம்,காசு, பாங்க் செக், பாஸ்புக், வைக்கப்பட்டிருக்கும் மேஜை, அழுக்குத் துணிகள் அமைக்கப் பெற்ற 'ராக்', அரிசி, பருப்பு, புளி, மிளகாய் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் மச்சின் சாவி வரை, பல சாவிகள் கோக்கப்பட்டிருக்கும். பிரதி மாதமும் மூன்று தேதிக்குள்ளாக வாடகை பணம் எனது 'பர்ஸி'லிருந்து, தனபதியின் ஏந்திய கைகள் மூலமாய் அவரது மேஜைக்குள்ளும், அடுத்த கணமே, அவரையுமறியாது அந்தத் தொகை குண்டம்மாள், குஞ்சப்பாவினது மூடிய கைகளுக்குள்ளும் போய்ச் சேராவிடில் நான்காவது தேதி காலையில் வாசற் திண்ணையில் என்னுடன் தனபதியும், சமையல் அறையில் என் மனைவியுடன் குண்டம்மாளும் 'வறுமைசூழ்' படலத்தை வாசிப்பார்கள்.—

"எண்ணெய் ஜாடிகள், அஞ்சறைப்பெட்டி எல்லாம் காலி. கடையிலே இருந்து மிளகாய் வற்றல் வாங்கி வந்து தூள் அரைத்து, குழம்பு சமைத்து காலேஜுக்குப் போகும் குழந்தைக்குச் சாதம் போடணும், ஆறு ரூபாய் விலையிலே ஒரு புஸ்தகம்கூட வாங்கணுமாம். பணம் இருக்கிற இடமோதெரியவில்லை. இருந்து இருந்து ஒரு பிள்ளையைப் படிக்கவைக்கிறதற்கு இவ்வளவுபாடு'' என்று குண்டம்மாளது ஓலமும், "எனக்கு ரொம்ப செலவு ஸார்! ஆறு மாசமாக உத்தியோகம் கூட இல்லை-வாடகைப் பணம், பால் பணம் இவற்றைக் கொண்டுதான் காலக்ஷேபம் ஆகணும்—நீங்கள் எப்படியாவது இன்று மாலைக்குள் கொடுத்து விட்டால்தான் தேவலை'' என்று தனபதியினது பிரலாபமும், மேற்படி காதலர்களின் கருத்து ஒற்றுமையை நன்கு விளக்குவதுடன், வாடகை வசூலில் அவர்களது ஐக்கியமுன்னணியின் சக்தியையும் அறிவிக்கவில்லையா?

இவ்வளவு தொல்லைகளும் ஜாகை வசதிக் குறைவின் காரணமாகவே ஏற்பட்டுவிடுவதால், அதிலிருந்து விடுவித்துக்கொள்ள,நிரந்தர குறைந்த சம்பள ஊழியர்கள், என்ன செய்யமுடியும்.?

கூட்டுறவு சங்கங்கள் மூலம் பதினாயிரம் ரூபாய் ஐயாயிரம் ரூபாய், செலவில், 'ஏ' டைப், 'பி' டைப் பங்களாக்கள் கட்டி அளிக்க முன் வந்திருக்கும் சர்க்கார், குறைந்த சம்பள ஊழியர்களுக்கும் ஐநூறு ரூபாய் செலவில் குடிசைகள் கட்டிக் கொடுத்து பத்துவருஷங்களில், தொகையை ஈடு செய்துகொள்ளும் பணியை ஏற்றுக் கொண்டால், எண்ணற்ற ஏழைமக்கள் பயனடைய மாட்டார்களா? இந்த மாதிரி ஏழைகளும், சர்க்காரும் கலந்த ஐக்கியமுன்னணி,பொது ஜன சர்க்கார் ஆட்சி செலுத்து கையில் சாத்தியமல்ல எனக் கூறமுடியுமா?.

——

மாதர் மகா சபை

குங்குமம்

'ஏண்டி, என்ன யோசனை? ஏன் நின்று கொண்டிருக்கிறீர்கள்? பீச்சுக்குப் போகவில்லையா?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'போகப் போகிறோம் மாமி' என்றாள் சரோஜா.

'மணி ஐந்தரை ஆயிற்றே' போகிறதானால் பொழுதோடு போய்வரவேண்டும்.

'ரமா வருகிறேனென்று சொன்னாள். அவளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்.''

'ரமாவுக்காக காத்துக் கொண்டிருக்கிறீர்கள்! அப்படியானால் நீங்கள் பீச்சுக்குப் போன மாதிரிதான்' என்று இடி இடி என்று சிரித்தாள் ருக்குவின் மாமியார்.

'எதற்குமாமிசிரிக்கிறீர்கள்?' என்றாள் பானு.

'ரமா வருகிறேனென்று சொன்னாள் என்று அவளுக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறீர்களோ, அதற்குத் தான் சிரிக்கின்றேன்.'

'ஏன்,' ரமாவுக்காகக் காத்துக்கொண்டிருக்கக் கூடாதா என்ன?'

'அவள் இத்தனை நாழி பீச்சில் அகமுடையானுடன் 'டாக் டாக்' என்று நடந்துகொண்டிருக்கமாட்டாளா?'

'ரமாவின் அகமுடையான் தானே?' என்றாள் சரோஜா.

'என்னடி அப்படிச்சொல்லிவிட்டாய்? ரமா கனவு கண்ட படியே மூக்கும் விழியும் செக்கச் செவேலென்று மன்மதன் மாதிரி இருக்கிறான் அகமுடையான். நன்றாகப் படித்திருக்கிறான். நல்ல உத்தியோகத்திலும் இருக்கிறான். அத்துடன் ரமாவினிடத்தில் அப்படிப்பட்ட ஆசையாக இருக்கிறானும். இன்னும் என்னடி வேண்டும் அதற்கு?'

'எல்லாம் சரிதான்.ரமாவைக் கேட்டுப்பாருங்கள். அகமுடையானுடன் பீச்சுக்குப் போகிற பெருமையை.'

'ஏன், என்னவாம்?'

'ரமாவின் அகமுடையான் நல்ல ரசிகனும். சிரிக்கச் சிரிக்க அழகாகப் பேசுவானும். வேடிக்கை வேடிக்கையாகக் கதைகள், கட்டுரைகள் எல்லாம் எழுதுவானும், எல்லாம் தான் உண்டு. ஆனால் ரொம்ப ரொம்ப சங்கோஜியாம்பாவம்! பீச்சுக்குப் போனால் எல்லாரையும்போல அலையோரத்தில் ரமாவும் அதுவும் நடைப் போட்டி போடுகிறமாதிரி டாக் டாக் என்று நடந்து போகலாமே அல்லது ரமாவின் கையைப் பிடித்துக் கொண்டு அலையில் நின்று கொண்டு 'ஜலக்கிரீடை' செய்யலாம். அல்லது மணலில் இரண்டுபேரும் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டோ, அல்லது ரமாவின் மடியோரத்தில் அவன் தலையை வைத்துப்படுத்துக்கொண்டோ கடலையைக் கொரித்துக்கொண்டு உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கலாமே, அப்படியெல்லாம் ஒன்றும் செய்யாதாம். பீச்சுக்குப் போனவுடனே யாருமில்லாத இடமாகப் பார்த்து ஒரு ஓரமாகப்போய் உட்கார்ந்து விடுமாம். ரமாதான் கொஞ்ச நாழி தனியாக அலையில் போய் நின்றுகொண்டிருக்குமாம்.

அதற்குள் கரையிலே அந்த 'சமத்து' (ரமாவின் அகமுடையான்) நாலு சினேகிதர்களை அழைத்துக் கூட உட்காரவைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருக்குமாம். கொஞ்ச நாழி கழித்து ரமா வந்து பார்த்தால் அதன் அகமுடையானைச் சுற்றிப் பத்துபேர்கள் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருப்பார்களாம். ரமா தனியாக கொஞ்ச தூரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்குமாம். பொழுது போனவுடனே

‘உம், போகலாமா?’ என்று ரமாவைப் பார்த்துச் சொல்லிக்கொண்டே எழுந்திருக்குமாம் அந்த சமத்து. அடடா! ஸாரி தெரியாமல் ‘டிஸ்டர்ப்’ செய்துவிட்டோம்,’ என்று தம்பதி சகிதமாய் அது வந்திருப்பதை அப்பொழுதுதான் தெரிந்துகொண்ட சிநேகிதர்கள் வருத்தம் தெரிவித்துவிட்டுச் செல்வார்களாம். எங்கஆத்துக்காரனும் கச்சேரிக்குப் போகிருன் என்கிற மாதிரி அகமுடையானுடன் பீச்சுக்குப் போகிற பெருமை தானும். போகும்போது ஒன்ருகப் போகுங்களாம். வரும்போது ஒன்ருக வருங்களாம். பீச்சுக்குப் போனதும் இது ஒரு மூலையில், அது ஒரு மூலையில்தானும், என்ன பீச்சு வேண்டியிருக்கிறது மாமி!’

‘ஏன்? எல்லாரையும்போல் இரண்டும் பீச்சில் ‘கலகலப்பாய்’ இருந்தால் என்னவாம்?’

‘அவ்வளவு சங்கோஜம்மாமி யாராவது தெரிந்தவர்கள் பார்த்துவிட்டால்?’

‘பார்த்து விட்டால் என்னவாம்? அந்நியரா? அயலாரா அகமுடையான் பெண்டாட்டி தானே?’ முன் பின் தெரியாததுகளையெல்லாம் வழியில் திடீரென்று சிநேகம்செய்துகொண்டு நிர்ப்பயமாய்க் கையைக் கோத்துக்கொண்டு டாக்டாக் என்று போய்க்கொண்டிருக்கிறதுகள். ‘சொந்த’ அகமுடையான். பெண்டாட்டி சங்கோஜப்படுகிறதுகள்! நல்ல வேடிக்கைதான் இது!

‘அப்படி சங்கோஜப்படுகிறவர்கள் அங்கே சிநேகிதர்கள் யாரையும் கண்ணெடுத்துப் பார்க்கக்கூடாது. அப்படித் தற்செயலாய்ப் பார்த்துவிட்டாலும் பார்க்காததுபோலத்தான் போய்க்கொண்டிருக்க வேண்டும். சிநேகிதர்களும் நல்லரசிகர்களாக இருந்தால் தம்பதி சகிதம் போய்க்கொண்டிருக்கும்போது பார்த்தாலும், பார்க்காததுபோல் நடந்துகொண்டிருக்க வேண்டும்’ என்ருள் வசந்தா.

‘சில அசடுகள் இருக்கிறதுகளடியம்மா. நாம் பார்க்காததுபோல் நடந்துகொண்டிருந்தால் கூட கை தட்டிக் கூப்பிட்டு நிற்க வைத்து; ‘ஹைதராபாத் சரணுகதி அடைந்து விட்டதாமே. ரஸ்வியை என்ன செய்வார்கள்? ஹைதராபாத் தனி சமஸ்தானமாகவே இருக்குமா? துண்டுகள் போட்டு அந்தந்த மாகாணங்களுடன் பாஷாவாரியாகச் சேர்த்து விடுவார்களா?’ என்று தலைபோகிறமாதிரி ராஜீய விஷயங்களைத் தொணதொணவென்று பேசிக்கொண்டு கூடவே வந்துகொண்டிருக்குங்கள். எங்களவருக்கு (அகமுடையானுக்கு)த் தெரிந்த பேர்வழி ஒன்று இருக்கிறது. அது எப்படித்தான் தெரியுமோ அதற்கு? வேட்டை நாய்கள் மோப்பம் பிடிக்கிற மாதிரி நாங்கள் பீச்சுக்குப் போவதை எப்படியோ தெரிந்துகொண்டு கூடவே வந்து பிராணனை உண்டு இல்லை என்று வாங்கிவிடும். ராமண்ணுவைப் பார்த்து விட்டால் நடுக்கம்தான் எங்களுக்கு. இப்படியும் சில அசடுகள் இருக்கத்தான் இருக்கிறதுகள்,’ என்ருள் சரோஜா.

‘அப்படிப்பட்டதுகள் கிட்டேயெல்லாம் தாட்சண்யமே பார்க்கக்கூடாது. ‘வருகிறேன். அப்புறம் வீட்டுக்கு வந்து சாவகாசமாகப் பேசிக்கொள்ளலாம். மன்னித்துக்கொள்ளுங்கள்’ என்று நாசூக்காகப் பதில் சொல்லிவிட்டு நடந்துகொண்டே இருக்க வேண்டியதுதான். ஒரு வேடிக்கையைச் சொல்ல மறந்து விட்டேனே. போன வாரம் எங்கள் நாத்தனுரகத்துக்குப் போயிருந்தேன். நாத்தனுருடைய பேத்தியாம். இன்னும் மூன்று வயது பூர்த்தியாகவில்லை. உட்கார்ந்து பேசிக்கொண்டேயிருந்தோம். திடீரென்று ‘இப்போ சம்பத்து வரப்போருனே என்றது.’ ‘யாரது, சம்பத்து’ என்றேன்.’ எங்க ஆம்படையான்’ என்றது. ‘சம்பத்து எங்கே போயிருக்கிருன்?’ என்றேன். ‘ஆபீசுக்குப் போயிருக்கான்’ என்றது. ‘சம்பத்து உனக்கு என்ன வாங்கிக் கொண்டுவருவான்?’ என்றேன். ‘பிஸ்



“......அகமுடையானைச் சுற்றி......”



"...................எங்க ஆம்படையாள் என்றது.........................."

கோத்து, பப்பூட்டு எல்லாம் வாங்கிண்டு வருவானே' என்றது. அதற்குள் அதனுடைய தாயார் அதைப்பார்த்து 'ஸரோ! சம்பத்து வந்து உன்னை எங்கே அழைத்துக் கொண்டு போவான்!' என்றுள்.

'பீச்சுக்கு' என்றது. 'பீச்சுக்குப் போய் என்ன செய்வீர்கள்? என்றுள். கையைப் பிடிச்சிண்டு அலையிலே வேடிக்கையாக நிப்போம்' என்றது. அப்புறம்?' என்றுள். அப்புறம் மாங்கா, தேங்கா, பட்டாணி சுண்டல் எல்லாம் வாங்கி சாப்பிட்டு வந்துடுவோம்' என்றது. நான் பிரமித்துப்போய்விட்டேன். முன்பெல்லாம் ஆம்படையான் பெண்டாட்டி என்ற வார்த்தையை எடுத்தால் பசங்கள் 'ஒரு மைலுக்கு ஒரு மைல் ஓடுங்கள் வெட்கத்தால். இப்பொழுது என்னவென்றுல்' முளைத்து இரண்டு இலை விடவில்லை. அதற்குள் கற்பனை உலகில் ஸஞ்சரிக்கிறதுகள். வரவர பெண்களுக்கே கொஞ்சம் தைரியம் அதிகரித்துக்கொண்டு வருகிறதுபோலிருக்கிறது என்றுள் ருக்குவின் மாமியார்.

'நீங்கள் சொல்வதும் வாஸ்தவந்தான். இல்லையென்று சொல்லவில்லை. ஆனுல் பெண்களிலும் ரொம்ப சங்கோஜப் பிராணிகள் இல்லாமலில்லை. எங்கள் பக்கத்தகத்தில் குமுதா என்று ஒரு பெண் இருக்கிறது. அதன் அகமுடையான் ஒரு குஷிப்பேர்வழி. அகமுடையாளுடன் ஜோராக பீச்சுக்கு, சினிமாவுக்கு, சங்கீத கச்சேரிகளுக்கெல்லாம் போய் வர வேண்டுமென்று ஆசை. 'குமுதம்; என்னலேட் பண்ணுகிருய்? உம், கிளம்பு. நேரமாயிற்று' என்று தாடையை லேசாகத் 'தட்டி கிட்டி' கொஞ்சிக் குலாவவேண்டுமென்றெல்லாம் ஆசை. ஆனுல் குமுதம் இடிச்சப் பிள்ளையார் மாதிரி குனிந்த தலை நிமிராது. வெளியில் எங்காவது கிளம்பினுல் அகமுடையான் பக்கத்தில் சிரிப்பு வரா விட்டால் கூட, நாலுபேருக்காகவாவது இடி இடி என்று சிரித்துச் சவுடால் அடித்துக்கொண்டுபோகிறதுகளேசிலதுகள் அந்தமாதிரி போகவே போகாது. அகமுடையானுக்கு நாலு அடி பின்னுலேயே, தலையைக் குனிந்து கொண்டு ஒய்யார நடைபோட்டுக்கொண்டு பழங்காலத்துப் புதுமாட்டுப்பெண்கள் போகுங்களே அதுமாதிரி போய்க்கொண்டிருக்கும். அதன் அகமுடையானுக்கு இது விஷயத்தில் ரொம்ப குறை பாவம்! என்ன செய்கிறது! ஒன்று அப்படி என்றுல் ஒன்று இப்படி இருந்து கொண்டுதானிருக்கிறது என்றுள் பானு.

நிஜமாகவே சொல்கிறேன். முன்பெல்லாம் நான் நினைக்கிறதுண்டு. என்ன இப்படிக் கொஞ்சம் கூட லஜ்ஜை என்பதே இல்லாமல் மிருகம்மாதிரி போய்க்கொண்டிருக்கிறதுகளே என்று. பாவம்! நாளெல்லாம் ஆபீசில் செக்குமாடு மாதிரி



"என்னுங்க போங்க! குடிங்களுக்கு நன்மை பண்ணப் போரேம்னு சொல்லிட்டு அடியோட நம்ப குடியை கெடுத்துட்டாங்களே இந்த காங்கிரஸ் மந்திரிங்க........."

"அப்போதானே நாம்ப குடியும் குடித்தனமுமா சேமமா இருக்கலாம்........"

உழைக்கிறுன். காலையில் எழுந்தவுடனே பத்திரிகை படிப்பதற்கும், பிறகு ஸ்னனம் செய்துவிட்டு அவசர அவசரமாய் இரண்டு வாய் அள்ளிப்போட்டுக்கொண்டு ஆபீஸ் போவதற்கும், பகலெல்லாம் ஆபீஸில் உழைத்துவிட்டு ஓய்ந்து போய், வீட்டுக்கு வந்து சேர்ந்தால் வரும் சிநேகிதர்களுடன் கொஞ்சநாழி ஆபீஸ் குறைகளைப் பற்றிப் பேசுவதற்கும், பிறகு சாப்பிட்டுவிட்டு அப்பாடி என்று படுக்கையில் படுத்துத் தூங்குவதற்கும் தானே பொழுது சரியாக இருக்கிறது! இருபத்தினுலு மணி நேரத்தில் பெண்டாட்டியுடன் சிறிது நேரம் உல்லாசமாகப் பேச எங்கே ஒழிவுஇருக்கிறது? ஆகவே ஒழிந்தபோது கொஞ்ச நாழியாவது வெளியே உல்லாசமாய்ப் பொழுது போக்கிவிட்டு வருவதுதான் நல்லதென்று தோன்றுகிறது,' என்றுள் ருக்குவின் மாமியார்.

'இல்லாவிட்டால் பைத்தியம்பிடித்துவிடாதா மாமி?' என்றுள் சரோஜா.

'ஆமாண்டியம்மா, ஆமாம். எல்லாம் காலத்தை அனுசரித்துப் போகவேண்டியதுதான். பீச்சுமாத்திரம் கொஞ்சம் மனதுக்கு சாந்தியை அளிக்கக்கூடிய இடந்தான். ஆனுல் ஒரு நியதிமாத்திரம் ஏற்படவேண்டும். தம்பதிகள் உல்லாஸத்தில் சினேகிதர்கள் குறுக்கிட்டுப் பாழ்படுத்தக்கூடாது' என்று ருக்குவின் மாமியார் சொல்லிக்கொண்டிருக்கையில் அங்கே ரமா வந்து சேர்ந்தாள்.

'வாடியம்மா, வா, எல்லாம் உன் பேச்சுதான் நடந்துகொண்டிருக்கிறது. இனி நீ எங்களுடன் வராதிருப்பதற்கான உபாயத்தைப்பற்றித்தான் பேசிக்கெண்டிருந்தோம். என்ன விழிக்கிருய்! ஏன், என்ன என்றெல்லாம் இங்கேயே கேட்டுவிடாதே. எல்லாம் பீச்சுக்குப்போய் வைத்துக்கொள்ளலாம். ஏற்கெனவே நேரமாகிவிட்டது. கிளம்பு, என்று சொல்லிக்கொண்டே சரோஜா முன்னுல் நடந்தாள். மீதிப் பேர்கள் அவளைப் பின் தொடர்ந்தார்கள்.



ஜெனரல் ஆஸ்பத்திரி கிளைவ் வார்டில் மணி எட்டடித்தது. ஆஸ்பத்திரி ஓரமாக ஓடும் மின்சார ரயிலின் 'கடபுடா' ஓசையைத் தவிர வேறு சந்தடியின்றி பயங்கர மௌனத்தில் ஆழ்ந்திருக்கும் அந்தவார்டில் எப்போதாவது சிலர் இருமும் ஒலி மௌனத்தைக் கலைக்கும். வலிபொறுக்காது வேதனையால் வீறிடும் சிலரின் ஒலி நிசப்தத்தைக்குலைக்கும். அந்த மாதிரி சமயங்களில் எனது உறக்கம் குலைந்து எழுந்து உட்கார்ந்துகொள்வேன். மங்கலான வெளிச்சத்தில் அடுத்தக்கட்டிலில் ஆயாசம்தீர சின்னகவுண்டன் பீடி பிடித்து புகையை ரகசியமாக விட்டுக்கொண்டிருப்பான். கீழே அவன் மனைவி, துணைக்காக வந்தவள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருப்பாள். இருபதாவது நூற்றாண்டு முதிர முதிர புதுப் புது வியாதிகள் மனிதனுக்கு உண்டாவதுபோல் எனக்கும் முழங்காலில் எலும்பு சம்பந்தமாக ஏதோ பெயர் கொடுத்து ஆப்பரேஷன் செய்ய கிளைவ் வார்டில் கிடத்தினார்கள். வந்து மூன்று நாட்களுக்குள்ளேயே ஆஸ்பத்திரி வாழ்க்கை போதும் போதும் என்றாகி விட்டது. பக்கத்துப் படுக்கையில் சின்னக்கவுண்டனும், அவன் மனைவியும் இல்லாவிடில் நிச்சயம் பயித்தியம் பிடித்த நிலைதான் எனக்கு வந்திருக்கும். "சாமி என்ன வேணுங்க...வலிக்குதா?" என்று அன்பாகக் கேட்பான். பகல் வேளைகளில் அவன் மனைவி அன்பாக உபசரணைகள் செய்வாள். மாலைஐந்தானதும், எங்கள் வீட்டிலிருந்து மதிப்புக்காகவேனும் வந்து பார்த்துச் செல்பவர்களுக்கும், எந்நேரமும் கணவனுடனேயிருந்து ஆஸ்பத்திரியில் கணவன்படும் வேதனைக்குப் பங்கு கொள்ள வந்திருக்கும் சின்ன கவுண்டன் மனைவியைப் பார்க்குந்தோறும் இதல்லவா உண்மை தொண்டு எனத் தோன்றும் எனக்கு. பேச்சுவாக்கில் "கவுண்டா...கண்ணகி, நளாயினி என்றெல்லாம் ஏட்டில் படித்திருக்கிறோம். இங்கே கண்கூடாக உன் மனைவி இருக்கிறாளப்பா! ஊரிலிருந்து உன்னுடன் ஆஸ்பத்திரிக்கு வந்து இரவு பகல் கண்விழித்து ஒத்தாசை செய்ய வேண்டும் என்று மனைவிக்கு என்ன அக்கரை? எங்கள் வீட்டில் பார். சாயங்காலம் 5-மணிக்கு பிளாஸ்கில் காப்பியுடன் முகத்தில் பவுடர் பூசி பொட்டிட்டு காட்சிசாலையில் பார்க்க வருபவர்கள்போல் வந்து விட்டு முதலை கண்ணீர் விட்டுப் போகிறார்களே," என்றேன் நான்.

தலையணையில் சாய்ந்து படுத்திருந்த கவுண்டன் நிமிர்ந்து உட்கார்ந்தான். முறுக்கிவிடப்படாமல் தாழ்ந்து அடர்ந்து இருக்கும் மீசையும், கூரிய கண்களும், வெட்டிவிடப்பட்ட தலைமயிருமுடைய சின்னக் கவுண்டனின் உருவம் காண்போரைக் கவரும்...

"சாமி...என்ன சொன்னீங்க... இரவு பகல் கண் விழித்து ஒத்தாசை செய்யவேண்டும்" என்று மனைவிக்கு என்ன அக்கரை... என்றீங்களே ரொம்ப சரி அது. மனைவிக்கே அக்கரை இல்லேன்னு மற்றவங்களுக்கு என்ன அக்கரை? இவ இன்னும் மனைவியாகல்லே... அக்னி சாட்சியா தொட்டு தாலி கட்டலே...அவள்மனசின் காரணமாக இப்படி என்னுடன் கஷ்டப் படவேண்டும் 'என்றிருக்கிறது... என்னதான் சொல்லுங்க எல்லாத்துக்கும் இந்தப் பொல்லாத மனசு தான் காரணமுங்க..." என்று கூறிவிட்டு இருமினான் கவுண்டன்.

மனைவியில்லையா அவள்? பின் யாரு. இவ்வளவு அக்கரையாகப் பணிவிடை புரியும் 'பிறர்' கூட இந்த 1948-ல் இருக்கிறார்களா என்று எண்ணி ஆவலுடன் மேற்கொண்டு சமாசாரத்தை எதிர்பார்ப்பவன்போல் கவுண்டன் முகத்தைப் பார்த்தேன். என் குறிப்பை அறிந்துகொண்டவன்போல் சின்னகவுண்டன் மேற்கொண்டு தன் மனதில் இருப்பதை என்னிடம் கொட்டிவிட துணிந்தவன்போல் மெள்ள எழுந்து என் படுக்கையருகேயுள்ள ஸ்டூலில் வந்து உட்கார்ந்தான், அந்த உறங்கும் வேளையில் உரக்கப்பேசி பிறர் தூக்கத்தைக் கெடுக்கவேண்டாம் என்ற எண்ணம்போலும்.

என் கால்வலியையும் ஒரு சில மணிநேரங்கள் மறந்திருக்கலாமென்று எண்ணினேன்.

2

“சாமி. இவ மனைவின்னு...... கட்டின பெண்டாட்டின்னுதான் இதுவரை நினைச்சுண்டிருப்பீங்க. இப்ப நான் அப்படி இல்லைன்னு சொல்லலே. ஆனா கலியாணம்னு ஒரு சடங்கு இருக்கே ‘மஞ்சள் கயிற்றை’ கழுத்தில் முடிந்து போட்டால்தான் உண்மை கணவன்—மனைவின்னு நாடு சொல்கிறது: ஏடு அப்படியே எழுதியிருக்கிறது. எங்களைப்போல் இப்படியிருந்தாலோ ‘ஓடிவந்தவர்கள்’ அன்றுகூறுகிறது சமுகம்.

ஓடிவந்தவர்களாக இருந்தால் பரவாயில்லைசாமி. முற்றும் துறந்தவர்களாகிவிட்டோம் இருவரும். வாழ்க்கையில் வெறுப்பு ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. வாழ்வின் இன்பதுன்பங்களைத் துறந்து விடவில்லை. ஆனால் எனக்காக அவன் பிறந்த வீட்டு சுகங்களையும். மஞ்சக் காணியையும், அவளுக்காக நான் தொழிலையும் பிறர் அன்பையும், துறந்து விட்டோம் சாமி காதலுக்காக ராஜ்யத்தைத் துறந்தார் எட்டுவர்டு ராஜான்னு கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனா ‘காதல்னு’ என்னான்னு எங்களுக்குத் தெரியாது. எல்லாம் ஏட்டில் படிச்சதுதான். நானவது எட்டாவதுவரை படிச்சிருக்கேன். ஆனா அது இது கூட படிச்சதில்லை. இயற்கையாக எங்க மனசு ஒண்ணுபட்டுடுத்து.

இவபெயர் பழனியம்மா. கவலையாலும் வேளா வேளைக்கு சரியான சாப்பாடு இல்லாமையாலும் இப்போ வாடி வதங்கி இருக்கா. கொழு கொழுன்னு ராசாத்தி மாதிரி என் கண்ணுக்குப் படுவாள் அவள் அப்போ. எங்க ஊருக்க்குப்பக்கத்திலே காவேரி கரை ஓரமா சின்ன ஊர் இன்னொன்று இருக்குங்க. அதுதான் சாமி எங்க பரம்பரை ஊர், ஊர் மாரியம்மன் கோயிலுக்குப் பூசை செய்வதுதான் எங்க பரம்பரைத் தொழில். அதிலும் பாகம் வேறு. எங்க தாத்தா காலத்திலே கோயில் பூசைக்குப்பாத்யதை கொண்டாடி பெரிய வழக்கு நடந்ததாம். கடைசியிலே பஞ்சாயத்து செய்து எங்க தாத்தா ஆறுமாசமும், எதிர்கட்சிகாரர் ஆறுமாதமும் பூசை செய்ய வேண்டும் என்று திட்டமாச்சு. பொல்லாத வேலை! இதற்குப் போட்டிவேறே. உண்மையா சாமிக்குப் பூசை செய்து தொண்டு செய்ய ஆசை இருந்தா இப்படியா ‘பிரிவினை’ செய்யும்படி வரும். ருசி இல்லாமலில்லை. வருடா வருடம் மாரியம்மன் பண்டிகையிலேயே பூசாரிக்கு ஆளுக்கு ஐநூறுக்கு மேலே வரும்படி கிடைக்கும். அதுவே வருட செலவுக்கு ஆச்சே.

தினம் காவேரிக்கரை பூந்தோட்டத்துக்குப் போய் குடலையில் மஞ்சள், அரளி, மல்லிகை. செவ்வரளி, பத்திரம் இவைகள் பறிச்சுண்டு வரணும். பின் கோயில் மண்டபத்தில் தொடுத்து வைச்சு கதவு திறந்து விளக்கேத்தி வைச்சுட்டுதான் மீதி வேலை. மற்றொரு பூசாரி பூகொண்டு வர ஆள் வச்சிருந்தான். நான் ‘இதுக்கெல்லாமா ஆளு. கால் கடவுள் கொடுத்திருக்கிறவரை அவுங்க அவுங்க வேலையே அவுங்களே செய்யணும்னு ஒரு மைல் நடந்து போவேன் காவேரி கரைக்கு. ஊரிலேயிருந்து குடி தண்ணீருக்குப் பெண்கள் எல்லாம் ஒரு மைல் நடந்து வந்துதான் எடுத்துச் செல்லணும். பட்டணத்துலே வீட்டுக்கு வீடு பைப்பு இல்லாட்டி தெருவுலே பைப்பு. அதுலே தண்ணி எடுக்கவே கஷ்டப்படுகிறார்கள். கிராமத்துலே பார்க்கணுமே பெண்கள் கோஷ்டி கோஷ்டியாக இடுப்பில் குடத்துடன் கிளம்பி, நீர்மொண்டு திரும்பும் காட்சிதான் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாதது.

பூ பறிக்க நான் போவதும், தண்ணீர் எடுக்க பழனி வருவதும்தான் எங்கள் நிம்மதி மனதைக் கலைத்தது. கலக்கமும், கவலையும், படபடப்பும் அறியாத மனதில் ஒரு வேகத்தை இன்னதென்று கூற முடியாத உணர்ச்சியை உண்டாக்கியது. பழனியின் மனதை என்னை விட முதலில் கவர்ந்தது ‘நாகலிங்கப் பூ தான். அதனுடைய அமைப்பு, பெண்ணுள்ளத்தைக் கவராமல் இருக்க முடியுமா? நாகலிங்க மரம் உயர்ந்து வளர்ந்த மரம். அலகெல்லாம் எட்டாது. தினம் அவள் வருவதற்கு முன்பு மரத்

தின்மீது ஏறி அந்த மலரைப் பறித்து தயாராய் வைத்திருப்பேன். எங்கள் சந்திப்பை அது வளர்த்தது; அன்பை வளர்த்தது. பழனி பெண்கள் எல்லாம் நீர் எடுத்துப்போன பிறகு தான் தனியே வருவாள்.

ஊர் பேச்சு கேட்கவேண்டுமா? அதுவும் இந்தக் கிராம கிராதகர்கள் வம்பும், துன்பும் வளர்க்க ஆரம்பித்தனர். இலேசாக என் காதிலும் போட்டார்கள். பழனியின் தந்தையும், என் தந்தையும் தனித்தனியே என்னிடம் என் எண்ணத்தை விட்டுவிடும்படிக் கூறினார்கள். பழனி ஆற்றுக்கு நீரெடுக்க வருவது தடை செய்யப்பட்டது. எங்களைத்தான் தடை செய்தார்களேயொழிய எங்கள் உள்ளத்தைத் தடைசெய்ய முடியவில்லை. எவ்வளவோ தடவைகள் நாங்கள் சந்தித்தோம்.

என் தந்தை எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். “பையா... இந்த வருஷமோ, அடுத்த வருஷமோ கண்ணை மூடிடுவேன்.........இந்த மாதிரியெல்லாம் வேண்டாம்டா வேறே நல்ல குலமா, குணமா பெண்ணே கல்யாணம் கட்டி வைக்கிறேன்” என்று ஹிதமாகவும் சொல்லிப் பார்த்தார். நான் பிடிவாதமாக முடியாது என்று சொல்லிவிட்டேன். கிழவரானாலும் கவுண்ட ஜாதியில் வந்தவரல்லவா? கோபமும் வீர குணமும் எங்கே போகும்? “டேய் பயலே! அப்படியா சேதி......... இந்த சொத்திலே தம்படி காசு கிடைக்க ஒட்டாமே அடிச்சுடுவேன்” என்று மிரட்டினார். அதிகம் பேசினால் கைகலப்பு கூட ஏற்பட்டிருக்கும்.

ஊரில் இந்தமாதிரி சம்பவம் புதிசு. அறியா வயது வந்த பொண்ணு மனசைக் கெடுத்து விட்டான் பாவின்னு சிலர் என்னை சபித்தனர். ஏனெனில் பழனியம்மாவும் என்னைப்போலவே பிடிவாதமாக அவள் தந்தையிடம் என்னைத்தான் கல்யாணம் கட்டிக்குவேன் என்றுவிட்டாள். அதென்ன பெரியவர்கள் இஷ்டப்படி நடப்பதா, சிறிசுகள் இஷ்டப்படி நடப்பதா என்ற கோபம். ஊர் பஞ்சாயத்தார்களுக்கு விவாதம் முற்றி பஞ்சாயத்தே ஒரு நாள் கூடிவிட்டது. என்னைக் கூப்பிட்டனுப்பினார்கள். ஊருக்குப் பெரிய மனுஷன் எனப்பட்டவர்கள் ஹிதமாகவும், அதட்டியும், உருட்டியும், மிரட்டியும் என் எண்ணத்தை மாற்றச் சொன்னார்கள். பெண்ணின் மாமன்காரன் ஆத்திரமும் ஆவேசமும் நிரம்பிய குரலில் “டேய்... பழனி பழனின்னு அவ மனசை கெடுத்தியோ பூசாரி வேலைக்கு உலை வச்சிடுவேன்...அதோட இல்லை, உன் உசிரு உங்கிட்டே இல்லை ஜாக்கிரதை” என்று கருவினான். நானென்ன ஆம்பிள்ளை இல்லை? கோபம் துரத்தது. மாரியம்மனுக்குப் பூசை செய்து உள்ளம் உருக மனசு பண்பாடடைந்திருந்தாலும் அதட்டலும் மிரட்டலுக்குமா இந்த மனசு பயந்துடும்? பொல்லாத மனசாச்சே! “டேய் என்ன சொன்னே... பூசாரி வேலை தானேடா? போனா போயிட்டும்டா. காடாறுமாசம் நாடாறு மாசம்னு ஆறு ஆறு மாசமா ரண்டு பேர் பூசை செய்யறதே ஒத்தரே செய்யட்டும்டா...ன்னு சொன்னியே ‘உசிரு’ உங்கிட்டே இல்லைன்னு...இப்ப காட்டுடா உசிரு எவங்கிட்டேங்கிறதே” என்று பாய்ந்தேன் பாரு. கும்பல் கூடியிருந்தவர்கள் அப்படியே என்னைக் கட்டிப் பிடித்திருக்காவிடில், சாது மிரண்டதுக்கு காடு கொள்ளாமல் தான் போயிருக்கும்.

பூசாரி வேலை எனக்குக்கிடையாது. ஒழுக்கம் தவறி விட்டவனுக்குப் பூசாரி வேலை யோக்யதை இல்லைன்னு கூறி தீர்ப்பளித்து விட்டார்கள் பஞ்சாயத்தார். ஒழுக்கம் நான் தவறினேனும்! அப்படிச் செய்துவிட்டாலாவது என் மனசு மாறிடாதான்னு எண்ணம்.

எதேச்சையா பழனியே மறுநாள் ஒருவருக்கும் தெரியாமல் சந்தித்தாள். சிறு குழந்தை போல் விம்மினாள். தகப்பன் அவளை கட்டிவைத்துக்கூட அடித்தானும். ‘ஓடுகாலி’ என்பன போன்ற வாயில் வராத சொற்களால் வைதானும். இந்த வீட்டை விட்டே அடிச்சு துரத்திடுவேனென்றானும். இவ்வளவையும் விம்மிக் கொண்டே சொல்லிவிட்டு ‘ஐயோ! உங்க அப்பா சொத்தையெல்லாம் உங்கபேருக்குக் கொடுக்கமாட்டேனுட்டாராமே. பூசாரி வேலை கூட பஞ்சாயத்தார் கிடையாதுன்னுட்டாங்களாமே. என்னாலே தானா இவ்வளவும் வரணும். ஐயோ என்னை மறந்துடுங்களேன்.........என்று விம்மினாள் தோளில் சாய்ந்துகொண்டு. சட்டென்று அவள் முகவாய்க் கட்டையைப் பிடித்து தலையை என்முகத்துக்கு எதிரே நிறுத்தினேன்

"பழனி. அப்பன் கட்டி வைச்சு அடிச்சானே...ஓடிப் போன்னு சொன்னுனே...... அப்பவெல்லாம் நீ அவரை மறந்துடரேன்னு சொல்லறதானே. என்னை மறந்துடரதானே'' என்றேன். அவள் கண்களில் நீர் 'பொலபொல' வென உதிர்ந்தது.

வேலை போச்சு; ஊரில் ஏச்சும் அதிகமாச்சு; ஆனுல் இந்தப் பொல்லாமனசு மாறவில்லை. நாகலிங்கப்பூவை பறித்து அவளுக்கு எப்படியாவது அளிக்க தவறுவதில்லை.

அன்று போதாத வேளையோ நல்லவேளையோ, மழை பெய்து விட்டிருந்தது. பழனியின் தம்பி எதேச்சையா அந்தப் பக்கம் வந்திருந்தான். "தம்பி'' என்று கூப்பிட்டேன். அவன் ஆவலுடன் ஓடி வந்தான். "இரு. நாகலிங்கப்பூ பறிச்சு தரேன். அக்காவிடம் கொடு'' என்று மரத்தின் மீது பரபரப்புடன் வேகமாக ஏறினேன். பெய்த மழையால் உதிர்ந்த இதழ்களற்ற பூக்கள் எட்டிய கிளையில் அகப்படவே இல்லை. உச்சியில் ஏறிவிட்டேன். என் போதாத வேளையோ நல்லவேளையோ கிளை முறிந்து, படார் என்ற சப்தத்துடன் கீழே கிளையும் நானும் வீழ்ந்தேன். 'அய்யய்யோ' எனக் கூவி தம்பி ஊருக்கு ஓடினுன். நல்ல அடிபோலும். சிறிது நேரம் ஸ்மரணை இன்றிக் கிடந்தேன். வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், அப்பா ஏகக் கூட்டம் வந்துவிட்டது. பழனியும் கும்பலில் ஒரு மூலையில் இருந்தாள்போலும். எல்லோரும் முதலைக் கண்ணீர்விட்டனர். வலியால் நான் துடித்து வேதனைப்படுவதைக்கண்டு சிலருக்கு ஆறுதல். "ஏண்டா சின்னக் கவுண்டா, அந்த உயர மரத்தில் ஏறலாமோ ?''—இதுவா ஆறுதல்!

பக்கத்து ஊரிலிருந்து டாக்டர் வரவழைக்கப்பட்டார். தொட்டுப் பார்த்தார். எலும்பு முறிவு என்று கண்டுபிடிக்க அவருக்கு ஒரு மணி நேரம் ஆச்சு. ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத் தான் போகணும் என்று

''நானைக்கு இந்தக் கள்ளுக்கடையை மூடிடரூங்களாமே''

''ஏன் பாவம். வியாபாரம் நல்லா நடக்கலேப்போலேருக்கு.........நம்ப இன்னெரு கடைக்குப்போனு போச்சு அண்ணே........''

விட்டார். நல்ல வேளை கால்முறியாமல் வலது கைதான் முறிந்திருந்தது.

ஜெனரல் ஆஸ்பத்திரி என்றவுடன் எனக்கே அழுகை வந்துவிட்டது. எப்படிப்போவது, யார் துணை வருவார், அப்பாவோ தள்ளாதவர். என்னதான் என்மேல் கோபமிருந்தாலும் பிள்ளை அடிபட்டுக் கிடக்கும்போது உணர்ச்சியற்று நிற்பாரா? ''உடனே ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போகாவிட்டால் இன்னும் இரு நாளில் ரத்தம் முறிந்து விஷமாகிவிடும்'' என்று கூறினுர் அந்த டாக்டர்.

கூட்டம் கொஞ்சங் கொஞ்சமாகக் கலைந்தது."பாத்தியா. மாரியம்மனுக்குப் பூஜைசெய்து அபசாரமா நடந்ததுக்குக் கூலி காட்டிட்டாள். பார்த்தியா ?'' என்று ஓரிருவர் கூறிச்சென்றது என் காதில் விழுந்தது. அறியாதவர்கள் என எண்ணி சும்மாயிருந்தேன்.

இரட்டை மாட்டு வண்டி ஒன்று கொண்டு வரப்பட்டது. என்னை வண்டியில் ஏற்றினுர்கள். கூட யார் வருவது என முடிவாகவில்லை. அப்பா பச்சைக் குழந்தைபோல் அழுது கொண்டே வண்டியிலேறப் போனுர். குடு குடுவென பழனியம்மாள் ஓடி வந்தாள். என் அப்பாவை நகரச் சொல்லி "மாமா...நீங்க இருங்க ஊரிலே. நாங்கள் இருவரும் பொல்லாதவர்களாகிவிட்டோம். பழிக்கு ஆளாகி விட்டோம். எனக்காகத்தானே அவர் மரத்தின் மீது ஏறி கையை முறித்துக் கொண்டார். நான் போறேன் பட்டணம்,'' என்று கூறி தளும்பும் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு வண்டியின் குறுக்குக் கம்பியைப் போட்டாள்.

எல்லாரும் அசந்து நின்றுர்கள். பட்டணம் வந்தோம். இடையே எவ்வளவோ கஷ்டம். நான்படும் வேதனையைக் கண்டு அவள் துடிப்பதோடின்றி கஷ்டமறியா அவள் வெளியே எங்கும் போய் அறியா அவள் இந்த ரயில் நெருக்கடியில் என்னை அழைத்து வந்து இரவும் பகலும் இங்கே கஷ்டப்படணும் என்று அவளுக்கு என்ன தலையெழுத்தா?'' என்றுன் சின்னக் கவுண்டன்.

அவன் குரல் அதைச் சொல்கையில் தழுதழுத்தது. கொஞ்சம் இருமினுன். "எல்லாம் இந்த மனசுதான் காரணம்'' என்று என்னை அறியாமல் கூறினேன்.

"சாமி... இந்தப் பொல்லாத மனசு இன்னும் என்னென்ன திட்டமிட்டிருக்கு தெரியுமா...... கை தேவலையானபிறகு ஊருக்குப் போகப்போவதில்லை. திருத்தணி போய் முருகன் சன்னதியிலே நாங்கள் கடவுள் சாட்சியா தம்பதியாகிடப்போறும்'' என்றுன் அவன் முகத்தில் களிப்புபொங்க.

"கவுண்டா... என்னை மறந்துடாதே; கல்யாணத்துக்குக் கூப்பிடு''என்றேன்.மணி டாண் டாண் என்று பத்து அடித்தது. பழனியம்மாள் களங்கமற்று நன்றுகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

21

கன்னி வேட்டை

★

ராஜதர்மம் செய்யாதவனை ராஜா என்று சொல்லமுடியுமா? அப்படியே கொடிய விலங்குகள் பெருகித் தினைப்புனங்களை அழித்துவிடாதபடி மாதந்தோறும் தவறாமல் வேட்டையாட தவனும் வேடராஜா அல்ல. திண்ணனாரின் தந்தையான நாகன் முதுமையால் வேட்டையாட இயலாத நிலையில் அந்த ராஜ பதவியைத் துறக்கவேண்டியது அவசிய மென்று கருதிவிட்டான்.

புண்ணியம் வளர்ந்தது!

மாட்சிமையில் எந்த மகாராஜாவுக்கும் இம்மியும் குறையாத மனப்பான்மையுடன் அரசுபுரிந்த நாகன். துறவுப் பெருமையிலும் அவர்களுக்குக் குறைந்தானில்லை. தான் அரசு துறந்து திண்ணனுருக்கு அரசுரிமை வழங்க வேண்டுமென்று தீர்மானித்துவிட்டான். திண்ணனாரோ,

வண்ணவெஞ் சிலையும், மற்றைப்
படைகளும் பலசக் கற்று,
கண்ணகல் சாயல் பொங்கக்
கலைவளர் திங்க ளேபோல்,
எண்ணிரண் டாண்டின் செவ்வி
எய்தினர். எல்லை இல்லாப்
புண்ணியம் தோன்றி மேன்மேல்
வளர்வதன் பொலிவு போல்
[வார்.

[வண்ண வெஞ்சிலை—அழகிய கொடிய சிலை. மலர—விரிவாக. கண் அகல் சாயல்—கண்ணுக்கு அடங்காத அழகு. திங்கள்—சந்திரன். எண் இரண்டாண்டின் செவ்வி —(இங்கே) பதினறு வயதுள்ள இளமை வளம். பொலிவு-அழகுபெற விளங்கும்தோற்றம்]

வாத்தமும் மகிழ்ச்சியும்

திண்ணனர் இப்படி வளர்ந்து வரும்போது, நாகன் தலைமை தாங்கும் தகுதியை இழந்துவிட்டானென்பது வேடர்களுக்கு வெட்ட வெளிச்சமாகி விட்டது.

இவ்வண்ணம் திண்ணனர்
நிரப்பு நாளில்,
இருங்குறவர் பெருங்குறிச்சிக்கு
இறைவன் ஆய
மைவண்ண வரைநெடுந்தோள்
நாகன் தானும்
மலையெங்கும் வனமெங்கும்
வாம்பில் காலம்
கைவண்ணச் சிலைவேட்டை
ஆடித் தெவ்வர்
கணநிரைகள் பலகவர்ந்து,
கானம் காத்து
மெய்வண்ணம் தளர்மூப்பின்
பருவம் எய்தி,
வில்லுழவின் பெருமுயற்சி
மெலிவான் ஆனன்

[குறவர்—(இங்கே) வேடன். பெருங்குறிச்சி-பெரிய கிராமம். இறைவன்-அரசன். ஆய-ஆகிய. மைவண்ணவரை-கரியமலை. கைவண்ணச்-சிலைகையிலே அழகாய்ப் பிடித்த வில்லினல். தெவ்வர்-பகைவர். கணநிரைகள்-பசுக்கூட்டங்கள். மெய்வண்ணம்-தேகநிலை. வில்லுழவின்-வில் தொழிலின்.]

என்பதாக வேடர்களுக்குள் பிரஸ்தாபம் வலுத்தது.

காட்டுப்பன்றிகளும், புலி, கரடி முதலிய பிராணிகளும் தொகையில் அதிகரித்து வேடர் ஜனத்தொகையைக் குறைத்துவிடுமோ, வேடர்களையே வேட்டையாடி விடுமோ! என்றும் தோன்றியது.

அப்போதுதான் வேடர் தலைவன், ‘என் மகனை உங்களுக்கு நாதனாகக் கொள்ளுங்கள்’ என்று சொன்னான்.

அவர்கள் உடனே வருந்திப் பின்பு மகிழ்ந்தார்களாம். நாகன் துறவுக்கு வருத்தம்; இளவரசை அரசாக்கி அவன் தலைமையில் வேட்டையாடுவதிலும், பகைவர்

களின் பசுக்களைக் கவர்ந்து வருவதிலும் மகிழ்ச்சி.

இப்படி வருத்தமும் மகிழ்ச்சியும் ஒருங்கேயடைந்த வேடர்கள் பழைய ஆட்சிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, திண்ணனாரின் புதிய ஆட்சியையும் ஒரு புதிய நம்பிக்கையுடன், எதிர்நோக்குகிறார்கள்:

“இத்தனைகா லமும்நினது
 சிலைக்கீழ்த் தங்கி,
இனிதுண்டு தீங்கின்றி
 இருந்தோம்; இன்னும்
அத்த! நின(து) அருள்வழியே
 நிற்ப தல்லால்
அடுத்தநெறி வேறுளதோ?
 அதுவே அன்றி,
மெய்த்தவிறல் திண்ணனையும்
 மரபில் சால
மேம்படவே பெற்றெடுத்தாய்!
 விளங்கு மேன்மை
வைத்தசிலை மைந்தனைஈண்(டு)
 அழைத்து, நுங்கள்
வரையாட்சி அருள்’ என்றார்,
 மகிழ்ந்து வேடர்.

[அத்த—அப்பனே. மெய்த்தவிறல்—உடம்பில் வலிமை. சால—மிகுதியும். வரை—மலை.]

பரீட்சையில் பிரவேசம்

மலையரசனுக்கு வில்லே செங்கோல். சிங்காசனம் புலித்தோல். தோலுடையும் உடைவாளும் ராஜசின்னங்கள். திண்மையான உடலே ராஜசரீரம், ராம பட்டாபிஷேகத்தில் அயோத்தி மக்களுக்கு ஏற்பட்ட குதூகலத்தில் ஒரு சிறிதும் குறைந்ததில்லை பொத்தப்பிநாட்டின் உடுப்பூர்—வேடர்களின் குதூகலமும், திண்ணனார் தலைமை தாங்குவாரென்ற செய்தி கேட்டதும். தாடகைவதமாகிய கன்னிப்போர் ராமன் நல்லரசு புரிவதற்கும், துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்து உலகத்தையே காப்பதற்கும் ஒரு பரீட்சையாக உதவியது போல், திண்ணனாரையும் கன்னி வேட்டை என்ற பரீட்சையில் சோதிக்க விரும்புகிறான் நாகன். ஆனால் இங்கு அரசுரிமை அளித்த பின்பே பரீட்சிக்கிறான்.

திண்ணனார் வேட்டைக் கோலம் பூண்டு வேடர்களோடும் காட்டிலே வேட்டையாடச் சென்றார். வேட்டை நாய்களும் சூழ்ந்து ஓடின. வேடர்கள், அங்கே வலைகளை வளைத்துக் கட்டினார்கள். ஊது கொம்புகளும் பறைக் கொட்டுகளும் பம்பைகளும் காடெங்கும் முழங்கின.

ஏனமோடு, மானினங்கள்,
 எண்கு, திண் கலைக்குலம்,
கானமேதி, யானை, வெம்
 புலிக்கணங்கள், கான்மரை
ஆனமா, அநேகமா
 வெருண்டெழுந்து பாய, முன்
சேனைவேடர் மேல்அடர்ந்து
 சீறிஅம்பில் நூறினார்.

[ஏனம்—காட்டுப் பன்றிகள். எண்கு—கரடிகள். கலைக்குலம்—கலைமான் கூட்டங்கள். கானமேதி—காட்டெருமைகள். வெம்புலி—கொடியபுலி. கான்மரை ஒரு வகைக் காட்டுமான். ஆன மா—ஆகிய விலங்கு. அநேகமா—இன்னும் அநேக மிருகங்கள். சேனைவேடர்—சேனைபோல் திரண்டுவந்த வேடர்கள். நூறினார்—அழித்தார்கள்.]

இதற்கிடையே கரியமலையொன்று வில் ஏந்தி விசையாக வந்ததுபோல் வேட்டை முனைக்கு வந்துவிட்டார் திண்ணனார். இவர் யானைமீது எய்த அம்புகள் விரைந்து ஊடுருவி ஒரு பாதி யானை மீதும் ஒரு பாதி சிங்கத்தின் மீதும் பாய்ந்து நிற்கின்றனவாம்.

இத்தகைய வேட்டையிலும் வேட்டையறம் என ஒன்று இருக்கிறதாம்,-யுத்தத்திலும தரும யுத்தம் என ஒன்று இருப்பதுபோல உடுக்கைபோன்ற கால்களையும் மடிந்த காதுகளையும் உடையனவாக வரும் யானைக்குட்டிகளை வேட்டையாடுவதில்லையாம். பொதுவாகக் காட்டு மிருகங்களின் சிறிய குட்டிகளைக் கொல்வதில்லையாம். அப்படியே பிடித்துக்கொண்டு போய்க் குடிசைகளில் தங்கள் குழந்தை குட்டிகளோடு வளர்ப்பார்களாம். கருவுற்ற பெண் விலங்குகளையும் அவற்றின் தளர்ந்த நடையிலிருந்து தெரிந்து கொண்டு தன்புறுத்தமாட்டார்களாம். இத்தகைய ‘வேட்டையறம்’ பேணித் திண்ணனாரும் அந்தக் கன்னி வேட்டையில் தம்மை இழந்தவராய், காட்டிலே சுழன்று சுழன்று சஞ்சரித்துக் கொடிய விலங்குகளை வீழ்த்தினார். வேட்டைத் திறத்திலும் வேட்டை அறத்திலும் ஒருங்கே ‘தேறி’விட்டார் திண்ணனார். ஆனால் இது பிரவேச பரீட்சைதான்!

பெரிய பரீட்சை

அப்பொழுது கொழுத்த காட்டுப்பன்றி ஒன்றுஎங்கிருந்தோ எழும்பி வந்தது. வேடரால் கட்டப்பட்ட வலைகளை அறுத்துக் கொண்டு கடு விசையில் ஓடிற்று. அந்தப் பன்றியைத் தொடர்ந்து திண்ணனாரும் அதே விசையில் ஓடினார். நாணன் காடன் என்ற இருவர் தவிர மற்ற வேடர்களுக்குத் திண்ணனார் அந்தப் பன்றியைத் தொடர்ந்து ஓடினார் என்பதே தெரியாது. நாணனும் காடனும் மட்டும் திண்ணனாரைத் தொடர்ந்து ஓடினர்.

பன்றியானது நாய்களுக்கும் தப்பி நெடுந்தூரம் ஓடிப் போய், இளைப்பினாலே மேலும் ஓட இயலாததாய், மலைச்சாரலில் ஒரு மரத்தின் நிழலிலே நின்றது. திண்ணனார் உடனே அதன்மீது அம்புபோட்டுக்கொன்றிருக்கலாம். ஆனால் அப்படிச்செய்வது வீரமென்று கருதாமல், அதனிடம் நெருங்கிச் சென்று உடைவாளை உருவி இரு துண்டாகும்படி அதைக்குத்தித் தள்ளிவிட்டார்.

அந்த நெஞ்சுத் துணிவைத் தெரிந்துகொண்டான் பின் தொடர்ந்துவந்த நாணன். அவனைத்தொடர்ந்து காடனும் வந்து சேர்ந்தான், நாணன் ஆச்சரியமாகத் தன் தோழனுக்கு அந்த வீரச்செயலைச் சுட்டிக்காட்ட, இருவரும் வேடர்பெருமானின் அடியில் விழுந்து வணங்குகிறார்கள்:

'காடனே! இதன்பின் இன்று
காதங்கள் பலவந்(து)
எய்த்தோம்;
ஆடவன் கொன்றான், அச்சோ!'
என்(று) அவர் அடியில்
தாழ்ந்தார்.

[எய்த்தோம்— இளைத்துப் போனோம். அச்சோ—ஆச்சரியக் குறிப்பு.]

அத்தகைய தீரச்செயலே ஆடவர் செயல் என்பது வேடர்களின் கொள்கை. ஆகவே நாணன், தன் தலைவரைக் குறித்து 'அவன்தான் ஆடவன்— அதாவது ஆண்பிள்ளை!' என்கிறான். கன்னிவேட்டையில் பிரவேசபரீட்சையில் மட்டுமல்ல 'பி. ஏ' பரீட்சையிலும் திண்ணனார் தேர்ந்து பெற்ற பட்டம் இது! பட்டத்தை வழங்கியவன் எத்தனையோ வேட்டைக்காடுகள் கண்ட நாணன் இருவரும் அடிதாழ்ந்து வழங்கிய பதவி குறித்துத் திண்ணனார் ஒன்றுமே சொல்லவில்லை அவர் அதுகுறித்து நினைக்கவே இல்லை.

பசியும் தாகமும்

அதற்குமேல் அவர்களும் அது குறித்துப் பேசவில்லை. பசிவந்திட மற்ற எண்ணங்கள் பறந்து போய் விட்டன. அவர்கள் இருவரும் திண்ணனாரை நோக்கி. 'நெடுந்தூரம் வந்துவிட்டோமல்லவா?பசி பொறுக்க முடியவில்லை. இந்தப் பன்றியைச் சுட்டுத்தின்று தண்ணீர் குடித்துவிட்டு மெல்லப் போவோம், வேட டைக் காட்டுக்கு என்று சொன்னார்கள்.

அதற்கு அவரும் சம்மதித்தார். ஆனால், 'இந்தக் காட்டில் தண்ணீர் எங்கே கிடைக்கும்?' என்று கேட்டார். அதற்கு நாணன், 'அதோ பெரிய தேக்கு மரம் தெரிகிறதல்லவா? அதற்கு அப்புறம் சென்றால் ஒரு குன்று இருக்கிறது. அதற்கு அயலில் ஒரு நதி ஓடுகிறது, குளிர்ந்த தண்ணீர். ஆற்றின் பெயர் 'பொன் முகலி' என்றான்:

'நின்ற அப் பெரிய தேக்கின்
அப்புறம் சென்றால், நீண்ட
குன்றினுக்(கு) அயலே ஓடும்
குளிர்ந்தபொன் முகலி'
[என்றான்.

அது கேட்ட திண்ணனார், 'நல்லது, நாம் அங்கே போவோம். இந்தப் பன்றியை எடுத்துக்கொண்டு வாருங்கள்' என்று சொல்லிக் குன்றை நோக்கி நடந்தார். போகும்போது, அரைக்காத வழி தூரத்துக்கு அப்பால் மலைச்சாரலில் உள்ள சோலை அவருக்குக் காட்சி அளித்தது. 'நாணனே! அந்தக் குன்றுக்குப் போவோம்' என்றார். அதற்கு அவன், ஆம், அங்கே போனால் நல்ல காட்சி காண்போம். குடுமித் தேவர் இருக்கிறார், அவரையும் கும்பிடலாம்' என்று பதில் சொன்னான்;

'கோணமில் குடுமித் தேவர் இருப்பர்,கும்பிடலாம்' என்றான். ஆனால் இதுகேட்ட திண்ணனாருக்கு என்றுமில்லாத ஒரு புதிய பசி தாகம் உண்டாகப் போகிறது என்பதை நாணன் எப்படி அறிவான்? இந்தக் கன்னிவேட்டை மீளாத வேட்டையாகிவிடும் நம் திண்ணனாருக்கு என்பதுதான் அந்த வேடனுக்கு எப்படித் தெரியும்?

ஆமாம்! அவர்களைக் கண்டால் விசித்திரமாகத்தான் இருக்கிறது. காலையிலும் மாலையிலும் இப்படிக் கதவை தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு எப்பொழுதும் வீட்டிலேயே அடைந்து கிடக்கிறார்களே? யார் வந்தாலும் முகம் கொடுத்து ஒரு வார்த்தை பேசுவது கிடையாது! அவர்கள் அந்த மூன்றாவது வீட்டிற்கு குடி வந்த தினத்திலிருந்தே அத்தெரு ஜனங்களின் மனதில் பெரிய சந்தேகத்தை கிளப்பிவிட்டார்களே! ஒருவேளை அவர்கள் ஏதாவது தீய தொழிலில் இறங்கி, போலீஸின் தலை மறைவில் இருக்கிறார்களோ? இல்லை—கடன்காரர்களிடமிருந்து விலகி இருக்கிறார்களோ? எல்லாம் அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

ஆறு நாள் முன் எங்கள் தெருவில் மூன்றாவது வீட்டில் ஒரு இளைஞனும் ஒரு ஸ்திரீயும் குடி ஏறினார்கள். வந்த அன்றையிலிருந்து அவர்கள் விசித்திரச் செயல்கள் எங்கள் தெரு ஜனங்களின் கவனத்தை கவர்ந்தது மட்டும் அல்லாமல், அவர்களைப் பற்றிய விவரங்களை அறிய அதி ஆவலையும் மனதில் காட்டுத் தீயைப்போல் வளர்த்துவிட்டது.

அவர்கள் வந்த மறுநாள் இரவு நான் என் அறையில் உட்கார்ந்து பரீக்ஷைக்கு மும்முரமாகப் படித்துக்கொண்டிருந்தேன். அச்சமயம், தூரத்தில் ஒரு வீட்டில் ஒரு சிசு ஏதோ சகிக்கமுடியாத வேதனையினால் கதறுவதுபோல சப்தம் கேட்டு, படிப்பதை சற்று நிறுத்தி உற்றுக் கேட்டேன். ஆம், சந்தேகம் இல்லாமல் ஒரு குழந்தைதான் அப்படி அலறி அழுதுகொண்டிருந்தது. அந்த நிசப்தமான இரவில் எவர் காதிலும் அச்சப்தம் எட்டி இருக்கும்.

படிப்பு பாதியில் தடைப்பட்டதால், மேலே படிக்க மனம் இல்லாமல் புஸ்தகத்தை மூடி வைத்துவிட்டு கீழே இறங்கிச் சென்றேன். வீட்டில் எல்லோரும் நன்றாகக் குறட்டைவிட ஆரம்பித்தாயிருந்தது. வாசற் கதவை ஓசைப்படாமல் திறந்துகொண்டு, திண்ணையில் வந்து பார்த்தேன். ஒரு வீட்டிலும் விளக்கு வெளிச்சத்தைக் காணோம். ஆனால் என்ன ஆச்சரியம்! தெருவில் மூன்றாவது வீட்டின் ஜன்னல் வழியாக வெளிச்சம் தெரிந்து கொண்டிருந்தது. சந்தேகம் இல்லாமல் குழந்தையின் அழுகுரலும் அங்கிருந்துதான் வந்துகொண்டிருந்தது!

என் மனதில் பயங்கர எண்ணங்கள் தோன்றலாயின. அன்று அவர்கள் வந்தபொழுது கையில் குழந்தையைக் காணவில்லையே, ஆனால் இன்று எங்கிருந்து வந்தது?—விசித்திர தம்பதிகள் எங்கிருந்தாவது குழந்தையை திருடிக்கொண்டு வந்து வதைக்கிறார்களோ? அப்படியானால் உடனே போலீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்!" என்று பலவாறு எண்ணியபடி வாயில் கதவை தாள் இட்டுக்கொண்டு என் அறை சென்றேன். விளக்கை அணைத்து படுத்துக்கொண்டேன். ஆனால் தூக்கம் வரும் வழியாக இல்லை. குழந்தையின் அழுகை சற்று ஓய்ந்திருந்தாலும், என் மனதில் அந்த நிசப்தம் வேதனையை கிளப்பிவிட்டது "குழந்தை இந்த நேரம் உயிரை விட்டிருக்கும். அதனால்தான் குரல் ஓய்ந்திருக்கிறது ஆனால் இந்தத் தெருவில் ஒருவர் காதிலும் இந்த சப்தம் விழவில்லையா? அவர்கள் ஏன் இப்படி சும்மா இருக்கிறார்கள்? எல்லோரும் ஏன் இப்படி தன் காரியம்தான் பெரிது என்று தூங்கி வழிகிறார்கள்? ஒரு இளகிய நெஞ்சு படைத்த மனிதன் கூடவா நம் தெருவில் இல்லை?" என்று பலவாறு எண்ணமிடலானேன்.

நான் ஒரு புருஷனாக இருந்தால் அந்த நடு இரவிலும் சென்று அக்குழந்தையை அவ்விசித்திர தம்பதிகளிடமிருந்து தப்புவித்திருப்பேன். ஆனால் இப்பொழுது என்ன செய்வது? கண்களை இறுக மூடிக்கொண்டு அக்குழந்தையை மறக்க முற்பட்டேன். திடீர் என்று மறுபடியும் அதே வேதனை நிறைந்த கதறல் பன்மடங்கு அதிகரித்து என் காதில் வந்து விழுந்தது என்றால் அதை தாங்க முடியவில்லை. படுக்கையிலிருந்து எழுந்து நேராக என் அண்ணன் படுத்திருந்த அறைக்கதவை தடதடவென்று தட்டினேன். வெகு நேரம் தட்டியபின், "யாரது?" என்று வெறுப்புடன் அவன் கேட்டான். "சீக்கிரம் வெளியே வா அண்ணா. மூன்றாம் வீட்டில் ஏதோ பெரிய காரியம் நடக்கிறதுபோல் இருக்கிறது!" என்றேன் வெளியில் இருந்தபடியே.

"உனக்கு என்ன கவலை அவர்களைப்பற்றி? பேசாமல் போய் தூங்கு! என்னைத் தொந்தரவு பண்ணாதே" என்று கோபமாக அவனிடமிருந்து பதில் வந்தது. எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை என் அண்ணா கூடவா ஒரு சுயநலப் பித்தன்? தூக்கம் கலைந்தால் என்ன கோபம் வருகிறது அவனுக்கு? அச்சிசுவின் கதறல் அவன் காதுக்கு எட்டவில்லையா? இல்லை எனக்குத்தான்

ஏதாவது பிரமை ஏற்பட்டுவிட்டதா? நிச்சயமாக எனக்குப் பிரமை ஏற்பட்டிருந்தால் அத்தெரு ஜனங்கள் நிம்மதியாகத் தூங்குவதில் ஒரு ஆச்சரியமும் இல்லை!

குழந்தையின் குரல் இன்னும் ஓய்ந்தபாடில்லை. "அண்ணா நீ வெளியில் வராவிட்டால் வேண்டாம். ஏதாவது குழந்தை கதறுவதுபோல் உனக்குத் தோன்றுகிறதா? எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது!" என்றேன்.

"ஓ பெரிய சப்தம் கேட்கிறதே! நான் கவனிக்கவில்லையே, கொஞ்சம் இரு?" என்று கூறி அண்ணா ஒரு கைத்தடியுடனும், டார்ச் லைட்டுடனும் கதவை திறந்துகொண்டு வெளியே வந்தான்.

"உன்னுடன் வெளியில் நானும் வரலாமா?" என்றேன் ஆவலுடன். "வாயேன் இரண்டுபேருமாகப் போனால் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக இருக்கும்!" என்றான் அண்ணா.

சப்தம் கேட்டால் எங்கள் பாட்டி எழுந்துவிடுவாள். எழுந்திருந்தால் ஒரே இருமலும் தும்மலுமாக ரகளைபண்ணி வீட்டில் உள்ள மற்றவர்களையும் எழுப்பி காரியத்தைக் கெடுத்துவிடுவாள். ஆகவே மெள்ள இருட்டில் தட்டுத் தடுமாறிக்கொண்டு வாயில் கதவை ஓசைப்படாமல் திறந்துகொண்டு வெளியே வந்தோம்.

வெளியில் ஒரே இருட்டாக இருந்தது. தூரத்தில் நாய்களின் குரைப்பும், அந்த இளம் குழந்தையின் கதறலும்தான் எங்கள் கவனத்தை இழுத்த சப்தங்கள். கதவை மறுபடி வெளியே இழுத்துச் சாத்திக் கொண்டு நேராக இருவரும் மூன்றாம் வீட்டை அடைந்தோம்.

"கதவை தட்டட்டுமா?" என்றான் அண்ணா. "வேண்டாம் அண்ணா. முதலில் ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கலாம். ஏதாவது தகராறான காரியம் செய்கிறார்களாக இருந்தால், உடனே போலீஸாரை அழைத்துக் கொண்டுவந்து கதவை அப்புறம் தட்டிக்கொள்ளலாம்." என்று மெதுவாகப் பதில் அளித்தேன். அண்ணாவுக்கு அது சரி என்று பட்டது. பிறகு இருவருமாக ஒரு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தோம். ஆனால் உள்ளே திரையால் மறைக்கப்பட்டிருந்ததால், எங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. குழந்தையின் கதறல் மட்டும் எங்கள் இருதயத்தையும் காதையும் ஒரேயடியாகத் தாக்கிக்கொண்டிருந்தது.

நாங்கள் வீட்டின் பின்புறத்தை அடைந்தோம். அங்கு ஜன்னல்கள் ஒன்றும் இல்லாவிட்டாலும், நல்லவேளையாக கதவில் ஒருதுவாரம் இருந்தது. ஒரு கண்ணை மூடிக்கொண்டு மற்ற கண்ணால் துவாரத்தின் வழியாக உள்ளே நடப்பதை நன்றாகப் பார்க்க முடியும்.

முதலில் அண்ணா அதன் வழியாக எட்டிப்பார்த்தான். 'ஐயோ, நான் சந்தேகித்தது சரியாகப் போய்விட்டது!' என்றான் உரக்க. நல்ல வேளையாக அவன் குரல் உள்ளே இருப்பவர் காதில் விழுந்திருக்காது. "இரையாமல் என்ன சொல்லு அண்ணா!" என்றேன். "நீயே பார்த்துக்கொள்." என்று கூறி அண்ணா விலகிக்கொண்டான்.

துவாரத்தின் வழியாக நான் பார்த்ததும் எனக்குப் பகீர் என்றது. நானும் இதைதானே சந்தேகித்தேன்?



உள்ளே அன்று குடி வந்த ஸ்திரீ உட்கார்ந்திருந்தாள். அவள் மடியில் ஒரு குழந்தை கையையும் காலையும் உதைத்துக் கொண்டு படுத்திருந்தது. ஒரு புருஷன்—அது அன்று நாங்கள் கண்ட இளைஞன்தான்—அக் குழந்தையை உற்றுநோக்கியபடி உட்கார்ந்திருந்தான். முதலில் அந்த ஸ்திரீ குழந்தையின் முகத்தருகே குனிந்துவிட்டு எழுந்தாள், அதேபோல் அவள் கணவனும் செய்தான். அவ்வளவுதான்! குழந்தை பன் மடங்கு உரக்க கத்த ஆரம்பித்தது. அதன் கன்னங்கள் இருக்கவேண்டிய இடத்தில் ஒரே மாமிசபிண்டமாகக் காணப்பட்டது. முகம் முழுதும் ஒரே ரத்தக்கறை! கை கால் களிலும் இதே கோரத் தோற்றம். "ஐயோ அண்ணா எனக்கு என்னமோ செய்கிறதே!" என்று தவித்தேன். "பார்த்தாயா, சீன தேசத்தில் குழந்தையின் மாமிசத்தை சாப்பிடுவார்கள் என்றால் நம்பமாட்டேன் என்றாய். இப்பொழுது நம் தேசத்தில் அப்படி சாப்பிடுவதை உன் கண்ணாலேயே கண்டுவிட்டாய் இல்லையா?" என்றான்

அண்ணா. "ஆனால் அவர்கள் குழந்தையை இப்படி எட்டு ஊர் கேட்கும்படி அலற விட்டுவிட்டு இந்தக் காரியத்தைச் செய்வார்களா?" யாராவது வந்து பிடித்துவிடுவார்கள் என்று பயம் இருக்காதா? என்றேன்.



"போடி பைத்தியம். மாமிசம் சாப்பிடும் சுவாரஸ்யத்தில் அதை மறந்திருப்பார்கள்." என்றான் அவன் அலக்ஷியமாக.

நான் மறுபடி துவாரத்தின் வழியாக எட்டிப்பார்த்தேன். குழந்தையின் கோரரூபம் என் மனதை கலங்கியது. திடீர் என்று எனக்கு அத்தம்பதிகளின் முகத்தில் கவலை பிரதிபலிப்பதுபோல தோன்றியது. "அண்ணா! அது என்ன அவர்கள் கண்ணீர் விடுகிறார்களே!" என்றேன். ஆனால் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை.

"இன்றைக்கு பார்த்தது போதும். இன்னும் மற்ற குழந்தைகளையும் இவர்கள் சாப்பிட்டு ஏப்பம் விடுவதற்குள் இவர்களை போலீஸிடம் ஒப்புவித்துவிடலாம். எப்படியும் இன்னும் இரண்டு நாள் பார்த்துக் கொள்வோம்." என்று கூறி என்னை அழைத்துக் கொண்டு அண்ணா வீடு நோக்கி நடந்தான்.

தெருவில் ஒரு வீட்டிலும் ஆட்களின் அரவம் இல்லை. எங்கள் வீட்டிலும் யாவரும் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். எப்படித்தான் இவர்களுக்குத் தூக்கம் வந்ததோ!

நாங்கள் வீடு திரும்பியதும் அவரவர் அறைக்குச் சென்று படுத்துக் கொண்டோம். எனக்குத் தூக்கமே வரவில்லை. கண்ணை மூடினால் அந்தக் குழந்தையின் கோரரூபம், அதன் சிறு விழிகளும் என் முன் தோன்றித் தோன்றி, என் மன நிம்மதியை குலைத்தன. பொழுது விடியும்வரை புரண்டு கொண்டே அவ்விசித்திர தம்பதிகளையும், அவர்கள் செய்யும் தகாத காரியத்தையும் பற்றி சிந்தித்தபடியே கிடந்தேன். ஆனால் அவர்கள் ஏன் கண்ணீர் விட்டார்கள்?—அது ஒன்றுதான் எனக்குப் புதிராக இருந்தது. என் தமையனும் அன்று இரவு தூங்கவில்லை என்பதை மறுநாள் நான் யூகித்து அறிந்து கொண்டேன். ஆனால் நாங்கள் முந்திய இரவு கண்ட காட்சியைப்பற்றியும், அத் தம்பதிகளைப்பற்றியும் ஒருவரிடமும் ஒரு வார்த்தை கூடபேசவே இல்லை.

நான்கு நாட்களாக இரவில் குழந்தையின் குரல் எங்களுக்குக் கேட்கவே இல்லை. நாங்களும் ஒவ்வொரு இரவும் அக் குரலுக்காகக் காத்திருந்து ஏமாந்து போனோம். ஆனால் நேற்று இரவு மறுபடி பழைய குரல் என்னை தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பியது. அவசர அவசரமாக அண்ணாவை அழைக்க என் அறையிலிருந்து வெளியே வந்தேன். அதே சமயம் அவனும் என் அறையை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

"இன்றைக்கு நாம் இரண்டு பேரும் செத்தாலும் சரி, இந்த அட்டஹாஸத்தை அடக்கிவிட்டுத்தான் மறு வேலை! மனதை தைரியப்படுத்திக்கொண்டு என்னுடன் வா!" என்றான் அண்ணா. நானும் வாய் பேசாமல் அவனை பின் தொடர்ந்தேன். மூன்றாம் வீட்டை அடைந்ததும் அண்ணா கதவை தட தடவென்று தட்டினான். எனக்கு உதறல் எடுத்தது. தைரியத்தை கைவிடாமல் கதவு திறக்கப்படும் நேரத்தை எதிர்நோக்கி நின்றேன்.

"ஐயோ, யாரோ வந்திருக்கிறார்களே, என்ன செய்வது?" என்று அந்த ஸ்திரீயின் ஹீனக் குரல் எங்களுக்குக் கேட்டது. பின் வீட்டினுள் நடமாடும் சப்தத்தைத் தொடர்ந்து கதவும் திறக்கப்பட்டது. குழந்தையின் குரல் இப்பொழுது எங்களுக்கு வெகு வேதனை அளிக்கும்படி பெரிதாக இருந்தது.

கதவைத் திறந்த இளைஞன் கவலையும் பீதியும் கலந்த பார்வையால் எங்களை மாறி மாறிப் பார்த்தான். அவன் தோற்றத்தைக் கண்டு அண்ணாவுக்குப் பரிதாபமாக இருந்திருக்க வேண்டும்.

"குழந்தை கதறுகிறதே உங்களுக்கு ஏதாவது ஒத்தாசை வேண்டி இருக்குமோ என்றுதான் வந்திருக்கிறோம்." என்றான் அவன்.

இளைஞனின் முகத்தில் திடீர் என்று வெறுப்பின் சாயை

படர்ந்தது. "நீங்கள் உபகாரம் செய்து ஆகவேண்டிய காரியம் இல்லை இது. நீங்கள் திரும்பிப் போவதே நல்லது" என்று சொல்லி கதவை சாத்த முயன்றான் அவன். ஆனால் அண்ணா ஒரு தாவலில் அவனை நன்றாகப் பிடித்துக்கொண்டான். "மரியாதையாக நீங்கள் அந்தக் குழந்தையை என்ன செய்கிறீர்கள் என்றுசொல்லாவிட்டால் உடனே போலீஸில் 'ரிபோர்ட்டு' செய்து விடுவேன்!" என்று பிடியை விடாமல் அண்ணா அவனை மிரட்டினான்.

என் மனதில் ஒரே கிலி, எங்கு அண்ணாவுக்கு ஏதாவது நேர்ந்து விடுமோ என்ற பயம். ஆனால் நல்ல வேளையாக, மிரட்டலுக்குப் பயந்து அந்த யுவன், "தயை செய்து என்னை விடுங்கள். நான் சொல்வதைக்கேட்டு அதன்பின் பாவது இதைவிட்டுப்போங்கள். வீணாக எதற்காக நீங்கள் கஷ்டப் படவேண்டும்?" என்றான் பிரயாசையுடன். அண்ணா தன் பிடியை தளர்த்ியதும், அவன் எங்களை அந்த ஸ்திரீ இருந்த அறைக்கு அழைத்துச்சென்றான்.

அன்று நாங்கள் பார்த்த பொழுது இருந்தபடியே அவள் இன்றும் ஒரு குழந்தையுடன் காட்சி அளித்தாள். அக்குழந்தையின் தோற்றம் பக்கத்திலிருந்து பார்த்தால் எவரையும் பயத்தால் நடுங்கச் செய்யும்படி இருந்தது. அதைப்பார்க்க சகியாமல் நாங்கள் கண்களை மூடிக்கொண்டோம். அவ்விளைஞன் அண்ணாவைப் பார்த்து, "நான் சொன்னபொழுது கோபித்துக்கொண்டீர்களே, இப்பொழுது உங்களால் என்ன உபகாரம் செய்யமுடியும் பாருங்கள்!" என்றான். நாங்கள் கண்களைத் திறந்தபொழுது அவனும் அவன் மனைவியும் பொலபொல வென்று கண்ணீர் உகுத்துக்கொண்டிருந்தார்கள்.

"இதற்கு என்ன அர்த்தம்? நீங்கள் இந்தக் குழந்தையை உயிருடன் வதைத்து அதன் மாமிசத்தை சாப்பிடுகிறீர்கள் என்றல்லவா நினைத்தோம்? ஏன் இப்படி துக்கப்படுகிறீர்கள்?" என்று ஆச்சரியப்பட்டான் அண்ணா.

"ஐயோ, இது என்ன, குழந்தையைக்கொன்று தின்கிறோமா?" என்று கதறினாள் அந்த ஸ்திரீ. அவள் கணவனும் ஆச்சரியத்துடன் அண்ணாவை ஏறிட்டுப் பார்த்தான். "ஸார், எங்கள் வரலாற்றைக் கேட்கும் வரை நீங்கள் இப்படித்தான் பேசுவீர்கள்" என்று கூறி விம்மலுக்கிடையே கதையை ஆரம்பித்தான். நாங்களும் அசையாமல் அதைக் கேட்க ஆரம்பித்தோம்.

"நாங்கள் இந்த வீட்டுக்கு குடி வருவதற்கு இரண்டுநாள் முன் எங்கள் ஊரில் உள்ளமிருககாட்சி சாலையைப் பார்க்கச் சென்றிருந்தோம். ஒவ்வொரு மிருகமாக எங்கள் குழந்தைக்குக் காட்டிக் கொண்டே வரும்பொழுது அதுவும் சந்தோஷமாக அவைகளைப் பார்த்து தன்மழலை மொழிகளில் எதை எதையோ சொல்லி சிரித்தது. பாவம்! மறு நிமஷத்தில் அதன்கதி இப்படி ஆகும் என்று யாராவது எதிர் பார்த்திருப்பார்களா?

"குழந்தை ஒரு புலிக்கூட்டை சுட்டிக்காட்டி அங்கே தன்னை அழைத்துப்போகச் சொல்லிற்று. நான் அதை எடுத்துக்கொண்டு கூட்டிற்குமுன் போய் நின்றேன். எங்களைகண்ட புலி கோபத்தால் உறுமிற்று. குழந்தைக்கு அது வெகுவேடிக்கையாக இருந்திருக்க வேண்டும். அது கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு சிரித்தது. எனக்கும் குஷி கிளம்பிவிட்டது. குழந்தையை சற்று உயர்த்தி, புலிக் கூண்டிடம் நீட்டிப் பிடித்துக் கொண்டு அதற்கு வேடிக்கை காட்ட எண்ணினேன்......" இந்த இடத்தில் அவன் தொண்டை துக்கத்தால் அடைத்துக் கொண்டது. பேச்சை நிறுத்தி 'ஹோ' வென்று அழுதுவிட்டான். அவன் மனைவியும் அழுது விட்டாள். எங்கள் கண்களும் கலங்கியது. அண்ணா அவர்களைத்தேற்றி, மேலே கதையை சொல்லும்படி கேட்டுக் கொண்டான்.

"நான் குழந்தையை தூக்கிப் பிடித்ததுதான் தாமதம், புலி உள்ளே இருந்து தாவி கூட்டின் கம்பிகளுடே கையை விட்டு என் கண்மணியை கீழே இழுத்துப் போட்டுவிட்டது. குழந்தை கம்பி வழியாக உள்ளே செல்லாததால், அப்படியே வெளியே விழுந்து மூர்ச்சை அடைந்தது. அப்புலி அறைந்த அறையில் குழந்தையின் முகம் சின்னா பின்னமாக அறுத்திருந்தது. ரத்தம் பிரவாகமெடுத்து ஓடியது. ஆ! அந்த சமயத்தை நினைத்தால் எனக்கு இன்றைக்கும் மனம் பதறுகிறது. ஆனால் அன்று எப்படித்தான் எங்களுக்கு அவ்வளவு தைரியம் வந்ததோ? கீழே மூர்ச்சையடைந்து விழுந்த குழந்தையை வாரி எடுத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு வேகமாக வெளியே வந்தோம். நல்ல வேளையாக ஒருவரும் எங்களைப்பார்க்கவில்லை. நன்றாக அஸ்தமித்தும் விட்டது. யாராவது எங்களைப் பார்த்திருந்தால், நான் செய்த தவறுக்கு கட்டாயம் போலீஸில் எங்களைப் பிடித்துக் கொடுத்திருப்பார்கள். புலிக் கூண்டின் பக்கத்தில் அணுகக்கூடாது என்று தானே பக்கத்தில் வேலி போட்டிருக்கிறார்கள்? நான் என் குழந்தையை வேலிக்கு மேல் மூடத்தனமாக தூக்கியதனால்தானே இந்த சம்பவம் நேர்ந்தது. சட்டத்தை தவறியதனால் போலீஸ் என்னை பிடிப்பது நியாயம்தானே?

"நேராக எங்கள் வீட்டிற்கு வந்து முதன் முதலாக குழந்தையை விளக்குவெளிச்சத்தில் பார்த்தோம். குழந்தையின் கண்களுக்கு கீழே உள்ள பாகத்தை அப்படியே அந்த புலி பிய்த்து எடுத்துக் கொண்டிருந்தது. அந்த அலங்கோலத்தைக் கண்டு நாங்கள் இருவரும் வெகுநேரம் அழுதோம். குழந்தை வெறும் மயக்கத்தில் இருந்ததே தவிர, அதன் உயிர் போயிருக்கவில்லை.

"சிறிது நேரம் அழுத எங்களுக்கு யாராவது வந்து எங்களைப் பிடித்துக் கொள்வார்களோ என்ற பயம் மறுபடியும் பிடித்துக் கொண்டது. மூர்ச்சை அடைந்த அக்குழந்தையை ஒளித்து ஒரு கூடையில் போட்டுக் கொண்டு யாரும் அறியாத படி இந்த வீட்டிற்குவந்து சேர்ந்தோம். குழந்தை அன்றையிலிருந்து நான்குநாள் முன் வரை கண்ணை திறக்கவே இல்லை. டாக்டரை அழைத்தால் அவர் எங்களை கேள்வி கேட்டு போலீஸிடம்

கொடுத்து விடுவாரோ என்று பயந்து நாங்களும் ஒருவருடனும் பேசாமல் இங்கு ஒளிந்து கொண்டிருக்கிறோம்.

“முதன் முதலில் நான்கு நாள் முன்புதான் குழந்தை மயக்கத்திலிருந்து விழித்துக்கொண்டது. அதுமுதல் ஒரே கதறலாகக் கதறியது. ஆகாரம் ஒன்றும் அதற்குப் பிக்கவில்லை. மறுபடி சிறிது நேரத்தில் அப்படியே நினைவிழந்துகிடந்து விட்டது. அதன் பின் இன்றுதான் விழித்துக் கொண்டிருக்கிறது. எங்கள் இருவருக்கும் பயம் ஒரு பக்கம், அக்குழந்தை படும் அவஸ்தையைக் கண்டால் அதை டாக்டரிடம் காட்டவேண்டும் என்ற ஆசை ஒருபக்கம். ஆனால் பயம்தான் முன்னால் வந்து நின்றது. அதுபடும் கஷ்டத்தைக் கண்டால், உயிருடன் இருப்பதைக் காட்டிலும் மெள்ள அதைக் கொன்றுவிட்டால் இந்த அவஸ்தையிலிருந்து காப்பாற்றலாம் என்று நினைத்தோம். ஐயோ, ஆனால் அந்த இரு விழிகளையும் கண்டால் எங்களுக்கு இந்தக் காரியத்தைச் செய்ய மனம் வரவில்லையே! ஐயோ, இனி என்ன செய்வது? என் மூட புத்தியை என்ன சொல்வது? என் சொந்த உயிரை அல்லவா நான் பெரிதாகக் கருதி விட்டேன்? என் குழந்தையின் நிலையை அன்றே டாக்டரிடம் காட்டியிருந்தால், அவர் எப்படியாவது குணப்படுத்தியிருப்பார். இவ்வளவிற்கு வந்த பின் இனி என்ன செய்வது? அதைக் கொல்வதா, இல்லை, எப்படியாவது பிழைப்பு மூட்டி இந்தப் பயங்கர ரூபத்துடன் இந்த உலகில் காலம் தள்ள வைப்பதா? எனக்கு ஒன்றும் புலப்பட வில்லையே! என் மனைவியின் பெற்ற மனம் படும் பாட்டை நான் எப்படித் தேற்றுவேன்? குழந்தையை குற்றுயிராக்கி விட்டேனே? என் சிறு பிழைதானே இதற்கெல்லாம் காரணம்? இன்னும் எனக்கு என் உயிரைதானே காப்பாற்றிக் கொள்ளத் தோன்றுகிறது? ஐயோ, என்ன மதியீனம்! என்ன சுயநலப் பைத்தியம்!”

இளைஞன் கதையை முடித்தான். என் கண்களில் தாரை தாரையாக நீர் வழிந்து ஓடுவதை உணர்ந்தேன், மெள்ள அண்ணாவைப் பார்த்தேன். அவன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

“நாங்கள் குழந்தையைக் கொன்று தின்கிறோம் என்று ஏன் நினைத்தீர்கள்?” என்றான் அவ்வாலிபன். நானும், அண்ணாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். நாங்கள் அனாவசியமாக அப்படிச் சந்தேகித்தது எங்களுக்கே எப்படியோ இருந்தது. நாங்கள் அன்று துவாரத்தின் வழியாகக் கண்ட காட்சியை அவர்களுக்குச் சொல்லி, ஜனங்கள் அவர்களைப்பற்றி சந்தேகிப்பதையும் எடுத்துக் கூறினான், அண்ணா.

“குழந்தையின் வலி குறைவதற்காக அதன் புண்ணில் ஊத அல்லவா செய்தோம்?” என்றாள் அந்த ஸ்திரீ.

“இனி மூடத்தனமாக எதற்கும் பயப்படாதீர்கள், முதலில் ஒரு டாக்டரை அழைத்து வந்து குழந்தையைக் காட்டுங்கள். அவர் எல்லாம் வேண்டியதுபோல செய்து கொள்வார்.” என்று கூறினான் அண்ணா.

அவ்வளவு நேரம் கதறிக் கொண்டிருந்த குழந்தை திடீர் என்று குரலை நிறுத்தியது. நாங்கள் அதன் பக்கத்தில் சென்று பார்த்தோம். அதன் அழகிய இரண்டு கண்களும் திறந்தபடியே இருந்தன. அவ்வளவு நேரம் துடித்துக்கொண்டிருந்த அந்த சிறு ஜீவன் அதன் அலங்கோலமான கூட்டிலிருந்து விடுபட்டு விட்டது!—கடவுள் காட்டிய வழி அதுதான்!

பெரிய துப்பறிபவர்கள்போல கர்வத்துடன் மூன்றும் வீட்டிற்குச் சென்ற நாங்கள், சொல்ல முடியாத மனோ வேதனையுடன் வீடு திரும்பினோம்.

சத்வைத்யசாலை நஞ்சன்கூடு

“நஞ்சன்கூடு பல்பொடி”

பாகடெரியின் சிறந்த மருந்துகள்

I. D. L.

குழந்தைகளுக்கு:
12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை

குடும்ப அவசியங்கள்:
99 ஜ்வரேக் எல்லா ஜ்வரங்களுக்கும்
77 காலரெக்ஸ் அஜீர்ண பேதிக்கும், விஷபேதிக்கும் (காலரா)
23 பெமிரோ (பெயின் பாம்) தலைவலி, வாயுபிடிப்பு .....
61 நஞ்சன்கூடு பல்பொடி நீ. ஊ. பல் உபாதைகளையும் கண்டிக்க

தினஉதவிகள்:
78 கூலெக்ஸ் உஷ்ண சமன தைலம்
55 ஜிஞ்சிப் அஜீரண, பித்த சமனி.
மற்ற மருந்து ஜாபிதாவிற்கு எழுதவும்

ஸோல் ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் வீதி. மதறஸ்

காலரா, அஜீர்ண பேதிக்கு, I. D. L. நெ. 77. காலரெக்ஸ் சிறந்த மருந்து ரூ. 1-8-0 தபாலில் அனுப்ப ரூ. 2-6-0 அனுப்பவும்.

காஷ்மீர்-குஸும் என்ற மலர் மூலிகையை கூந்தல் வளர்ச்சிக்கு எண்ணெயில் கலக்கவும்

M.P. & Co.'s ஸாண்டலக்ஸ் நறுமண சந்தனக் களிம்பு
தீப்புண், வெட்டு, சொறி பரு, புண்களுக்கு (கூடிவர உதவி)

M R ஜெட்டப்பா அவர்களின் பிரேமலீலா மைசூர் ஊதுவத்திகள்
எமார்ஜஸ், அகர், அம்பர்

ஏஜெண்ட்கள்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் வீதி. மதறஸ்.

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகளை உபயோகிக்கவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.



சென்ற மாதம் 13-ந்தேதியன்று புதிய டில்லியில் ஸ்ரீமான் பி. கே. நாராயணய்யரின் புதல்வி ஸ்ரீமதி அம்புஜம் மஸானிக் ஹாலில் வித்வான் செம்மங்குடி ஸ்ரீனிவாஸய்யர் அக்கிராசனத்தில் பரத நாட்டியம் செய்தார். உட்கார்ந்திருப்பதில் முதலாவது ஸ்ரீமதி நாராயணய்யர், ஸ்ரீமான் நாராயணய்யர், ஸ்ரீ செம்மங்குடி, நிற்பவர்கள் இடமிருந்து:—மிஸ் ருக்மணி, ஸ்ரீ சங்கரன். மிஸ் தாரா. கீழே இடது புறத்தில் உட்கார்ந்திருப்பது ஸ்ரீமதி அம்புஜம்.



நாமக்கல் கவிஞர் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளையின் மூத்த குமாரன் அமிர்தலிங்கத்துக்கும், கோவை ஸ்ரீ கோ. அ. லட்சுமணக் கவுண்டரின் மூத்த புதல்வி அலர்மேலுவுக்கும் சென்ற மாதம் 9-ந்தேதி கோவையில் திருமணம் நடைபெற்றது.



விழுப்புரம், எஸ். ஐ. ஆர். ஜில்லா என்ஜினியர்ஆபீஸ்ஹெட்டிராப்ட்ஸ்மென் ஸ்ரீ கே. ஆர். கோபாலன் பெண் ஸௌ. மங்களத்துக்கும், புதுக்கோட்டை ஸ்டேட் என்ஜினியர் ஆபீஸ் ஹெட் டிபாப்ட்ஸ்மென் ஸ்ரீ எ. கணபதி ஐயர் குமாரன் சிர. ஜி. ராமமூர்த்தி பி. ஏ-க்கும் சமீபத்தில் விவாஹம் நடைபெற்றது.

வீட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணெயில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1.	சம்பக் செண்ட் ரூ.	2-0.	8.	ரோஜா செண்ட் ரூ.	1-8.
2.	கியோரா ,,	2-0.	9.	சுரங்கி ,,	1-8.
3.	காஸ் ,,	2-0.	10.	வில்லி ,,	1-0.
4.	போகுல் ,,	1-8.	11.	லோடஸ் ,,	1-0.
5.	ஜாஸ்மின் ,,	1-8.	12.	ஆரஞ்சு ,,	1-0.
6.	கதம்பம் ,,	1-8.	13.	மோதியா ,,	1-0.
7.	ஹேனா ,,	1-8.	14.	கோலோன் ,,	1-0.

அரை அவுன்ஸ் புட்டிகளில். பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.

S. PAUL & Co., Perfumers, (Dept. S.W.) 4, Hospital St., **Calcutta 13.**

கதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் **விலை ரூ. 2-8-0**

தபாற் செலவு பிரத்யேகம்

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

ஸ்ரீ சாயிநாதய நம:

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	„ 1.
விவாக பொருத்தம்பார்க்க	„ 3.
ஆயுள் பலன் எழுத	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.

Quality always tells!
hence BUY **L.G ASAFOETIDA**

எல். ஜி பெருங்காயமே உயர்ந்தது



டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

(USE ALWAYS)
500. 1st. Quality Spade Clover Beedies. 500.
SPADE CLOVER BEEDI
M. MOHAMED OOMER. 37, MANADY ST. MADRAS.

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தர மான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடி களின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனர்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல புரொப்ரைட்டர்,
ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?
இதோ லக்ஷிமி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்.
40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ்.	லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்னான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினுலோ வேலையினுலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உப யோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்
அஷ்டாங்க ஆயுர்வேதசாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936.)

கலியாண வெகுமதிகளுக்கு
பல ஊர்
பட்டு & நூல்
ஜவுளி ரகங்கள் சாசமாய்
கிடைக்கும் இடம்

ராம விலாஸ்

S.N. ராமஸ்வாமி செட்டி & பிரதர்ஸ், கடை வீதி, சேலம்.

சக்தி ஆரூடம்!

சென்னை சர்க்கார் மீன் இலாகா, கெஜட்டபதவி உத்தியோகத்திலிருக்கும் Sri S. V. கணபதி (Hydrologist) 7-6-'48ல் எழுதுகிறார்:— "தங்கள் பலன்கள் ஆச்சரியமானவை. பலன்களில் மிகவும் திருப்தி."

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I.)



1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனா பஜார், சென்னை.



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

M. R. பார்த்தசாரதி ஐயங்கார்,

28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

45-வருஷமாக புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்

தங்க பஸ்பம்

ஒரே வேளையில் உங்களை பிரமிக்கச் செய்யும். இது ஒரு வரப்பிரசாதமான மருந்து. தேகபலமும் வாழ்வில் சந்துஷ்டியும் அளித்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து, நரம்புகளை வலுவாக்கி, வயோதிகனும் வாலிபனுடைய வலிமை பெற செய்கிறது. அனுபானம் பெரிய காமகேசரி லேகியத்துடன் 50 வேளை ரூ. 25.

வைத்தியபதி **R. M.** நாராயணசாமி பிள்ளை,
தன்வந்திரி வைத்தியசாலை, பழனி (S. I.)

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே, **'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'** என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப்படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்மந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன் பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணா 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
30, சாந்தோம், சென்னை 4.

குகன் சோப்புகள்

சுதேசி தயாரிப்பு சலவைக்கு மிகவும் சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S. I.

ப்ராங்கியல் - தகராறுகள் விடாத இருமல் & சுவாச கஷ்டங்களுக்கு உடனடியாக பெப்ஸ் அவசியம்

தொண்டை, சுவாசப்பை தகராறுகளை நிவர்த்திசெய்ய நல்ல ருசியுள்ள பெப்ஸ் சிறந்தது. பெப்ஸை மென்றவுடன் அதிலுள்ள மருந்துப் கிருமிநாச சத்துக்களும் சுவாசத்தின் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்கின்றன. பெப்ஸ் இருமலை நிறுத்தி தொண்டையை சமனமூட்டி கிருமிகளையும் கொன்று, சளியை தளரச்செய்து வீக்கத்தைக் குறைத்து கிருமிகளை நாசம் செய்யும்.

பெப்ஸ் மருந்துச் சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதைக் குறிக்கும் படம்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி, பி. டி., மதராஸ்.

PEPS

கிருமி நாச

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பயனளிக்கவல்ல நிவாரணி

மறுக்க முடியாத உண்மை!

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ். | 9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

அழகுத் தெய்வமான

மன்மதன் இளவேனில் ஓய்ந்ததும் பெண்மணிகள் கூந்தலைத் தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பர் மஹாகவி காளிதாஸர். எந்த அழகிய கூந்தல் தேவதைகள் கண்ணையும் கருத்தையும் பிணிக்குமோ, அக் கூந்தலை வருஷம் முழுவதும் எல்லாப் பருவங்களிலும் கேசவர்த்தினியின் உதவியால் பெறுங்கள். மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

இளமையும், அழகும் கூந்தலுக்குத் தந்து, கூந்தலை மனோஹரமாக்குவது கேசவர்த்தினி ஒன்றே.

முக அழகைக் கூந்தலினால் அழகுபடுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டு அழகுபடுத்திக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணா 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை, "ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட், பவர் ஹவுஸிற்கு அடுத்தது கோயமுத்தூர்.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

Regd. No. 2514.

அழகானவை

மனதைக்கவரும் நவீன மோஸ்தர் நகைகளே ஸூரஜ்மல்ஸ் கம்பெனியில் இருக்கின்றன. அவரவருக்குப் பிடித்தமான வித விதமான ரகமும், அழகும் பொருந்திய நகைகள்.

சிறந்த ரகம்

ஸூரஜ்மல்ஸ் உண்மையான சிறந்த ரகத்துக்கு பெயர் பெற்றவர்கள் : பொறுக்கி எடுத்த கற்களே நகைகளுக்கு அதிர்ஷ்ட மளிப்பவை. சுத்தமானதும், பிரகாசமுள்ளதும் உயர்ந்த ரகமுள்ளதுமான ரத்னங்களே உபயோகிக்கப்படுகின்றன.........................
அவற்றின் கட்டிடமும் வேலைப்பாடும் தேர்ச்சி பெற்ற நிபுணர்களால் வசதியான தொழிற் சாலையில் செய்யப்படுவதால் இந்த ஸூரஜ்மல்ஸ் நகைகள் நீங்கள் விரும்பிப் போற்றத்தக்கவை.

நேரடியான வியாபாரம் நன்மை தரும்.

நம்பிக்கையானவை

1895-ஆம் முதல் ஐம்பது வருஷங்களுக்கு மேலாக ஸூரஜ்மல்ஸ் நாடு முழுவதிலும் கியாதி பெற்றுள்ளனர். இப்புகழுக்கு இணையே கிடையாது. யாருக்கும் ஒரே விலை என்ற கொள்கை நாணயமான வியாபாரத்தின் அடையாளம். ஒவ்வொரு நகையுடனும் அவற்றின் உயர் ரகம், திருப்தியளிக்கும் தன்மைக்கு அவர்களது உத்தரவாதமும் கிடைக்கின்றது உங்கள் நண்பர்கள் கொடுக்கும் விலையே நீங்களும் கொடுக்கிறீர்கள். ஆகையால் நம்பிக்கையுடன் நீங்கள் நேரிலே தபால் மூலம் நகைகள் வாங்க முடியும்.

ஸூரஜ்மல்ஸ்

வைர வியாபாரிகள்

313, நேதாஜி ரோட் : : மதராஸ்.